DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H Selvanayagam, Broker
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
WHAT'S YOUR HOME WORTH?
FOR FREE HOME EVALUATION
Please Call me
Selva Karthigesu
Sales Representative
416-648-9757
www.selva-karthigesu.c21.ca

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices

25வது வெள்ளி விழா 2021

UTHAYAN
# உதயன்

$1.00
416-752-1524
www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1316 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday June 25, 2021



## ஒன்றாரியோ மாகாண முதல்வரின் வாசஸ்த்தலத்திற்கு முன்பாக கத்தியோடு காணப்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டார்

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்களின் வாசஸ்த்தலம் ரொறன்ரோ மாநகரில் உள்ளது. ஒன்றாரியோ மாகாணப் பொலிஸ் அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று 24 மணி நேரமும் அவருக்கு பாதுகாப்பு வழங்கி வருகின்ற வேளையில் அவரது வாசஸ்த்தலத்திற்கு முன்பாக கையில் கத்தியுடன் நடமாடிய நபர் ஒருவரை ஒன்றாரியோ மாகாணப் காவல்துறை அதிகாரிகள் கைது செய்துள்ளனர் என அறியப்படுகின்றது.

*(தொடர்ச்சி, உள்ளே 5ம் பக்கத்தில்)*

## பாகிஸ்த்தானில் பலாத்கார சம்பவங்கள் அதிகரிக்க பெண்கள் அணியும் உடைகளே காரணம் என்கிறார் பிரதமர் இம்ரான் கான்



பாகிஸ்த்தானில் பாலியல் பலாத்கார சம்பவங்கள் அதிகரிப்பதற்கு பெண்கள் அணியும் உடைகளே காரணம் என தெரிவித்துள்ள நாட்டின் பிரதமர் இம்ரான் கானின் கருத்து தொடர்பாக தெரிவிக்கப்பட்ட விமர்சனங்களில், இவ்வாறு பாலியல் பலாத்கார வழக்குகள் அதிகரிப்பதற்கு பெண்கள் எப்படி ஆடை அணிவார்கள் என்று தெரிவித்துள்ளது தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோது இம்ரான் கானின் இந்த கருத்து அறியாமையின் வெளிப்பாடு என்று கூறியுள்ளார்கள். *(தொடர்ச்சி, உள்ளே 16ம் பக்கத்தில்)*

**உதயன்**

**சிறு விளம்பரங்கள் 4ம் பக்கத்தில்**

Classified Advertisements On Page 4

'உதயன்' சிறு விளம்பரங்கள் மூலம் அதிக பயனடையுங்கள். குறைந்த கட்டணத்தில் நிறைந்த பலன்.

தற்போது புதுப் பொலிவுடன் 4ம் பக்கத்தில் பாருங்கள், படியுங்கள்.

## இரத்தினபுரி மாவட்டத்தில் மண்சரிவால் பாதிக்கப்பெற்ற 30 குடும்பங்களுக்கான உலர் உணவு பொருட்களை வழங்கிய ரொறன்ரோ மனித நேயக்குரல் அமைப்பு

(செய்தி 17ம் பக்கம்)

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
* North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

வெள்ளி விழா 25th ANNIVERSARY
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

எதிர்வரும் ஆகஸ்ட் ஆறாம் திகதி வெள்ளியன்று மலர்கிறது
'உதயன்' வெள்ளிவிழா ஆண்டுச் சிறப்பிதழ்

உங்கள் அபிமானத்திற்குரிய பத்திரிகையின் வெள்ளி விழா ஆண்டுச்சிறப்பிதழ் எதிர்வரும் 06-08-2021 வெள்ளிக்கிழமை வெளிவருகின்றது.

தமிழ் பேசும் நல்லுலக நாடுகளிலிருந்து சிறப்புக் கட்டுரைகள் இலக்கியப் படைப்புக்கள் வாழ்த்துச் செய்திகள் ஆகியவற்றோடும் அதிக பக்கங்களோடும் வாசகர்களையும் வர்த்தக அன்பர்களையும் எழுத்தாள நண்பர்களையும் மகிழ்விக்க மலர்கிறது.

சிறப்பிதழில் தங்கள் படைப்புக்கள் இடம்பெற விரும்பும் எழுத்தாளர்கள் கவிஞர்கள் வரவேற்கப்படுகின்றார்கள். தங்கள் வர்த்தக நிறுவனங்களின் விளம்பரங்களை பிரசுரித்து ஆதரவளிக்கவும் வாழ்த்தவும் விரும்பும் அன்பர்கள் தொடர்பு கொள்ளவும்.

416 732 1608 அல்லது 416 752 1524
மின்னஞ்சல்:- uthayannews@yahoo.com

# மன்னார் உயிலங்குளம் பொலிஸ் நிலையம் வைபவரீதியாக திறந்து வைப்பு



மன்னார் உயிலங்குளம் பகுதியில் அமைந்திருந்த பொலிஸ் காவல் அரண் பொலிஸ் நிலையமாக தரமுயர்த்தப்பட்டு நேற்று (23) மாலை 5 மணியளவில் மக்கள் பாவனைக்காக வைபவ ரீதியாக கையளிக்கப்பட்டுள்ளது.

பொது மக்களின் இலகு தன்மையை அடிப்படையாக கொண்டு நாடு முழுவது 197 புதிய பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியல் அட்மிரல் சரத்வீரசேகர தெரிவித்திருந்த நிலையில் மன்னார் உயிலங்குளம் காவலரண் பொலிஸ் நிலையமாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.





குறித்த நிகழ்வில் வடமாகாண சிரேஸ்ட பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்ம ரத்தின மற்றும் மன்னார் சிரேஸ்ர பொலிஸ் அத்தியட்சகர் பண்டுல வீர சிங்க ஆகியோர் இணைந்து வைபவரீதியாக பொலிஸ் நிலையத்தை திறந்து வைத்தனர்.

அதே நேரம் மன்னார் உயிலங்குளம் பகுதியில் வறுமை கோட்டிற்கு உட்பட்ட 20 குடும்பங்களுக்கு நிவாரண உதவி பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டது.

- மன்னார் நிருபர் (24-06-2021)

# அற்புதமான அறுவைச் சிகிச்சை நிபுணர் இளம்செழிய பல்லவன் மீண்டும் யாழ் சென்றார்



விவேகம் நிறைந்தவரும் அற்புதமான அறுவைச் சிகிச்சை நிபுணர் என்ற பெயரை இலங்கையில் மட்டுமல்ல உலகெங்கும் பெற்றவருமான வைத்தியர் இளம்செழிய பல்லவன் மீண்டும் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

மேற்படி அறுவைச் சிகிச்சை நிபுணர் வைத்தியர் இளம்செழிய பல்லவன் மீண்டும் யாழ் போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்றார். கடந்த செவ்வாய்க்கிழமை 22ம் திகதியே கொழும்புக்கு மாற்றப்படும் இடம்மாற்ற கடிதத்தைப் பெற்றார். எனினும் 24ம் திகதி வியாழக்கிழமை அந்த இடமாற்றம் இரத்து செய்யப்பெற்றது.

யாழ் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய போது கிளிநொச்சிப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் ஒரு கை துண்டாடப்பட்ட நிலையில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட ஒரு நபருக்கு பிளாஸ்டிக் சத்திர சகிச்சை செய்து வெற்றிகரமாக துண்டாடப்பட்ட கையை பொருத்தியவர் இவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

VACCINATE BRAMPTON
GET YOUR SHOT TODAY!

உதயன் கதிரோட்டம்

# தலையைக் கவிழ்ந்தபடி தனது பிறந்த நாளை கொண்டாட முடியாதுத் தவிக்கும் கனடிய தேசம்

கனடா என்னும் தேசம் குளிர் நிறைந்த ஒரு நாடு என்று அறியப்பட்டாலும் அந்த நாட்டில் நாம் காலடி எடுத்துவைத்தால் எமது மனங் குளிரும் வண்ணம், அந்த தேசத்தின் அரசின் பிரதிநிதிகளே எம்மை விமான நிலையத்தில் வரவேற்று உபசரிப்பார்கள் என்ற கணிப்பு பல்லாண்டு காலமாய் அழியாத ஒரு கருத்தோவியமாக காட்சி அளித்து வந்தது.

"உலகில் எந்த நாட்டில் பிறந்து வளர்ந்தாலும், அங்கு இனரீதியாகவோ, மொழியைக் காரணமாகக் கொண்டோ, அல்லது பின்பற்றும் மதம் சார்ந்த எதிர்ப்புணர்வு காரணமாகவோ அல்லது வேறு எந்த காரணத்தினாலோ அங்கு வாழ முடியாத ஒரு அபாயகரமான சூழ்நிலை உங்களில் யாருக்காவது ஏற்படுமானால், நீங்கள் கனடாவிற்கு வாருங்கள். எமது நாட்டு விமான நிலையங்களின் வாசல்கள், உங்கள் வருகைக்காக இருபத்தி நான்கு மணிநேரமும் திறந்திருக்கின்றன'' என்ற அரச அறிவிப்பு கூட கனடிய அரசியல் பீடத்திலிருந்து வெளியிடப்பட்டன.

சில வருடங்களுக்கு முன்னர் சிரிய தேசத்திலிருந்து அங்கு வாழ முடியாமல் உயிர்களைக் கையில் பிடித்துக் கொண்டு, கனடிய தேசத்து மக்களின் அழைப்புக் கிடைத்து இங்குள்ள விமான நிலையங்களில் வந்திறங்கிய சிரிய தேசத்தின் அகதிக் குடும்பங்களை வரவேற்பதற்காய் விமான நிலையத்திற்கு நேரடியாகவே தனது துணைவியாரோடு சென்று வரவேற்று பரிசுப் பொருட்கள் வழங்கி ஆறுதல் வார்த்தைகளை அள்ளி வழங்கியவர் கனடாவின் தற்போதைய பிரதமர் கௌரவ ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் ஆவார்.

இவ்வாறு, கனடாவின் கருணை உள்ளத்தையும் காருண்ய பண்புகளையும் படம் பிடித்துக் காட்டுவதற்கு ஏராளமான 'கதைகள்' இருக்கின்றன. இந்த புண்ணிய பூமியின் மீது ஒரு அகதியின் பாதங்கள் எப்போது படுகின்றனவோ அன்றிலிருந்து அந்த நபர் தனது துயரங்களையெல்லாம் மறந்து, புதுவாழ்க்கையைப் பெற்றிடுவார் என்ற நம்பிக்கை இன்றும் உலகெங்கும் தளிர்விட்ட வண்ணமே உள்ளது.

ஆனால் கடந்த சில மாதங்களாக கனடா தேசமெங்கும் கிளர்ந்தெழுந்து நிற்கும் இந்நாட்டின் பழங்குடியினர் தொடர்பான திகைப்பையூட்டும் செய்திகள் கனடாவின் கனிவு பற்றிய பிரச்சாரங்களையெல்லாம் காற்றில் பறக்கவிட்டது போன்று ஆக்கிவிட்டன. கனடா என்னும் தேசத்தில் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்து இந்த நாட்டை காத்து நின்ற அந்த 'குடியினர்' தங்கள் குழந்தைகளுக்கு நடந்த 'கொரூரங்கள்' பற்றிய செய்திகளை ஏக்கத்தோடும் கடுங் கோபத்தோடும் வெளிப்படுத்துகின்ற செய்திகள் எழுத்திலும் காட்சிகளிலும் வருகின்றபோது, கனடாவின் அரசியல் தலைவர்களே திகைத்தவர்களாக தடுமாறும் நிலை தோன்றியுள்ளதை நன்கு காணக்கூடியதாக உள்ளது.

ஆமாம் நண்பர்களே! சில நூறு ஆண்டுகளுக்கு முன்பு கனடாவின் வெள்ளை இன பாதிரிகள் நடத்திய கிறிஸ்தவ பாடசாலைகளிலே கல்வி கற்று வந்த கனடாவின் பழங்குடியினர் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள், சிறுவர் சிறுமியர் என ஆயிரக் கணக்கானவர்களை கொலை செய்து புதைத்த கொடியவர்களின் பாதகச் செயல்களுக்கு அடையாளமாக அநியாயமாக பழி வாங்கப்பட்ட அந்த குழந்தைகளின் உடல் எச்சங்கள் ஒரே இடத்திலும் பல இடங்களில் பரவியும் உள்ளதை கண்டுபிடித்த அந்த மக்கள் பதறுவதை காட்சிகளாகப் பார்க்கிறது இந்த உலகம். இப்போது உள்ள பழங்குடியினர் சார்ந்த சமூகத்தின் தலைவர்களும் அவர்கள் சார்ந்தவர்களும் ஒரு போர்க்குற்றத்தைப் போன்ற ஒரு பாரிய இன அழிப்பைச் செய்த குற்றவாளிகளை யார் என்று கண்டு பிடிக்க கனடிய அரசாங்கம் தனது வளங்களைப் பிரயோகிக்க வேண்டும். நிதியைச் செலவு செய்ய வேண்டும் என்று போராடத் தொடங்கியுள்ளார்கள்.

தேடுதல் நடவடிக்கைகளின் போது கண்டு பிடிக்கப்பட்ட உடல் எச்சங்கள் மற்றும் எலும்புக் கூடுகள் போன்றவை அடையாளப் பொருட்களாக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

முதலில் கனடாவின் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தில் கண்டு பிடிக்கப்பட்ட இந்த கொலைக் குற்றத்தின் அடையாளங்களைப் போன்று வேறு சில மாகாணங்களிலும் நிச்சயமாக இருக்க வேண்டும் என்பதற்காக ஆங்காங்கே இயங்கிவரும் பழங்குடியினர் சார்ந்த அமைப்புக்கள் மற்றும் அவற்றின் தலைவர்கள் என கனடாவின் 'பழங்குடியினர்' தங்கள் ஒற்றுமையை அடையாளமாகக் கொண்டு போராடத் தொடங்கியுள்ளார்கள்.

இதனால் கனடாவின் பிரதமர், மற்றும் அவர் தலைமையிலான அரசாங்கம் மற்றும் அமைச்சர் என அனைவருமே எதிர்க்கட்சியினரின் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாமல் தடுமாறுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறான நேரத்தில் தான் கனடாவின் பிறந்த நாள் நெருங்கி வருகின்றது. அடுத்த வாரத்தில் வரும் யூலை மாதம் முதலாம் திகதியன்று **Canada Day** என்று மகிழ்ச்சியோடு கொண்டாடப்படுகின்ற கனடாவின் பிறந்த தினம் இவ்வருடம் மௌனிக்கப் போகின்றது என்பது வெளிச்சமாகத் தெரிகின்றது. கனடாவின் பல நகர சபைகள் தாங்கள் வருடா வருடம கொண்டாடுகின்ற இந்த பிறந்த நாளை இவ்வருடம் கொண்டாடும் சாதகமான நிலை இல்லை என்று அறிவித்துள்ளன.

ஒரு இன மக்கள் தங்கள் உறவுகளின் அநியாயப் படுகொலைகளை எண்ணி அழுது கொண்டிருக்கின்போது, நாம் எப்படி கனடாவின் பிறந்த நாளை கொண்டாடுவது என்ற கேள்விகளோடு இருக்கம் கனடியர்களுக்காக, யூலை முதலாம் திகதி இன்னும் சில நாட்களில் பிறக்கப்போகின்றது. பழங்குடியினர் அனுபவிக்கும் சோகத்தை எமது ஈழத் தமிழர்கள் நிச்சயமாக புரிந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு இவ்வாரக் கதிரோட்டத்தை கனடியப் பழங்குடியினர் என்ற அந்த சமூகத்திற்காக சமர்ப்பிப்போமாக!

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com


# ஸ்காபுறோ வைத்தியசாலைகளுக்கான நிதிசேகரிக்கும் முயற்சியாக நடத்தப்பெற்ற ரேடியோதோன் நிகழ்ச்சியின் மூலம் 275,000 டாலர்கள் சேகரிக்கப்பெற்றன




ஸ்காபுறோவில் **Scarborough Health NetWork** என்ற பெயரோடு இயங்கும் வைத்தியசாலைகளுக்கான நிதிசேகரிக்கும் முயற்சியாக கடந்த வாரம் நடத்தப்பெற்ற ரேடியோதோன் நிகழ்ச்சியின் மூலம் 275,000 டாலர்கள் சேகரிக்கப்பெற்றன என்பதை கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

ஸ்காபுறோவில் வெற்றிகரமாக இயங்கிவரும் **East FM** 102.7 பண்பலை வானொலியின் ஊடாக நடத்தப்பெற்ற மேற்படி ரேடியோதோன் நிகழ்ச்சிக்கு சில வர்த்தக அன்பர்கள் ஆதரவு வழங்கியிருந்தார்கள்.

இங்கே காணப்படும் படத்தில் ரேடியோதோன் நிகழ்ச்சியின் மூலம் சேகரிக்கப்பெற்ற 275,000 கனடிய டாலர்கள் தொகைக்கான மாதிரிக் காசோலையை கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் சார்பில் அதன் தலைவர் திரு சாந்தா பஞ்சலிங்கமும், **FM** 102.7 பண்பலை வானொலியின் சார்பாக அதன் தலைவர் திரு நடா ராஜகுமாரும் வைத்தியசாலையின் பிரதிநிதி திருமதி கிறிஸ்ணியிடம் கையளிப்பதைக் காணலாம்.



# இனவழிப்பின் சாட்சிகளாக ஈழக் கைம்பெண்கள்!

**தீபச்செல்வன்**

போரும் வன்முறையும் எப்போதும் பெண்களையே பாதிக்கின்றது. மிகப் பெரும் ஒடுக்குமுறை என்பது பெண்களை சூழவே நிகழ்கிறது. பெண்தான் எல்லாவற்றுக்குமான விலையை கொடுக்கிறாள். பெண்களை வேட்டையானடினால் ஒரு இனம் அழித்துவிடும் என ஆக்கிரமிப்பாளர்கள் கருதுகின்றனர். உலகில் பெண்கள் எண்ணற்ற துயரங்களுக்கு முகம் கொடுக்கிறார்கள். அதில் ஒன்றுதான் கணவன், அல்லது துணையை இழக்கும் கொடூரமான வாழ்க்கை காலத்தை சந்தித்தல் ஆகும்.

உலகில் கணவனை இழந்த கைம்பெண்களின் பிரச்சினைகளை குறித்து கவனத்தை ஏற்படுத்தும் முகமாக ஐக்கிய நாடுகள் சபையினால் ஜூன் 23 உலக விதவைகள் தினமாக 2010இல் பிரகடனம் செய்யப்பட்டது. உலகில் போர், பஞ்சம், வன்முறை, அசாதாரண நிலமைகள் காரணமாக கோடிக்கணக்கான பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளதாக உலக புள்ளி விபரங்களில் தெரிவிக்கப் பட்டுள்ளது. கோடிக்கணக்கான உலக விதவைகளில் சுமார் 90ஆயிரம் ஈழ விதவைகளும் உள்ளடங்குகின்றனர் என்பது இன்னொரு அதிர்ச்சியான புள்ளிவிபரமாகும்.

உலகில் சுமார் 260 மில்லியன் பெண்கள் விதவைகளாக வாழ்கின்றனர். அவர்களில் 115 மில்லியன் விதவைகள் வறுமையின் பிடியில் உள்ளனர். 85 மில்லியன் விதவைகள் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். 1.5 மில்லியன் விதவைகள் குழந்தைகளுடன் வாழ்வதாகவும் புள்ளி விபரங்கள் குறிப்பிடுகின்றன. விதவை என்ற அடையாளம் பெண்களை சமூகத்தில் பின் தள்ளுவதுடன் அவர்களை இருண்ட தனி வாழ்வுக்குள் வீழ்த்துகிறது. கணவனை இழந்த பெண் விதவை என்ற அடையாளத்துடன் தன் வாழ்வை முடிவுக்கு கொண்டு வரும் நிலைக்கு நிர்பந்திக்கப்படுகிறாள்.

இலங்கையில் நடைபெற்ற போர், மற்றும் இன அழிப்புச் செயற்பாடுகள் காரணமாக சுமார் 90ஆயிரம் பேர் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். கிழக்கில் சுமார் 49ஆயிரம் விதவைகளும் வடக்கில் சுமார் 40ஆயிரம் விதவைகளும் போரினால் விதவைகளாக்கப்பட்டுள்ளதாக இலங்கை அரசின் புள்ளி விபரங்கள் குறிப்பிடுகின்றன. போர் விதவைளில் 12ஆயிரம் பேர் நாற்பது வயதை அண்மித்தவர்கள் என்றும் 8000ஆயிரம் பேருக்கு மூன்று வயதுப் பிள்ளைகள் இருக்கின்றன என்றும் மகளீர் விவகார அமைச்சின் புள்ளி விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போரில் அதிகம் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்திலேயே அதிகளவு ஆண்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் அங்குதான் அதிகளவில் விதவைகள் இருப்பதாகவும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது. போரினால் விதவைகளாக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வியல் நிலமை என்பது மிகவும் துயரமாகவும் போராட்டம் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது. போரில் விதவைகளாகப்பட்ட பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை என்றும் ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிடுகிறது.

முல்லைத்தீவுயில் அதிகளவான ஆண்கள் கொல்லப்பட்டு, அங்கே விதவைகள் அதிகரித்துள்ளனர் என்று ஐ.நா சொல்கின்ற விபரம்தான், அங்கே நடந்த மிகப் பெரிய இனவழிப்பையும் எடுத்துரைக்கின்றது. ஒரு உண்மையை ஏற்கும் ஐ.நா இன்னொரு உண்மையை இன்னும் ஏற்காமல் இருப்பதனால்தான் ஈழத்தில் விதவைகள் இன்னமும் மீள முடியாத நிலையில், நீதிமறுக்கப்பட்ட இருண்ட பக்கத்தில் வாழ்கின்றனர்.

90 குடும்பங்கள் விதவைகளாக்கப்பட்ட நிலையில் சில குடும்பங்களில் முழு உறுப்பினர்களும் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். இங்கு மூன்று தலைமுறைப் பெண்களும் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். ஒரு குடும்பம் முழுமையாக ஆண் உறுப்பினர்களை இழந்துள்ளது. இத்தகைய அதிர்ச்சிகரமான இழப்புக்களும் ஈழத்தில் நடந்துள்ளன. போர் வலயத்தில் கொல்லப்பட்டதுடன் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சுட்டுக்கொல்லப்பட்டும் பலர் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளனர்.

வடகிழக்கில் உள்ள விதவைகளில் பெரும்பாலானவர்கள் வாழ்வாதாரத் தொழிலற்ற நிலையில் வாழ்கிறார்கள். தமது பிள்ளைகளை கல்வி கற்கச் செய்வதற்கும் அன்றாடம் உண்ணுவதற்குமே அவர்கள் பெரும்பாடு படுகின்றனர். விதவைகளாகவும் அங்கவீனர்களாகவும் பலர் வாழ்கின்றனர். இவர்களுக்கு சுய தொழிலை ஊக்குவிக்கும் திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதில்லை. சுய தொழிலை உரிய வகையில் மேற்கொண்டு அவர்களை வழிப்படுத்த வேண்டும்.

வடக்கு கிழக்கில் அதிகளவான பெண்கள் விதவைகளாக்கப் பட்டுள்ளதாகவும் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் வாழ்கிறார்கள் என்றும் இலங்கையின் மகளீர் விவகார அமைச்சர் சாந்தி பண்டாரவிடம் அல் யசீரா நிருபர் கேட்டபோது, அந்தப் பிரச்சினையின் கொடுமையை புரியாதவராய் பேசினார் சாந்தினி பண்டார. ஒரு மகளீர் விவகார அமைச்சர் வடகிழக்குப் பெண்கள் தொடர்பில் எத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளுகிறார் என்பதையும் வடகிழக்குப் பெண்கள் எதனால் விதவைகளாக்கப்பட்டனர் என்பதையும் இந்த அணுகுமுறை வெளிக்காட்டுகிறது.

இராணுவத்தில் கணவனை இழந்த சிங்கள விதவைப் பெண்களுக்கு அரசாங்கம் வழங்கும் சலுகைகளைவிட தமிழ் விதவைப் பெண்களுக்கு கிடைக்கும் சலுகைகள் மிகவும் குறைவு என்று அல் ஜசீரா தன்னுடைய போரின் விதவைகள் என்ற ஆவணப்படத்தில் சுட்டிக்காட்டியது. தமிழ் இனத்தை இலங்கை அரசு சமமாக நடத்தாமையின் அவர்களுக்குரிய உரிமைகளை சமமாக பகிராமையின் வெளிப்பாடே இது. தன்னுடைய நடவடிக்கை காரணமாக விதவைகளாக்கப்பட்ட தமிழ் பெண்களின் நிலையில் இலங்கை அரசு அக்கறை செலுத்தாதிருப்பது இன வேறுபாட்டை காட்டும் அதன் செயற்பாடே.

தமிழ் மக்கள் இலங்கைத் தீவில் சிறுபான்மையின மக்களாக வாழும் நிலையில் இலங்கைத் தீவில் உள்ள விதவைகளில் பெரும்பான்மையாக வடகிழக்கு தமிழ் பெண்கள் இருக்கிறார்கள். சிறுபான்மையினத்தில் பெரும்பான்மையானவர் விதவைகளாக்கப்பட்டிருப்பது ஏன்? பெண்களை விதவைகளாக்குவதன் ஊடாக ஒரு இனத்தின் விருத்தியை பாதிப்பதற்காக இந்த உத்தி மேற்கொள்ளப்பட்டதா? உலகில் விதவைகளின் பிரச்சினையை தீர்க்க அந்த சமூகத்தை பால் சமத்துவம் உள்ள சமூகமாக மாற்றுவதே வழி என்று பெண்ணியவாதிகள் குறிப்பிடுகிறார்கள். பெண்கள் விதவைகளாக இருப்பது ஒரு சமூகத்தை முடங்கச் செய்யும் செயல் என்றும் குறிப்பிடப்படுகிறது. ஈழத்தில் விதவைகளாக்கப்பட்டவர்களில் வெகு சிலரே மறுமணம் செய்துள்ளனர்.

ஒரு இன அழிப்பை சந்தித்த ஈழம் தமது விதவைப் பெண்களை மறுமணம் செய்ய வைப்பதில்தான் இன விருத்தி தங்கியிருக்கிறது. வாழ்வியல், பொருளாதாரப் பிரச்சினைகள் உள்ளிட்டவையும் தீரக்கும் வாய்ப்புக்கள் ஏற்படும். ஈழ விதவைகளின் பிரச்சினை தீரக்கப்படுவதில் சமூகத்தின் புதிய அணுகுமுறைகளும் சமூக நோக்கமும் அவசியமானது. எல்லாவற்றுக்கும் அடிப்படையானது இனவழிப்பு நீதிதான். இனவழிப்பின் நீதியில் இருந்துதான் ஈழத் தமிழ் மக்களுக்கான விடிவும், ஈழப் பெண்களுக்கான விடிவும், ஈழக் கைம்பெண்களுக்கான விடிவும் தங்கியிருக்கிறது.


## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

உதயனில் விளம்பரங்கள் இதயத்தில் பதிந்த ஓவியங்கள் அனேக வாசகர்களின் அபிமானத்தைப் பெற்ற பத்திரிகை உதயன்

**LOYAL PEST CONTROL**
Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.

Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice
RANJAN: (416) 464-2415

**COMPUTER REPAIR**
Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.
VARUNAN: (416) 894-6244

**TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE**
All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss
முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்
Tel: (416) 754-4024
Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA

3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

**வேலைக்கு ஆட்கள் தேவை**
East end restaurant ஒன்றிற்கு முழு நேர வேலை ஆட்கள் உடனடியாக தேவை. Wednesday to Sunday. தங்குமிடம், உணவு, மற்றும் ஞாயிற்றுக்கிழமை இரவு அல்லது திங்கள் காலை drop off வசதிகள் வழங்கப்படும்.
Wages details will be discussed with the interested candidate.
Call: (416) 294-7887
for further details.

**Italian உணவகத்திற்கு Cook தேவை**
ரொறன்ரோ நகரில் Church / Wellesley சந்திப்புக்கு அருகில் உள்ள Italian உணவகம் ஒன்றுக்கு உடனடியாக Cook ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு: (416) 409-9450 அல்லது (416) 414-2241

**உடனடி வேலை வாய்ப்பு**
Scarborough வில் Markham & Ellesmere க்கு அருகில் Warehouse Workers and Forklift Driver தேவைப்படுகின்றனர்.
Full-time -- Morning Shifts
· Looking for Skid Workers and Forklift Driver to add to our team.
· We are looking for hard-working and dedicated people for a long.
தொடர்புகளுக்கு: ESSAN (647) 993-2872

**அலுவலக வேலை வாய்ப்பு**
ஸ்காபுறோவில் அமைந்துள்ள சிறிய அலுவலகம் ஒன்றுக்கு பகுதி நேர அலுவலக உதவியாளர் உடனடியாகத் தேவை. போதிய ஆங்கில அறிவு, கொம்பியூட்டரில் வேலை செய்த அனுபவம் மற்றும் அடிப்படை Book Keeping அனுபவம் ஆகியன அவசியம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 416 732 1608

கனடிய செய்திகள்
Canadian News

# கனடா ஒன்றாரியோ மாகாண அரசில் அமைச்சர்களாக பதவியேற்றுள்ள இந்திய வம்சாவழி கனேடியர்கள்



கனடாவில் முதல்வர் டக் போர்ட் தலைமையிலான ஒன்றாறியோ மாகாண அரசாங்கத்தில், மேலும் இரண்டு இந்திய கனேடியர்களுக்கு அமைச்சரவையில் பதவிகள் வழங்கப்பெற்றுள்ளன. அண்மையில் இடம்பெற்ற. அமைச்சரவை மாற்றத்தைத் தொடர்ந்து, மேற்படி இரு இந்திய வம்சாவழி கனேடிய அரசியல்வாதிகள் ஒன்ராறியோ அமைச்சரவையில் அமைச்சர்களாக பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டனர்.





ஒன்ராறியோ மாகாண முதல்வர் கடந்த வெள்ளியன்று தனது அமைச்சரவையை மாற்றி அமைத்தார். இதேவேளை ஏற்கனவே இந்த அமைச்சரவையில் இந்திய வம்சாவழி கனேடியரான Prabhmeet Sarkariya என்னும் எம்பிபி, சிறு வர்த்தகம் சார்ந்த அமைச்சில் துணை அமைச்சராக பதவி வகித்தார்.

அவர் தற்போது Treasury Board எனப்படும் நிதிச் சபையின் இன் தலைவராக பதவி யேற்றுள்ளார். மேலும் முன்னாள் மத்திய பாராளுமன்ற உறுப்பினரும் தற்போதைய மாகாண பாராளுமன்ற உறுப்பினருமான Parm Gill என்னுயும் எம்பிபி மாகாணத்தின் குடியுரிமை மற்றும் பல்லின கலாச்சார அமைச்சராக பதவியேற்றுக்கொண்டுள்ளார்.



இந் நிலையில், தற்போது ஒன்ராறியோ மாகாண அமைச்சரவையில் மூன்று இந்திய வம்சாவழி கனேடியர்கள் அமைச்சர்களாக பதவி வகிப்பதும் இதே போன்று இலங்கை வம்சாவழி கனேடியரான விஜய் தணிகாசலம் ஒன்றாரியோ போக்குவரத்து அமைச்சின் பாராளுமன்றச் செயலாளராக உள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**செய்தி: சத்தியன்**

# ஒன்றாரியோ மாகாண முதல்வரின் வாசஸ்த்தலத்திற்கு வெளியே கத்தியோடு காணப்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டார்



கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்களின் வாசஸ்த்தலம் ரொறன்ரோ மாநகரில் உள்ளது. ஒன்றாரியோ மாகாணப் பொலிஸ் அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று 24 மணி நேரமும் அவருக்கு பாதுகாப்பு வழங்கி வருகின்ற வேளையில் அவரது வாசஸ்த்தலத்திற்கு முன்பாக கையில் கத்தியுடன் நடமாடிய நபர் ஒருவரை ஒன்றாரியோ மாகாணப் காவல்துறை அதிகாரிகள் கைது செய்துள்ளனர் என அறியப்படுகின்றது. கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவம் பற்றி ஒன்றாரியோ மாகாண காவல்துறையின் தலைமை அலுவலகம் செய்திக் குறிப்பு ஒன்றை செவ்வாய்கிழமை வெளியிட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக முதல்வரின் அலுவலக பிரதான செய்தித் தொடர்பாளர் ஊடகங்களுக்கு தகவல் தெரிவிக்கையில் பின்வருமாறு கூறினார்.

தற்போது கைது செய்யப்பட்டு குற்றம் சாட்டப்பட்டுள்ள நபர் ரொறன்ரோவில் அமைந்துள்ள முதல்வர் டக் போர்ட் அவர்களின் வாசஸ்த்தலத்திற்கு வெளியே பெரிய ஒரு கத்தியோடு காணப்பட்டதாக ஒன்றாரியோ மாகாணத்தின் காவல்துறையினர் கண்டுள்ளனர்.

அந்த இடத்தில் இருந்த ஒன்ராறியோ மாகாண காவல்துறை அதிகாரி ஒருவர் அந்த நபரை கைது செய்ததாகவும் அவர் கூறினார்.

"தனது பாதுகாப்பு அதிகாரிகளின் விரைவானவும் துணிச்சலானதுமான தகுந்த நடவடிக்கைகளுக்காக முதல்வர் டக் போர்ட் அவர்கள் நன்றி கூறியிருக்கின்றார், இதன் சம்பவத்தின் விளைவாக சம்பவத்தில் எவருக்கும் எந்தத் தீங்கும் ஏற்படவில்லை" என்றும் முதல்வரின் பிரதான செய்தித் தொடர்பாளர் மேலும் அறிவித்துள்ளார்.

ஒன்றாரியோ மாகாண காவல்துறையினரால் கைது செய்யப்பட்ட அந்த கத்தி வைத்திருந்த நபர் முதல்வர் அவர்களின் வாசஸ்த்தலத்தை நெருங்குவதற்கு முன்பு அந்த வீதிகளில் காணப்பட்ட பல வாகனங்களின் டயர்களை வெட்டியதாகவும் இதை கண்ட அயலவர்கள் அதை காவல்துறையினருக்கு அறிவித்ததாகவும் கூறப்படுகிறது.

# புதிய டெல்றா கிருமியிலிருந்து தப்புவதற்கு இரண்டாவது தடுப்பூசி எடுப்பது அவசியம் என்கிறார் கனடா தலைமை மருத்துவ அதிகாரி

இந்த புதிய டெல்றா கிருமியானது ஒரு கவலையளிக்கும் ஒரு விடயமாகும் என்று தெரிவித்துள்ள கனடாவின் பிரதம மருத்துவ அதிகாரி தெரேசா டாம், ஏனெனில் ஒரு தடவை வழங்கப்பெறும் முதலாவது தடுப்பூசி இந்த புதிய டெல்றா கிருமிக்கு எதிராக செயற்படும் பயனுள்ளதாக இல்லை, இதனால், இது கனடாவில் மக்கள் இரண்டாவது தடவை பெற்றுக்கொள்ள வேண்டிய தடுப்பூசியின் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.என்றும் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த வாரத்தில் கனடாவில் கோவிட் தொற்றான புதிதாக தாக்கத்தை ஏற்படுத்தி வரும் டெல்டா கிருமியினால் உறுதிப்படுத்தப்பட்ட நோய்த்தாக்கத்தின் எண்ணிக்கை 66 சதவீதம் உயர்ந்ததுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் தலைமை பொது சுகாதார அதிகாரி டாக்டர் தெரேசா டாம இந்த அதிகரிப்பு தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் கடந்த வெள்ளிக்கிழமை நிலவரப்படி 2,000 க்கும் மேற்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட தொற்றாளர்கள் அதிகரிப்பு காணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

மூன்று நாட்களுக்கு முன்னர், பொது சுகாதார தலைமை அலுவலகம் ஊடகங்களுக்கு வழங்கிய விபரங்களின் படி 1,187 உறுதிப்படுத்தப்பட்ட தொற்றாளர்களே உள்ளதாக தெரிவிக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

"புதிதான டெல்டா நோய்த் தொற்றுக் கிருமியானது இப்போது அனைத்து மாகாணங்களிலும், குறைந்தபட்சம் ஒவ்வொரு பிரதேசத்திலும் தனது தாக்கத்தை செலுத்து ஆரம்பித்துள்ளது" என்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய கனடிய சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

"நிச்சயமாக, புதிய டெல்றா கிருமி தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை பற்றிய எனது எச்சரிக்கையும், முடிந்தவரை அதிகமானவர்களுக்கு இரண்டு தடவைகள் தடுப்பூசிகளைப் பெற வேண்டிய அவசியமும் உள்ளது".

இந்த புதிய டெல்றா கிருமியானது முதன்முதலில் இந்தியாவில் அடையாளம் காணப்பட்டது, ஆனால் இப்போது இங்கிலாந்திலும் தீவிரமாக ஆதிக்கம் செலுத்துகிறது, அங்கு அது வேகமாக பரவி வருகிறது, பெரும்பாலும் அறியப்படாத மக்கள் மத்தியில் அந்த கிருமி தனது ஆதிக்கத்தைச் செலுத்தி வருகின்றது.



இங்கிலாந்தில் முதன்முதலில் அடையாளம் காணப்பட்ட ஆல்பா கிருமியை விட இது குறைந்தது 1.5 மடங்கு பலமுள்ள தொற்றுநோய்க்கிருமியாக இருப்பதாக நம்பப்படுகிறது, மேலும் தற்போதைய நிலையில் இந்த புதிய டெல்றா நோய்க்கிருமியானது, கனடாவில் 216,000 க்கும் மேற்பட்டோருக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்தில், உறுதிப்படுத்தப்பட்ட புதிய டெல்றா நோயாளிகளின் எண்ணிக்கை கடந்த வாரத்தில் 80 சதவீதம் அதிகரித்து 76,000 ஆக உயர்ந்துள்ளது என்று இங்கிலாந்தின் பொது சுகாதாரத் துறை வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளது. மேலும் இங்கிலாந்தின் பிரதமர் போரிஸ் ஜான்சன் அடுத்த வாரம் அனைத்து பொது சுகாதார கட்டுப்பாடுகளையும் முழுமையாக நீக்குவதற்கான திட்டங்களை மேலும் தாமதப்படுத்த வேண்டியிருந்தது, இறுதியில் இந்தக் கட்டுப்பாடுகளை குறைந்தது ஒரு மாதமாவது மேலும் வைத்திருக்க திட்டமிட்டுள்ளது.

கனடா பயன்படுத்தும் இரண்டு அளவு தடுப்பூசிகள் டெல்டாவுக்கு எதிராக நல்ல பாதுகாப்பை அளிக்கும் என்று நம்பப்படுகிறது, மேலும் ஒரு டோஸ் கூட கடுமையான நோயைத் தடுப்பதில் சிறந்தது என்று கண்டறியப்பட்டுள்ளது. அனைத்து மாகாணங்களும் டெல்டாவின் இருப்புக்கு எதிராக எச்சரிக்கை செய்கின்றன. இது ஒரு இயக்கி என்று நம்பப்படுகிறது.

# மெக்டொனால்ட் நிறுவனத்தில் வாகனங்கள் செல்லும் பாதையை தடுத்து அதிருப்தி அறிவிப்பை காட்சிக்கு வைத்த பணியாளர்




கனடாவில் உள்ள ஒரு மெக்டொனால்ட் நிறுவனத்தின் கிளையில் வாகனங்கள் செல்லும் பாதையை தடுத்து அதிருப்தி அறிவித்தை வைத்த பணியாளர் ஒருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மெக்டொனால்ட் நிறுவனம் அறிவித்துள்ளது.

தனது வேலையில் மேலதிகாரிகளினால் தரப்பட்ட அழுத்தம் காரணமாக அதிருப்தி அடைந்த ஒரு தொழிலாளியிடமிருந்து மெக்டொனால்ட் கிளையில் வாடிக்கையாளர் வாகனங்களில் வந்து தமது உணவுப் பொருட்களை பெற்றுக்கொள்ளும் பாதையில் காட்சிப் படுத்தப்பட்ட ஆங்கிலம் மூலமாக அறிவிப்பு ஒன்று தற்போது சமூக ஊடகங்களில் அதிவேகமாக பரவி வருகின்றது. இதில் வெளிப்படையாக, உணவகத்தின் ஊழியர்களில் ஒருவர் தாம் இந்த கிளையில் வேலை செய்ய விரும்பவில்லை. என்று பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

இதைப் பார்த்த முன்னாள் மெக்டோனால்ட் ஊழியர் ஒருவர் "நான் முன்னர் மெக்டொனால்டு கிளையொன்றில் பணியில் இருந்தபோது என்னோடு பணியாற்றிய அனைவருக்கும் இந்த மனநிலையே இருந்தது. இதில் உண்மை இருக்கின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கிழக்கின் ஏறாவூரில் இலங்கை இராணுவம் தமிழ், முஸ்லிம் மக்கள் மீது அரங்கேற்றிய மிலேச்சத்தனம்



கிழக்கின் ஏறாவூரில் இலங்கை இராணுவம் தமிழ, முஸ்லிம் மக்கள் மீது அரங்கேற்றிய மிலேச்சத்தனம் தொடர்பாக இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இலங்கை அரசிற்கும் இலங்கை இராணுவத்திற்கு எதிராக கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஏறாவூர் பொதுமக்கள் வீதியில் முட்டுக்காலில் நிற்க வைக்கப்பட்ட இந்த சம்பவம் நாடு சர்வாதிகாரத்தை நோக்கிப் போவதை எடுத்துக்காட்டுகின்றது என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஏறாவூரில் தமது அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக வீதிக்கு வந்த சில பொதுமக்கள் பாகாப்புக்கடமையில் இருந்தவர்களால் வீதியில் இருகைகளையும் உயர்த்தி முட்டுக்காலில் நிற்க வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களிலும், ஊடகங்களிலும் வெளிவந்துள்ளன. இந்த நாடு ஜனநாயக நாடு. சட்டவாட்சி அமுலில் உள்ள நாடு. எனவே, எல்லாவற்றையும் சட்டரீதியாகவே அணுக வேண்டும். அதுவும் சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற அரசியலமைப்பு வாசகத்துக்கமைய எல்லோருக்கும் சட்டம் அமுல் படுத்த வேண்டும். சட்டம் பாரபட்சமாக அமுல்படுத்தப் படக்கூடாது என்பதையே இந்த வாசகம் எடுத்துக்காட்டுகின்றது.

ஏறாவூர் சம்பவம் சட்டத்துக்கு புறம்பானது. மனிதாபிமானமற்றது. ஒவ்வொருவருக்கும் சுய கௌரவம் உள்ளது. வீதியில் முட்டுக்காலில் நிற்க வைக்கப்பட்ட இச்சம்பவம் அவர்களது சுயகௌரவத்தை கொச்சைப்படுத்துகின்றது. பயணத்தடை அமுலில் இருப்பதாக சொல்லப்பட்டாலும் நாடு முழுவதும் நாளாந்தம் பல்லாயிரக்கணக்கான வாகனங்கள் வீதிகளில் நடமாடுகின்றன. அதே-போல பல்லாயிரக்கணக்கான பொதுமக்களும் வீதிகளில் பயணிப்பதை நாம் காண்கிறோம்.





இந்நிலையில் ஏறாவூரில் தமது அன்றாடத் தேவையை நிறைவேற்ற வந்த பொதுமக்களை மட்டும் வதைக்கின்ற செயல் நாட்டில் நியாயமான சட்டவாட்சி இல்லை என்பதை உறுதிப் படுத்துகின்றது. சட்டம் பொதுவாக எல்லோருக்கும் தான் அமுல் படுத்தப்பட வேண்டும். ஆனால் இந்த நாட்டில் சட்டம் பாரபட்சமாக அமுல்படுத்தப்படுவதை இச்சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது. நாட்டில் நீதிமன்றக் கட்டமைப்பு மிகத் தெளிவாக செயற்படுகின்ற நிலை-யில் சட்டத்தை தமது கையில் எடுத்து தண்டனை வழங்கும் அதிகாரத்தை இந்த அரசு காவல் கடமைகளில் ஈடுபட்டவர்களுக்கு வழங்கியுள்ளமையையே இது எடுத்துக் காட்டுகின்றது. அரசின் பக்கச்சார்பான இந்தச் சர்வாதிகாரப் போக்கு குறித்து அனைவரும் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த அப்பாவி மக்கள் இவ்வாறு வீதியில் தண்டிக்கப்பட்ட போதும் கூட 20 முதல் அரசுக்கு புதிதாக ஆதரவு தெரிவித்து வருகின்றவர்கள் இது குறித்து மௌனம் சாதிப்பது குறித்து நான் மிகவும் கவலையடைகிறேன்.

அவர்களுக்கு இந்த மக்கள மீது உண்மையான அன்பு இருக்குமாயின் சட்டத்துக்கு பறம்பாக இந்த நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க அவர்கள் முன்வர வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

உலக செய்திகள்
World News

# பாகிஸ்த்தானில் பாலியல் பலாத்கார சம்பவங்கள் அதிகரிப்பதற்கு பெண்கள் அணியும் உடைகளே காரணம் என்கிறார் பிரதமர் இம்ரான் கான்



பாகிஸ்தானில் பாலியல் பலாத்கார சம்பவங்கள் அதிகரிப்பதற்கு பெண்கள் அணியும் உடைகளே காரணம் என தெரிவித்துள்ள நாட்டின் பிரதமர் இம்ரான் கானின் கருத்து தொடர்பாக தெரிவிக்கப்பட்ட விமர்சனங்களில், இவ்வாறு பாலியல் பலாத்கார வழக்குகள் அதிகரிப்பதற்கு பெண்கள் எப்படி ஆடை அணிவார்கள் என்று தெரிவித்துள்ளது தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோது இம்ரான் கானின் இந்த கருத்து அறியாமையின் வெளிப்பாடு என்று கூறியுள்ளார்கள்.

நேரடி தொலைக்காட்சியில் ஒரு வார இறுதி நேர்காணலில், ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் கல்வி கற்ற இம்ரான் கான் கற்பழிப்புகளின் அதிகரிப்பு "எந்தவொரு சமூகத்திலும் மோசமான தன்மை அதிகரித்து வரும் விளைவுகளை" குறிக்கிறது என்று கூறினார்.




"பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவங்கள் ... உண்மையில் சமூகத்தில் மிக வேகமாக அதிகரித்துள்ளன", என்று அவர் கூறினார்.

இது இவ்வாறிருக்க இம்ரான் கானின் கருத்துக்களை நிராகரித்த பாகிஸ்த்தானில் உள்ள பெண்கள் அமைப்புக்கள் மற்றும் மனித நேய அமைப்புக்கள் ஆகியன, "உண்மையில் இம்ரான் கானின் இந்த கருத்து தவறானது, அத்துடன் உணர்வற்றது மற்றும் ஆபத்தானதுமாகும்" என்று சமூக வலைத்தளங்கள் மூலமாக தங்கள் கருத்துக்களைப் பரப்பிய நூற்றுக்கணக்கானவர்கள் தெரிவித்துள்ளனர். "தவறு என்பது கற்பழிப்பு மற்றும் கற்பழிப்புக்கு உதவும் அமைப்போடு மட்டுமே உள்ளது" என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்.

பாக்கிஸ்தானில் இயங்கும் மனித உரிமைகள் ஆணையம், மற்றும் ஒரு சுயாதீன கண்காணிப்புக் குழு, ஆகிய இம்ரான் கானின் கருத்துக்கள் தொடர்பாக விமர்சனம் தெரிவிக்கையில் "இது ஆச்சரித்தையும் திகைப்பையும் தருகின்றது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.." இது எங்கு, ஏன், எப்படி கற்பழிப்பு நிகழ்கிறது என்பது பற்றிய குழப்பமானதும் அறியாமை மிக்கதுமான விடயங்களை உள்ளடக்கியுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

கடந்த ஆண்டும் இவ்வாறே இம்ரான், கான் மற்றொரு தொலைக்காட்சிக்கு பேட்டி வழங்கிய பின்னர் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக கடுமையாக விமர்சிக்கப்பட்டார், அதில் பெண்களின் தவறான செயல்களால் கொரோனா வைரஸ் கட்டவிழ்த்து விடப்பட்டதாக ஒரு முஸ்லீம் மதகுருவின் தெரிவித்த கருத்துக்கு அவர் ஆதரவாக தெரிவித்த கருத்துக்களால் அன்று கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாக வேண்டியிருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அண்மையில் பாகிஸ்த்தானின் சர்வதேச மகளிர் தினத்தின் பின்னணியில் உள்ள அமைப்பாளர்களுக்கு எதிராக ஒருங்கிணைந்த தவறான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டதால், அதை பெண்கள் அமைப்புக்கள் எதிர்த்து கோசங்களை எழுப்பின. இந்த விடயம் தொடர்பாகவும் பாகிஸ்த்தான் பிரதமர் இம்ரான் கான் பெண்களையே குற்றஞ்சாட்டியிருந்ததையும் பெண்கள் அமைப்பினர் தற்போது குறிப்பிட்டுள்ளனர்.

# மியன்மார் ராணுவ ஆட்சிக்கு ஆதரவளிக்கும் சீனாவிற்கு எதிராக உலக நாடுகள் கண்டனம் தெரிவிப்பு



தமது இராணுவ ஆட்சிக்கு எதிராகப் போராடும் பொதுமக்களையும் அரசியல் தலைவர்களை துன்புறுத்தியும் கொன்று குவித்தும் வருகின்ற மியன்மார் இராணு அரசின் தலைவர் ஜெனரல் மின் ஆங் லாங்கை தலைநகர் யங்கோனில் முதல் தடவையாக சந்தித்து உரையாடினர்.

சீனாவுடன் ஆசியான் அமைப்பும் மியன்மார் இராணுவ அரசாங்கத்தை அங்கீகரிக்க முயல்வது, ஆசியான் நாடுகள் மற்றும் ஜனநாயகத்துக்காக அந்நாட்டில் போராடும் அமைப்புகளுக்கு பின்னடைவையே ஏற்படுத்தும் என நிக்கய் ஆசியா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன் மியன்மார் ராணுவ ஆட்சியை பாராட்டி ஆதரவளிக்கும் சீனாவிற்கு எதிராக உலக நாடுகள் பல கண்டனம் தெரிவித்துள்ளன.

மியன்மார் இராணு அரசின் தலைவர் ஜெனரல் மின் ஆங் லாங்கை தலைநகர் யங்கோனில் முதல் தடவையாக சந்தித்து உரையாடிய சீனத் தூதுவர் பின்னர் வெளியிட்ட அறிக்கையில் அவரை "மியன்மாரின் தலைவர்" எனக் குறிப்பிட்டிருப்பதையும் ஆசியான் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் அவரை முதல் தடவையாக "தலைவர்" என்று குறிப்பிட்டிருப்பதையும் சுட்டிக் காட்டியே, இரு தரப்பினரும் மியன்மார் தொடர்பான தமது அணுகுமுறையில் மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாக இச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சமீபத்தில் ஆசியான் மற்றும் சீன வெளிவிகார அமைச்சர்கள் மாநாட்டில் மியன்மார் இராணுவ அரசு, கண்ணியமான ஜனநாயகத்தை ஏற்படுத்தும் வகையிலான ஐந்து அம்ச திட்டமொன்றை சமர்ப்பித்திருந்தது. இந்த நிலையில் ஆசியானும் சீனாவும் இராணுவ ஆட்சிக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் செயல்பட்டிருப்பது தொடர்பில் பல ஆசியான் உறுப்பு நாடுகள் கவலை தெரிவித்திருப்பதோடு ஊடகங்களின் விமர்சனங்களுக்கும் ஆளாகியுள்ளது. ஐந்து அம்ச தீர்வுத் திட்டத்துக்கும் தற்போதைய நிலைப்பாட்டுக்கும் இடையே மலைக்கும் மடுவுக்கும் இடையிலான வித்தியாசத்தை காணமுடிவதாக அவை சுட்டிக்காட்டியுள்ளன. மியன்மார் பிரச்சினையை ஒரு முடிவுக்கு கொண்டுவரும் அமெரிக்காவின் சமாதான முயற்சிகளுக்கு இச் செயல் பொருத்தமற்ற குறுக்கீடாகவே கருதப்பட முடியும் என்றும் நிக்கய் ஆசியா குறிப்பிட்டுள்ளது.

மியன்மாரில் தொடர்ந்து நடைபெற்றுவரும் இராணுவ புரட்சிக்கு எதிரான போராட்டங்களில் சீன எதிர்ப்பு வலுவாகக் காணப்படும் அதேசமயம் சீன - மியன்மார் பொருளாதார உடன்படிக்கைக்கு ஏதுவான சீன வர்த்தக முதலீடுகளை இராணுவ ஆட்சி ஊக்குவித்து வருவது குறிப்பிடத்தக்கது. மியன்மார் போராட்டத்தில் இதுவரை 840 பேர் பலியாகியுள்ளனர்.

இந்தியா செய்திகள்
India News

# சூர்யா, ஜோதிகா தடுப்பூசி செலுத்திக்கொண்டனர்



நடிகர் சூர்யாவும், அவருடைய மனைவி ஜோதிகாவும் முதல் தவணை கொரோனா தடுப்பூசியை செலுத்திக் கொண்டனர்.

கொரோனா தொற்று பரவலைத் தடுக்கும் விதமாக மத்திய மாநில அரசுகள் கொரோனா தடுப்பூசி செலுத்துவதை தீவிரப்படுத்தி வருகின்றன. பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும், திரைப்பிரபலங்களும், மக்களும் ஆர்வமாக தடுப்பூசி செலுத்திக் கொண்டு வருகின்றனர்.

இந்த வரிசையில் பிரபல தமிழ் திரைப்பட நடிகர் சூர்யா, அவருடைய மனைவியும் நடிகையுமான ஜோதிகா ஆகியோர் இன்று தடுப்பூசி செலுத்திக் கொண்டனர்.

அனைவரும் தடுப்பூசி செலுத்திக் கொள்ள முன்வர வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கனடிய செய்திகள்
Canadian News

# ஒன்ராறியோவில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களில் 25 வீதத்துக்கும் அதிகமானவர்களுக்கு இரண்டாவது தடுப்பூசி போடப்பட்டுள்ளது!

ஒன்ராறியோவில் வாழும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களில் 25 வீதத்துக்கும் அதிகமானவர்களுக்கு இப்போது முழுமையாகத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது!

ஜூன் 23ஆம் திகதி முதல், கடந்த மே 30ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் எம்.ஆர்.என்.ஏ. முதலாவது தடுப்பூசியைப் போட்டுக்கொண்டவர்களும், கோவிட்-19 டெல்டா திரிபு தொற்றின் ஆபத்துள்ள குறிப்பிட்ட 10 பகுதிகளில் (டூறம், ஹோல்டன், ஹமில்டன், பீல், போர்கிபைன், சிம்கோ - மஸ்கோகா, ரொறன்ரோ, வோட்டலூ, வெலிங்டன் - டஃப்றின் - கல்ஃப், யோர்க் பொது சுகாதார அலகு) வாழ்பவர்களும் இப்போது தமக்கான இரண்டாவது தடுப்பூசியினை குறுகிய காலத்தில் முன்பதிவு செய்துகொள்ளவும், ஏற்கனவே முன்பதிவு செய்யப்பட்ட தமது திகதியை முன்னகர்த்துவதற்கும் அனுமதிக்கப்படுகின்றனர்.

தடுப்பூசியைப் பெறுவதற்கு நீங்கள் ontario.ca/bookvaccine எனும் இணையதளத்தில் முன்பதிவு செய்துகொள்ளலாம்.

அனைவரும் இலகுவான முறையில் கோவிட்-19 தடுப்பூசி மையங்களுக்குச் சென்றுவருவதற்கான போக்குவரத்து வசதிகளை ஒன்ராறியோ அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

தடுப்பூசி நிலையங்களுக்கு சென்றுவர முடியாத நிலையிலுள்ள முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் வகையில், அவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை ஒன்ராறியோ சமூக உதவி அமைப்பினூடாக ஏற்படுத்திக்கொடுப்பதற்கென ஒன்ராறியோ அரசாங்கம் 3.7 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது.



தடுப்பூசி பெற விரும்பும் ஒருவர் போக்குவரத்து உதவியினைப் பெறுவதற்குத் தகுதியுடையவரானால், அவர் தடுப்பூசி நிலைய ஊழியர்கள் மற்றும் தன்னார்வல வாகன ஓட்டுனர்கள் ஊடாக தனக்கான போக்குவரத்து வசதிகளை செய்துகொள்ள முடியும். இவ்வேற்பாட்டினை, முதலாவது தடுப்பூசியினை அல்லது இராண்டாவது தடுப்பூசியினைப் பெற செல்பவர்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

# ஸ்காபாரோ நிலக்கீழ் பயண இணைப்பு ரயில் சேவை விரிவாக்கம் பெறுகின்றது



கனடிய வரலாற்றில் மிகப் பெரிய நிலக்கீழ் பயண இணைப்பு ரயில் சேவை விரிவாக்க கட்டுமானமான, மூன்று தரிப்பு நிலையங்களைக் கொண்ட, ஸ்காபரோ தொடரி வழித்தட நீட்டிப்பினை ஒன்ராறியோ அரசாங்கம் அதிகாரபூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளது. இப்புதிய நிலக்கீழ் வழித்தடமானது, ஸ்காபரோ மக்களுக்கு வேண்டிய சிறந்த போக்குவரத்து வசதியினை வழங்கும்.

இத்திட்டத்தின் மூலம், இதன் கட்டுமான காலத்தில் ஆண்டுதோறும் 3000 வரையான வேலைவாய்ப்புகளை வழங்குவதுடன், இது முடிவடைந்த பின்னர் ஸ்காபரோ பகுதியிலிருந்து நகரத்தின் பிற பகுதிகளுக்கு வேலைக்கும் பாடசாலைகளுக்கும் செல்வோருக்கு இலகுவான போக்குவரத்தினையும் வழங்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி நிலக்கீழ் பயண இணைப்பு ரயில் சேவை விரிவாக்கப் பணிகளின் முதற்கட்டமாக கெனடி தொடரி நிலையத்திலிருந்து மக்கோவன் வீதி - ஷெப்பேட் வீதி சந்திப்பு வரையான 7.8 கிலோ மீட்டர் நீட்டிப்புக்கான கட்டுமானப் பணிகள் இடம்பெறும். சமநிலை ஒப்பந்த வேலைகளின்படி கட்டுமானப் பணகள் இடம்பெறும்.

ஒன்றாரியோ முதல்வர் போஃட் அவர்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போக்குவரத்துத் திட்டத்துக்கு கனடிய நடுவண் அரசு ஒப்புதல் அளித்ததுடன், ஒன்ராறியோ மாநிலத்தின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நான்கு நிலக்கீழ் வழித்தடத் திட்டங்களுக்கான செலவில் 40 சதவீதத்தினை - அதிகபட்சமாக 10.7 மில்லியன் டொலர்களை - வழங்குவதெனவும் ஒப்புக்கொண்டுள்ளது.



# ஆறு நாடுகளின் அறிக்கை: ஏற்றால் நலம் இல்லையேல் சிக்கல்



**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)**

இலங்கை பெரும் சிக்கலில் இருப்பதும் கடும் அழுத்தங்களுக்கு உள்ளாகி வருவதும் தெளிவாகத் தெரிகிறது. அண்மைக் காலங்களில் இப்படியான பல்முனை தாக்குதலை இலங்கை எதிர்கொண்டதில்லை. ஆனால் இப்போது எதிர்கொள்ள சிரமப்படுகிறது.

கனடா, ஜெர்மனி, பிரிட்டன், வடக்கு மாசிடோனியா, மலாவி, மொண்டநெக்ரோ ஆகிய நாடுகள் இணைந்து ஐ நா மனித உரிமைகள் ஆணையத்தில் கொண்டுவந்த தீர்மானத்தின் சூடு இப்போது தெரிய ஆரம்பித்துள்ளது.

ஐ நா மனித உரிமைகள் ஆணையம் இந்த ஆண்டு மார்ச் மாதம் நடத்திய சிறப்புக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அப்போது யாழ்ப்பாணத்திற்கு வழி கேட்டால், கொழும்பில் வெயில் காய்கிறது எனும் பாணியில் அரசு பதிலளித்தது. வாக்களிப்பில் பங்குபெறாதவர்கள் தமக்கு ஆதரவாக வாக்களித்ததாகக் கருத வேண்டும், பன்னாட்டளவில் நாட்டிற்கு ஆதரவு உள்ளது என்றெல்லாம் வீரவசனம் பேசினார் வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்தன.




மார்ச் மாத இறுதிப் பகுதியில் ஐ நா மனித உரிமைகள் ஆணையம் கொடுத்த அடியிலிருந்து தப்பித்தோம், இனி இப்போதைக்குக் கவலையில்லை என்று கருதி சற்று ஆறுதலடைய அரசு முயன்றது. ஆனால் அடுத்த அடி ஐரோப்பிய நாடாளுமன்றத்திலிருந்து விழுந்தது. மிகப் பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேறிய அந்த தீர்மானம் இலங்கை அரசுக்கு பெரிய அதிர்ச்சியை அளித்தது.

நாட்டுக்கு அந்நிய செலாவணியைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு முக்கிய துறையான ஆயத்த ஆடை ஏற்றுமதிக்கு ஐரோப்பிய நாடுகள் அளித்து வரும் ஜி எஸ் பி + வரிச்சலுவை நிறுத்துவதை பரிசீலிக்கப்படும் என்றும், எதிர்வரும் நவம்பர் மாதம் ஜி எஸ் பி + குறித்த மீளாய்வு வரும் போது இது குறித்த இறுதி முடிவெடுக்கப்படும் என்று பல நாடுகள் அறிவித்திருந்தன. அதுமட்டுமின்றி பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கு வழங்கப்பட்ட நிதியுதவிகளையும் நிறுத்த நேரிடும் என்றும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இவை தவிர குறிப்பிட்ட சில நபர்கள், முக்கிய அரசியல்வாதிகள், மூத்த இராணுவ அதிகாரிகள் என்று பல நாடுகள் இலக்கு வைத்த தடைகளை அறிவிக்கக் கூடும் எனும் ஊகங்களும் வலுத்து வந்தன.

ஐ எஸ் பி + நிறுத்தம், இலக்கு வைக்கப்பட்ட நபர்கள் மீதான பொருளாதார மற்றும் பயணத் தடை, வெளிநாடுகளில் இருக்கும் சொத்துக்களை முடக்குவது, தூதரகங்களில் முக்கியப் பொறுப்புகளில் இருக்கும் சில நபர்களை வெளியேற்றுவது என்று பலவகையான நடவடிக்கைகளை எடுத்து ஐரோப்பிய நாடுகள் முன்னெடுப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கான செயல்பாடுகளை ஆரம்பித்துள்ளன என்கிற தகவல் கசிய ஆரம்பித்தவுடன் இலங்கை அரச தரப்பில் கலக்கத்தை ஏற்படுத்தின.

அரசின் உயர் மட்டத்தில் கவலைகளுக்கான அறிகுறிகள் தெரிய ஆரம்பித்தன. ஐ நா மனித உரிமைகள் ஆணையமும், ஐரோப்பிய நாடாளுமன்றமும் தெரிவித்துள்ள கருத்துள்ள, இயற்றியுள்ள தீர்மானங்கள் ஆகியவை குறித்து அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்துள்ளது என்கிற செய்தியை அரசு கசிய விட்டு அதற்கு ஏற்ற வகையில் சில முன்னெடுப்புகளைச் செய்து வருவதாகவும் காட்ட விழைந்தது.

ஆனால் அரசின் இந்த "பம்மாத்து வேலைகளுக்கு" எல்லாம் தாங்கள் மசிந்துவிட மாட்டோம் என்பது போல ஐ நா மனித உரிமை ஆணையத்தில் இலங்கைக்கு எதிரான அறிக்கையை முன்மொழிந்த ஆறு நாடுகள் கடுமையான அறிக்கை ஒன்றை இம்மாதம் 22ஆம் திகதி வெளியிட்டது.

கனடா, ஜெர்மனி, பிரிட்டன், வடக்கு மாசிடோனியா, மலாவி, மொண்டநெக்ரோ ஆகிய நாடுகளின் அறிக்கையில் காரம் சற்று தூக்கலாகவே இருந்தது.

ஐ நா மனித உரிமைகள் பேரவையின் 46/1 தீர்மானமானது போருக்குப் பின்னரும் தொடரும் தீய நடவடிக்கைகள், அதனால் ஏற்படும் மோசமான பாதிப்புகள், மனித உரிமைகளைப் பேணுதல், சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாத்தல் போன்ற அம்சங்களை இலங்கை அரசு முன்னெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தது.

மிகவும் பிரச்சனைக்குரிய பல விஷயங்களை அரசு புறந்தள்ளவே முயன்றுள்ளது என்றும், அப்படியான விசாரணைகளை முடுக்கிவிட்டு முன்னெடுத்த அதிகாரிகள் மீதே வழக்கு தாக்கல் செய்து அவர்களைத் துன்புறுத்தியது என்று அந்த 6 நாடுகளின் அறிக்கை கூறுகிறது. பிரச்சனைக்குரிய வி'யங்களில் உடனடியாக பாரபட்சமற்ற வகையில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதையே இலங்கையில் நடைபெறும் செயல்பாடுகள் காட்டுகின்றன என்றும் அவர்களின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை குற்றப் புலனாய்வு விசாரணைப் பிரிவின் இயக்குநர் 'ானி அபேசேகரவின் பாதுகாக்கப்பட வேண்டும் என்கிறது கனடா, பிரிட்டன், ஜெர்மனி மற்றும் இதர 3 நாடுகளின் அறிக்கை.




இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தொடரும் நடவடிக்கைகள் மற்றும் கைதுகள் குறித்து தாங்கள் ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாகக் கூறும் அந்த அறிக்கை, சட்ட ரீதியாக முறையான பார்வையின்றி புனர்வாழ்வு எனும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது என்றும் அதன் நம்பகத்தன்மை மற்றும் யதார்த்தம் கேள்விகளை எழுப்புவதாக உள்ளது என்றும் ஆறு நாடுகளின் அறிக்கை கூறுகிறது.

மனித உரிமைகள் சட்டத்தரணி ஜெஹாஸ் ஹிஸ்புல்லா, கவிஞர் மற்றும் ஆசிரியர் அஹ்னாஃப் ஜஸீம் ஆகியோர் தொடர்ந்து விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளதும் அந்தச் சட்டத்தின் கீழ் தொடரும் கைதுகளும்-அதிலும் குறிப்பாகச் சிறுபான்மை சமூகங்கள் மற்றும் அரசியல் எதிரிகள் தடுத்து வைக்கப்படுவதும் பாரதூரமான வி'யமாகும். அது தங்களுக்கு கவலைக்குள்ளாக்குகிறது என்று அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

இலங்கையின் நினைவுச் சின்னங்களை வைக்கப்படுவதிலுள்ள கட்டுப்பாடுகளும் தமக்கு கவலையளிக்கின்றன என்கிறது ஆறு நாடுகளின் அறிக்கை. அண்மையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கட்டப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் உடைக்கப்பட்டது, இந்த ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் போது அங்கு நிரந்தரமாக கல்வெட்டு ஒன்றை நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டு மாபெரும் கல்வெட்டு ஒன்று அங்கு கொண்டுவரப்பட்டதும் அது இரவோடு இரவாக மாயமாக மறைந்ததையும், இன்று வரை அது குறித்து எவ்வித விசாரணைகளோ அல்லது தகவல்களோ இல்லாத நிலையிலேயே அந்தக் கவலையை கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய குழு வெளியிட்டுள்ளது.

பொலிஸ் காவலில் இருக்கும் போது ஏற்படும் மரணங்கள் குறித்தும் கவலை வெளியிட்டுள்ளன அந்த நாடுகள். விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்பட்டு காவல் நிலையத்தில் சந்தேக நபர்கள் மரணமடைவது இலங்கையில் காலங்காலமாக ஒரு பெரிய பிரச்சனையாக உள்ளது. மிகவும் கொடூரமான முறையில் விளக்கமறியலுக்காக அழைத்துச் செல்லப்படுபவர்கள் தாக்கப்பட்டு உயிரிழப்பது ஆசிய நாடுகளில் ஒப்பீட்டளவில் இலங்கையில் கூடுதலாக உள்ளது. கடந்த ஓராண்டில் 10க்கும் அதிகமானவர்கள் பொலிசாரின் விசாரணை மற்றும் பொலிஸ் நிலையத்தில் உயிரிழந்துள்ளனர்.

இந்த மாதத்தின் முற்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டம் இருதயபுரம் பகுதியைச் சேர்ந்த சந்திரம் விதூஷன் எனும் இளைஞர் போதைப் பொருட்கள் விற்பனை மற்றும் விநியோகம் செய்வதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு பின்னிரவு நேரம் அவரது வீட்டின் முன்னால் வைத்துத் தாக்கப்பட்டு காவல் நிலையத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டார். அந்தக் காட்சிகள் சிசிடிவி கேமராவில் பதிவாகியுள்ளன. ஜூன் 3ஆம் திகதி இரவு அவரது வீட்டுக்குச் சென்ற குற்றப் புலனாய்வு விசாரணை அதிகாரிகள் அவரை வீட்டு முன்னால் வைத்து, குடும்ப உறுப்பினர்களின் முன்னிலையில் கடுமையாகத் தாக்கியுள்ளனர். அவரது கைகள் பின்னால் இழுத்து மரமொன்றுடன் இணைத்து விலங்கிடப்பட்டார் என்று அவரது குடும்பத்தார் ஊடகங்களிடம் தெரிவித்தனர்.

குடும்பத்தினர் தடுக்க முயன்றும் அவரை பலவந்தமாக இழுத்துச் சென்ற பொலிசார் அடுத்த நாள் - ஜூன் 4ஆம் திகதி காலை அவர் இறந்துவிட்டதாக குடும்பத்திற்கு தெரிவித்தனர். அவரை விசாரணைக்கு அழைத்துச் சென்ற போது நான்கு சிறு பாக்கெட்டுகளில் இருந்த "ஐஸ்" எனப்படும் போதைப் பொருளை அவர் விழுங்கியதாகவும், அதிலொன்று நெஞ்சுப் பகுதியில் வெடித்து நுரையீரல் பாதிக்கப்பட்டு மரணம் ஏற்பட்டது என்று மரண விசாரணை அறிக்கையில் தெரிய வந்தது என்று சட்ட வைத்திய அதிகாரி இளங்கோவன் அரசரட்ணம் தெரிவித்ததை குடும்பத்தினர் ஏற்கவில்லை. அவர்கள் நீதிமன்றம் சென்றனர்.



இதையடுத்து அவரது உடல் தோண்டி எடுக்கப்பட்டு இரண்டாவது முறையாகப் பிரேதப் பரிசோதனை செய்யப்பட மட்டக்களப்பு மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இருக்கும் இலங்கையின் முன்னணி தடயவியல் பேராசிரியர் சரத்சந்திர கொடிக்கார இந்த இரண்டாவது பிரேதப் பரிசோதனையை நடத்தவுள்ளார். அதன் முடிவு மூடிய உறையில் நீதிமன்றத்திடம் அளிக்கப்படும்.

இந்தாண்டு மே மாதம் இரண்டு நாட்களில் அடுத்தடுத்து இருவர் தென்னிலங்கையில் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்கள் இருவரும் பொலிஸ் காவலில் இருந்தனர். தப்பிச் செல்ல முயன்றனர் என்று கூறப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்படியான கொலைகள் குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுயாதீனமான விசாரணை நடத்த வேண்டும் என்று அந்த ஆறு நாடுகளின் அறிக்கை கோருகிறது.

அதுமட்டுமின்றி காணாமல் போனவர்களைக் கண்டுபிடிக்கும் அல்லது கண்டுபிடிப்பதற்காக அமைக்கப்பட்ட அலுவலகத்திற்கான நியமனங்களும் அந்தக் கடிதத்தில் விமர்சிக்கப்பட்டுள்ளன. அப்படியான அமைப்புகள் எந்த நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டதோ அது நம்பத்தகுந்த வகையில் சுயாதீனமாகச் செயல்பட்டு, நீதியை நிலைநாட்டி உரிய விழிமுறைகளைப் பின்பற்றி நியாயமான விசாரணைகளை முன்னெடுத்து, அதன் முடிவுகளை பாதிக்கப்பட்டவர்களுக்கு பக்கச்சார்பின்றி தெரிவிக்க வேண்டும் என்று பொருள்படும் வகையில் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ள விஷயங்களை ஆக்கபூர்வமாக கவனத்தில் எடுத்து, உரிய நடவடிக்கைகளை எடுத்து ஐ நா மனித உரிமைகள் ஆணையத்தின் 46/1 தீர்மானத்தை மதித்து இலங்கை செயல்பட முன்வருமாயின் அதற்கான முழு ஒத்துழைப்பை நல்க தாங்கள் தயாராக உள்ளதாக அந்த ஆறு நாடுகளும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் எதிர்காலம் மற்றும் சமூகங்களிடையே நல்லிணக்கம், பொருளாதார முன்னேற்றம் போன்ற பல அம்சங்களை மனதில் கொண்டு இலங்கை செயல்படுமா அல்லது இது மேலும் ஒரு அறிக்கை என்று புறந்தள்ளுமா என்பதே முக்கியமான கேள்வி.

பன்னாட்டு கருத்துக்களை அதிலும் குறிப்பாக பொருளாதார ரீதியாக வல்லமை பெற்று ஜனநாயகத்தைப் பேணும் நாடுகளின் கருத்துக்களை புறந்தள்ளுவது சுலபம் ஆனால் விளைவுகள் பாரதூரமானவை என்பதை இலங்கை உணர வேண்டும்.

# 16 பேர் விடுதலை ஒரு சிறிய ஆரம்பம்... அது தொடர வேண்டும்



**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்-லண்டன்)**

``I refuse to accept the view that mankind is so tragically bound to the starless midnight of racism and war that the bright daybreak of peace and brotherhood can never become a reality… I believe that unarmed truth and unconditional love will have the final word``.

*Martin Luther King's Acceptance Speech, on the occasion of the award of the Nobel Peace Prize in Oslo, December 10, 1964*

**அ**மெரிக்க மனித உரிமைகள் போராளியான மார்ட்டின் லூதர் கிங் சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற போது ஆற்றிய ஏற்புரை மிகவும் பிரசித்தி பெற்றது. அதில் ஒவ்வொரு வார்த்தையும் அர்த்தம் பொதிந்தவை. அமெரிக்காவில் ஆழமாகப் பிளவுபட்டிருந்த கறுப்பு - வெள்ளையின சமூகத்திடையே இருந்த பிரச்சனைகள், வெள்ளையின மேலாதிக்கம், கறுப்பின ஒடுக்கம், வன்முறைகள், கைதுகள், கொலைகள் என நாடே மிகவும் கொந்தளிப்பாக இருந்த காலகட்டம் அது.

அவரது ஏற்புரை இன்றளவும் பிளவுபட்டுள்ள சமூகங்களைப் பிரதிபலிக்கிறது. இனவாதம், போர் போன்றவற்றிலிருந்து மனிதர்களும் சமூகங்களும் வெளிவர முடியாது, சமாதானமும் சகோதரத்துவமும் யதார்த்தத்தில் சரிப்பட்டு வராது என்பதை நான் நம்பவில்லை. பரிசுத்தமான உண்மையும், கட்டுப்பாடுகளற்ற அன்பும் கடைசியில் வெல்லும் என்று அவர் கூறியது இன்றளவும் மிகவும் பொருந்தும்.

**விடுவிக்கப்பட்ட கைதிகளின் பெயர் விவரம்**

| இல | தொடர் இல | பெயர் | கைது திகதி | தீர்ப்பு | தண்டனைக் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | V 713 | மயில்வாகனம் மதியழகன் | 30.05.2007 | 14.11.2017 | 6 years |
| 2 | V 756 | சிமியோன் சந்தியோக | 20.07.2011 | 06.12.2017 | 7 years |
| 3 | V 757 | ராகவன் சுரேன் | 24.04.2009 | 06.12.2017 | 7 years |
| 4 | V 758 | சிறி ராகமணி | 11.12.2012 | 06.12.2017 | 7 Years |
| 5 | V 760 | எம்.எம்.அப்துல் சலீம் | 13.12.2011 | 06.12.2017 | 7 years |
| 6 | V 761 | சந்தானம் ஸ்டாலின் ரமேஷ் | 23.01.2012 | 06.12.2017 | 7 years |
| 7 | V 762 | நடராசா சரவணபவான் | 26.08.2009 | 06.12.2017 | 7 years |
| 8 | X 25 | இராசதுரை ஜெகன் | 17.05.2009 | 10.01.2019 | 5 years |
| 9 | X 26 | நல்லான் சிவலிங்கம் | 05.10.2009 | 10.01.2019 | 5 years |
| 10 | X 42 | புருஷோத்தமன் அரவிந்தன் | 21.07.2009 | 16.01.2019 | 5 years |
| 11 | X 43 | இராசவல்லவன் தபோரூபன் | 28.06.2009 | 16.01.2019 | 5 years |
| 12 | X 63 | சூரியகாந்தி ஜெயச்சந்திரன் | 25.09.2010 | 22.01.2019 | 5 years |
| 13 | X 64 | சிவப்பிரகாசம் சிவசீலன் | 26.08.2009 | 22.11.2019 | 5 years |
| 14 | X 20627 | எட்வேட் ஜூலின் | 31.04.2016 | 20.09.2014 | 3 years |
| 15 | U 440 | விஸ்வநாதன் ரமேஷ்குமார் | 09.08.2008 | 10.08.2016 | 17 years |
| 16 | Q 839 | சூரியமூர்த்தி ஜீபோயன் | 18.05.2009 | 19.10.2016 | 14 years |

அவரது வார்த்தைகளை - அந்த ஏற்புரையை - அமைதியான நேரத்தித்தில் இலங்கையில் ஆட்சி பீடத்திலுள்ளவர்களும், அதில் இருந்தவர்களும், யாருடைய ஆட்சியாக இருந்தாலும் அதை ஆட்டி வைப்பவர்களும், நாட்டில் எவ்வகையிலும் இணக்கப்பாடு வந்துவிடக் கூடாது என்று அயராது உழைப்பவர்களும், நாட்டிலுள்ள அனைவரும் வாசிக்க வேண்டும்.

மார்ட்டின் லூதர் கிங் கூறியதைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் வெறுப்புணர்வு ஒருநாளும் வெற்றி பெறாது. விட்டுக் கொடுப்பார் கெட்டுப் போவதில்லை என்பதே.

இலங்கையில் போர் முடிந்து 12 ஆண்டுகளான நிலையில் ஆட்சியாளர்களிடம் தொடர்ந்து நிலவிய வெறுப்புணர்வு மறைந்திருந்தால், போரின் ரணங்கள் ஆறியிருக்கும், வடுக்களும் மறையத் தொடங்கியிருக்கும். ஆனால் அந்த ரணம் ஆறாமல் இருந்தால் மட்டுமே தென்னிலங்கையில் அரசியல் செய்ய முடியும் என்ற கீழ்நோக்கு எண்ணமே தொடர்ச்சியாக வந்த ஆட்சியாளர்களிடம் மேலோங்கி இருந்தது.

இலங்கை அரசு 16 தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்துள்ளதாக செய்திகள் வந்த போது, மக்களிடையே நிறத்தாலோ, இனத்தாலோ, மொழியாலோ வேற்றுமை இல்லை என்று கூறிய மார்ட்டின் லூதர் கிங்கின் நினைவு வந்ததைத் தவிர்க்க முடியவில்லை.

ஆனால் எந்த இலங்கை அரசுக்கும் "நரி" ஜெ.ஆர். காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கொடூரமான பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதில் ஆர்வமிருக்கவில்லை. போருக்கு எதிரான மிகப் பெரும் ஆயுதங்களில் ஒன்றாக அதைப் பயன்படுத்தியது தொடர்ச்சியாக வந்த அரசுகள். போருக்குப் பின்னரும் அதே நிலை.

அப்படியானால் பயங்கரவாதம் தொடர வேண்டும், அதன் மூலம் குளிர் காய வேண்டும் என்பது தான் இலங்கை அரசுகளின் திட்டமாக இருந்துள்ளதா எனும் கேள்வியும் எழுகிறது.

இந்நிலையில் சர்வதேசத் தரப்பிலிருந்து பல்முனை தாக்குதலுக்கு ஆளாகியிருக்கும் இலங்கை அரசுக்கு அதை எதிர்கொள்ள ஒரு துருப்புச் சீட்டு தேவைப்பட்டது. ஜிஎஸ்பி+ வரிச்சலுகை பறிபோய்விடும் அபாயம், அரசு கூறும் அதே பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடக் கிடைக்கும் நிதியுதவிகள் நிறுத்தம், சில அரசியல் தலைவர்கள், இந்நாள் மற்றும் முன்னாள் மூத்த இராணுவ அதிகாரிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் மீதான தடைகள் என்று பல நெருக்கடிகள் ராஜபக்ச அரசு மீது அழுத்தம் கொடுக்க ஆரம்பித்தன.

சர்வதேசத்தில் உக்கிரப் பார்வையிலிருந்து தப்பித்துக் கொள்ள அவர்களுக்கும் ஒரு வழி தேவைப்பட்டது. உள்நாட்டிலும் தமிழ் அரசியல் தலைவர்கள் தலையாய பிரச்சனையாக முன்வைத்த அரசியல் கைதிகளின் விடுதலை என்பதில் கவனம் செலுத்தினால் இப்போது ஓரளவுக்கு மூச்சுவிட முடியும் என்று ராஜபக்சக்கள் நம்பினார்கள்.

ஆனால், அரசியல் வித்தகர்களான ராஜபக்சக்கள் தாங்கள் செய்யும் எந்த முன்னெடுப்பும் அதனால் ஏற்படக் கூடிய பலனும் அடுத்தவர்களுக்கு கிடைத்துவடக் கூடாது என்பதில் என்றுமே கண்ணும் கருத்துமாக இருப்பவர்கள். ராஜபக்சக்கள் முன்வைத்த காலை பின்வைப்பதில்லை என்பது இலங்கையில் அறியப்பட்ட ஒன்று.

இந் நிலையில் கோட்டாபய ராஜபக்ச ஆட்சிக்கு வந்த பிறகு தமிழ் மக்களை பிரதானமாகப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக தங்களைக் கூறிக் கொள்ளும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் அவரை நேரடியாக முதல் முறையாகச் சந்திக்கும் கூட்டமொன்று ஏற்பாடாகி கடைசி நிமிடத்தில் ரத்து செய்யப்பட்டது. அந்தக் கூட்டத்தில் சில அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாகப் பேசப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பேசினால் அது கசிந்துவிடும் என்று அரசு கருதியதாலேயே கூட்டம் ரத்து செய்யப்பட்டது என்று கொழும்பிலிருந்து கிடைத்த தகவல்கள் கூறின.

இதையடுத்தே நாமல் ராஜபக்ச நாடாளுமன்ற உரையில் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் பேசினார். அவர் பேசி முடித்ததும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம், இது குறித்து நீதி அமைச்சர் அலி சப்ரி பேசாமல், அதற்குத் தொடர்பில்லாத அமைச்சரான நாமல் பேசுவதற்கு விதிகள் மற்றும் மரபுகள் ரீதியாக எதிர்ப்புத் தெரிவித்தார்.

இங்கு ஒரு விஷயத்தை கவனிக்க வேண்டும். நாமல் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பு குறித்துப் பேசுவதற்கு துறை ரீதியாக உரிய அமைச்சராக இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவர் ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்தவர். சர்வ வல்லமை கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் மகன், ஜனாதிபதி கோத்தாபய, சாமல் ராஜபக்ச, பசில் ராஜபக்ச ஆகியோரின் பெறாமகன்.

எனவே அவர் மூலமாக அரசியல் கைதிகளின் விடுதலை என்கிற முன்மொழிவை செய்ய வைத்து அரசியல் ஆழம் பார்த்தனர் ஆட்சியாளர்கள். பொதுவாக தமிழர்களின் நலன், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்கிற பேச்சு எழுந்தாலே உடனே கொந்தளித்து எழும் பிக்குமார்களும், விமல் வீரவன்ச, உதயன் கம்மன்பில போன்ற அரசியல் தலைவர்களும் இம்முறை வாயைத் திறக்கவில்லை. ஒன்று திறக்க வேண்டாம் என்று உத்தரவிடப்பட்டிருக்கலாம் அல்லது திறந்தால் அரசியல் அனாதைகள் ஆகிவிடுவீர்கள் அல்லது பிக்குமார்களுக்கு அரச ஆதரவு கிடைக்காது என்கிற செய்தி சொல்லப்பட்டிருக்கலாம்.

ஆனால் இந்த 16 பேர் விடுதலையை கவனமாக ஆராய வேண்டியுள்ளது. கீழேயுள்ள அட்டவணையை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் காலைக்கதிரின் மாலை பதிப்பு நேற்று (வியாழன்-24) அன்று வெளியிட்டது. அதைக் கூர்ந்து கவனித்தால் அரசு ஒன்றும் பெரிய விட்டுக் கொடுப்பைச் செய்யவில்லை என்பது தெரியும்.

இதில் மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று இன்னும் ஆயிரக்கணக்கானவர்கள் வழக்கு தாக்கல் செய்யப்படாமல், ஆண்டுக் கணக்கில் விளக்கமறியல் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர். இப்போது விடுவிக்கப்பட்டுள்ளவர்கள் கூட நீண்டகாலம் சிறை வாசம் அனுபவித்தவர்கள்.

இவர்களின் விடுதலைக்கு தாங்கள் எடுத்த நடவடிக்கையே காரணம் என்று பல அரசியல் கட்சிகள் உரிமை கோரும். அவர்களுடைய பங்கும் இதில் உள்ளது.

புத்தபிரான் இலங்கைக்கு வந்த தினம் என்று கருதப்படும் பௌத்தர்களுக்கு மிகவும் புனிதமான ஒன்று. அந்த தினத்தையொட்டி அரசு வழங்கும் பொது மன்னிப்பின் ஒரு பகுதியாக இந்த 16 பேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் வழக்கு முடிந்து தண்டனை அனுபவித்தவர்கள். அதுவும் பல ஆண்டுகள். இவர்களுடன் சேர்த்து கொலை வழக்கில் சிறை சென்ற துமிந்த சில்வா விடுவிக்கப்பட்டுள்ளது கண்டங்களை எழுப்பியுள்ளது. இலங்கைக்கான அமெரிக்கத் தூதர்டெப்லிட்ஸ் டிவிட்டரில், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வரவேற்றுள்ள அதேவேளை, துமிந்த சில்வாவின் விடுதலை என்பது சட்டத்தைக் குறைத்து மதிப்பிடுவதாகும் என்று கூறியுள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டம் பின் தேதியிட்டு ரத்து செய்யப்பட்டால் மட்டுமே சிறையில் வழக்குகளை எதிர்கொள்ளாமலும், அந்த சட்டத்தின் கீழ் ஒருதலை பட்சமாக வழக்கு விசாரணையை எதிர்கொண்டு தண்டனை அனுபவித்து வருபவர்களும் விடுதலை செய்யப்படுவதற்கு வழி வகுக்கும்.

இந்த 16 பேர் விடுதலை என்பது ஒரு மிகச்சிறிய முன்னெடுப்பு. அது வரவேற்கத்தக்கது, தொடர வேண்டும்.



# அரசியலாகிய தடுப்புசி?



## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

இலங்கைத்தீவில் மே மாத இறுதிக்குள் நாட்டில் உள்ள அரைவாசிப் பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுவிடும் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்திருந்தார். ஆனால் முதலாவது டோஸ் தடுப்பூசியைப் பெற்றவர்களுக்கு இரண்டாவது டோஸ் உரிய காலத்தில் கிடைப்பது சந்தேகமே என்று ஜே.வி.பி. கடந்த சனிகிழமை தெரிவித்துள்ளது.

இலங்கைத்தீவில் கடந்த திங்கட்கிழமை வரையிலும் 3.8விகிதத்தினர் இரண்டு டோஸ் தடுப்பூசிகளைப் பெற்றிருக்கிறார்கள். 7.7விகிதத்தினர் முதலாவது டோஸ் தடுப்பூசிகளைப் பெற்றிருக்கிறார்கள். உலகில் இதுவரையிலும் அதிகதொகை மக்கள் தடுப்பூசிகளைப் பெற்றிருப்பது முதலாவதாக சீனாவில் இரண்டாவதாக அமெரிக்காவில் மூன்றாவதாக இந்தியாவில் நாலாவதாக பிரித்தானியாவில்.

கடந்த மார்ச் மாதம் இலங்கைத்தீவின் மேல் மாகாணத்தில் இருப்பவர்களுக்கு இந்தியத் தயாரிப்பான அஸ்ரா செனெக்கா வகைத் தடுப்பூசி முதல் டோஸ் போடப்பட்டது. மூன்று கிழமைகளின் பின் இரண்டாவது டோஸ் போடப்படும் என்று கூறப்பட்டது. ஆனால் ஏறக்குறைய நான்கு மாதங்கள் கடந்துவிட்டன. கிட்டத்தட்ட 5 லட்சத்து 75 பேர்களுக்கு இரண்டாவது கட்டத் தடுப்பூசிகள் ஏற்றப்படவில்லை. வசதியுள்ளவர்கள் வாய் வல்லமையுள்ளவர்கள் வெவ்வேறு மாவட்டங்களுக்கு போய் தங்களுக்கு தெரிந்த மருத்துவர்களைப பிடித்து இரண்டாம் கட்ட ஊசியை பெற்றுக் கொண்டு விட்டார்கள். காலியில் அவ்வாறு ஒரு தொகுதியினர் அரசியல் அணைவையும் மேல்மட்டச் செல்வாக்கையும் பயன்படுத்தி இரண்டாவது டோசை பெற்றுக் கொண்டது குறித்து ஒரு குற்றச்சாட்டு எழுந்தது. அதனால் சம்பந்தப்பட்ட இரண்டு மருத்துவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதாகவும் செய்திகள் வெளிவந்தன. கிளிநொச்சி மாவட்டத்திலும் பூநகரியில் ஒரு மருத்துவர் அவ்வாறு தனக்கு தெரிந்தவர்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசிகளை போட்டதாக செய்திகள் வெளிவந்தன. இதில் பாதிக்கப்படுவது யார் என்று கேட்டால் வாய் வல்லமை இல்லாத சாதாரண குடிமக்கள்தான். அவர்கள் தடுப்பூசி வருமா இல்லையா என்ற நிச்சயமின்மைகளோடு காத்திருக்கிறார்கள்.

மேல் மாகாணத்தில் இருப்பவர்களுக்கு முதலில் போடப்பட்ட அஸ்ரா செனெக்கா தடுப்பூசியை இந்தியா வழங்கியது. உலகில் மிகவும் மலிவான அதே சமயம் வினைத்திறன் மிக்க தடுப்பூசிகளை இந்தியா உற்பத்தி செய்கின்றது. உலகில் அதிகதொகை கொரோனாத் தடுப்பூசிகளை சீனாவே உற்பத்தி செய்கிறது. அதற்கடுத்ததாக அமெரிக்காவும் அதற்கடுத்ததாக ஐரோப்பிய யூனியனும் உற்பத்தி செய்கின்றன. இந்தியா நாலாவது இடத்திலுள்ளது.

ஆனால் இந்தியாவின் சீரம் இன்ஸ்டியூட்டில் ஏற்பட்ட தீவிபத்து காரணமாகவும் இந்தியாவில் திரிபடைந்த வைரஸ் தாக்கத்தால் இந்தியா திணறிக் கொண்டிருந்த காரணத்தாலும் இலங்கை அரசாங்கத்துக்கு அடுத்த கட்டமாக தடுப்பூசிகளைத் தர முடியவில்லை என்று ஒரு காரணம் கூறப்படுகிறது. வைரஸ் தொற்றினால் இறந்தவர்களை நதிகளில் வீசிக்கொண்டிருந்த ஒரு பின்னணியில் இந்தியா அயல்நாடுகளுக்கு தடுப்பூசிகளை வழங்கக்கூடிய ஒரு நிலைமை இருக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இடையில் விக்னேஸ்வரன் வடக்கு கிழக்குக்கு இந்தியா தடுப்பூசிகளைத் தர வேண்டும் என்று கேட்டிருந்தார். அதற்கும் இந்தியா உத்தியோகபூர்வமாக பதிலளிக்கவில்லை.

இவ்வாறு தடுப்பூசிகளுக்காக காத்திருக்கும் மேல் மாகாண மக்களுக்கு அமெரிக்கா அவற்றை தந்து உதவ வேண்டும் என்று மங்கள சமரவீர தனது டுவிட்டர் பக்கத்தில் ஒரு வேண்டுகோளை விடுத்திருந்தார். ஆனால் அமெரிக்கா இன்றுவரையிலும் குறிப்பிட்ட வகைத் தடுப்பூசிகளை தருவதாக வாக்குறுதி எதையும் தரவில்லை.

இவ்வாறானதொரு சூழ்நிலையில்தான் அரசாங்கம் ஜப்பானிடம் உதவி கேட்டது. ஜப்பான் குறிப்பிட்ட வகை தடுப்பூசிகளை இலவசமாகத் தரும் என்றும் ஒரு எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் இந்த வாரம் கிடைத்த ஒரு செய்தியின்படி அதற்கான வாய்ப்புக்கள் மிகக்குறைவாகவே தெரிகின்றன. அஸ்ரா செனெக்கா தடுப்பூசிகளை யப்பான் ஏனைய நாடுகளுக்கு இலவசமாக வழங்கி வருகிறது. குறிப்பிட்ட தொகை அஸ்ராஜெனிக்கா தடுப்பூசிகளை தந்து உதவுமாறு அரசுத் தலைவர் கோட்டாபய கொழும்பில் உள்ள ஜப்பானியத் தூதுவரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். அதைத் தொடர்ந்து வெளியான செய்திகளின்படி யப்பான் அந்த உதவியைச் செய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கொழும்பில் உள்ள யப்பானிய தூதரகம் அதை மறுத்திருக்கிறது. அஸ்ரா செனெக்கா தடுப்பூசிகளை தருவதாக யப்பான் ஒப்புக் கொள்ளவில்லை என்றும் மாறாக அரசாங்கத்தின் வேண்டுகோள் தமக்கு கிடைத்தது என்று மட்டுமே ஒரு செய்திக் குறிப்பை தாம் வெளியிட்டதாகவும் யப்பானியத் தூதரகம் தெரிவித்ததாக செய்திகள் வருகின்றன.

அதேசமயம் இந்த வாரம் ஜப்பான் வியட்நாமுக்கு பத்து லட்சம் அஸ்ரா செனெக்கா தடுப்பூசிகளை நன்கொடையாக வழங்கி இருக்கிறது. இதில் ஒரு இலங்கை அரசாங்கத்துக்கு ஒரு செய்தி இருக்கிறது. வியட்நாமுக்கு நன்கொடையாக வழங்கியது போல ஏன் இலங்கைத் தீவுக்கும் நன்கொடையாகத் தர முன்வரவில்லை?

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான உறவு மிகவும் நெருக்கமானது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் ஜெயவர்த்தன ஐநா சபையில் யாப்பானுக்கு ஆதரவாக உரையாற்றியதிலிருந்து தொடங்கி இரண்டு நாடுகளுக்கும் இடையே அரசியல், பொருளாதார, பண்பாட்டு உறவுகள் மிகச் செழிப்பாக காணப்பட்டன. ஆனால் அண்மைக் காலங்களில் குறிப்பாக கோட்டாபய ராஜபக்ஷ அரசுத் தலைவராக வந்தபின் யப்பானுடன் தொடர்புடைய. இரண்டு விடயங்களில் அரசாங்கம் ஜப்பானை திருப்திப்படுத்தும் விதத்தில் நடக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது. முதலாவது விடயம் ஜப்பானின் உதவியோடு கட்டப்பட்டவிருந்த அதிவேக மின்சாரத் தொடரூந்து சேவைத் திட்டம்.இதை இலங்கை அரசாங்கம் இடையில் நிறுத்தி விட்டது. ஏனெனில் இரண்டு நாடுகளும் ஒத்துக் கொண்ட ஒரு ஒப்பந்தத்தின் பிரகாரம் அந்த வேலைகள் தொடங்கப்பட்டன. அவற்றை இடையில் திடீரென்று அரசாங்கம் நிறுத்தியதால் இதுவரையிலும் செலவு செய்யப்பட்ட தொகை என்று கூறி ஐநூறு கோடி ரூபாய்களுக்கும் அதிகமாக ஒரு தொகையை உடன்படிக்கையில் சம்பந்ப்தபட்ட ஜப்பானிய நிறுவனம் கேட்கிறது.

அதைப்போலவே கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவும் ஜப்பானும் சேர்ந்து புனரமைப்பதற்காக ஓர் உடன்படிக்கை சில ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்டது. ஆனால் கோட்டாபயவின் அரசாங்கம் அந்த உடன்படிக்கையை கைவிட்டுவிட்டது. இதனாலும் யப்பான் இலங்கை அரசாங்கத்தின் மீது அதிருப்தியுற்றிருக்கிறது.

இவை தவிர கோட்டாபய ராஜபக்சவின் அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து ஜப்பானில் இருந்து வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுவதை நிறுத்திவிட்டது. இதுவும் ஜப்பானை விலகி நிற்க வைத்த ஒரு நடவடிக்கையாக பார்க்கப்படுகிறது.

இவ்வாறாக இலங்கை அரசாங்கத்தின் ராஜீய அணுகுமுறைகள் காரணமாக யப்பான் சந்தோசமாக இல்லை என்பதனால்தான் இலங்கைக்கு நன்கொடையாக தடுப்பூசிகளை தருவதற்கு இன்று வரையிலும் முன்வரவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்வாறு நாட்டின் தலைநகரம் அமைந்திருக்கும் ஒரு மாகாணத்தில் வசிப்பவர்களுக்கு வாக்குறுதி அளித்தபடி இரண்டாம் கட்டத் தடுப்பூசிகளை போட முடியாதபடி இலங்கை தத்தளிக்கிறது. இதற்குக் காரணம் இலங்கைத்தீவின் ஒரு பக்கச் சார்பான வெளியுறவுக் கொள்கைதான் என்று ஒரு பகுதி விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

அதேசமயம் மருத்துவத் துறை சார்ந்தவர்கள் தெரிவிக்கும் தகவல்களின்படி இதுவிடயத்தில் இலங்கைத்தீவின் சுகாதாரத் துறையும் வைரசுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் கட்டமைப்பும் தூர நோக்குடன் செயற்படவில்லை என்பது சுட்டிக்காட்டப்படுகிறது. முதலில் கிடைத்த தடுப்பூசிகளை இரண்டாக பிரித்து இரண்டாவது டோசையும் போடக் கூடிய விதத்தில் ஒரு தொகுதியை சேமிப்பில் வைத்துக்கொண்டுதான் அரசாங்கம் மேல் மாகாணத்தில் முதற்கட்ட தடுப்பூசியை ஏற்றி இருக்க வேண்டும். ஆனால் அப்படி செய்யப்படவில்லை. சீனா வழங்கிய தடுப்பூசிகளின் விடயத்திலும் அதுதான் நடந்திருக்கிறது என்று சுட்டிக்காட்டப்படுகிறது. அதாவது முதல்கட்டமாக தடுப்பூசி ஏற்றப்பட்டவர்களுக்கு அடுத்த கட்டமும் ஏற்றவேண்டும் என்று சிந்தித்து உரிய தொகையை சேமிப்பில் வைத்திருக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் அதைத் திட்டமிட்டுச் செய்யத் தவறியிருக்கிறது.

இவ்வாறு தடுப்பூசிக்காகக் காத்திருப்பது என்பது தனிய ஒரு மருத்துவ விவகாரம் மட்டும் அல்ல. அதற்கும் அப்பால் அது ஒரு ராஜ்ய விவகாரமாகவும் காணப்படுகிறது. இலங்கை அரசாங்கம் தடுப்பூசிகளையும் கெட்டித்தனமாக நிர்வகிக்கவில்லை. புவிசார் அரசியல் நிலவரங்களையும் வெற்றிகரமாக நிர்வகிக்கவில்லை. அதன் விளைவாக நாட்டு மக்கள் தடுப்பூசிகளுக்காகவும் காத்திருக்கும் ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். சில நாட்களுக்கு முன் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன கூறியுள்ளார் அஸ்ட்ரா செனெகா தடுப்பூசி பெற்றவர்களுக்கு இரண்டாவது டோஸாக பைசர் தடுப்பூசி செலுத்தப்படும் என்று.அதாவது அஸ்ரா செனெக்கா இனிக் கிடைக்காது என்று பொருள்.

### வீணாவின் கவிக்கணை

தன் சிரசில் கால்
வைத்து நிற்பது, தன்னை
படைத்தவனே ஆயினும்,
அவள் எழாமல் இருப்பது,
அவனுக்கு பயந்தல்ல,
அவள் திமிறி எழுகையில்
அவன் விழுந்து போவதை
அவள் விரும்பாததால் மட்டுமே!
அடங்கி செல்வதால்
பெண் அடிமையல்ல,
அடக்க முயல்வதால்
நீ கடவுளுமல்ல!
அவளை அடக்க நினைத்து
நீ அடையப்போவது,
வெறும் வெறுப்பேயன்றி
அவள் உள்ளம் அல்ல,
அவள் மனத்தை புரிந்து,
அவள் மடியில் சாய்ந்து
கதை பேசிப்பாரு,
நீ இழந்த அன்னையையும்,
தோள் கொடுக்கும்
தோழியையும், அவளுள்
காண்பாய்ப்பாரு!!!

# இலங்கையில் புலனாய்வு பணிக்காக மீண்டும் அழைக்கப்படும் முன்னாள் படையினர்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)



**நா**ட்டை இராணுவ மயப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர்களைப் புலனாய்வுத் தகவல்களைச் சேகரிப்பதற்காக நியமிக்க இலங்கை இராணுவம் ஒரு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

கடந்த 08 ஜுன் 2021 அன்று மேற்கு கட்டளைப் பிராந்தியத்திற்கு உட்பட்ட பிரதேசங்களிலுள்ள காலாட்படை அணிகளுக்கு இரகசிய உத்தரவு ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. அந்த உத்தரவில் பணிக்கு மீண்டும் திரும்ப விருப்பமுள்ள முன்னாள் படை வீரர்களின் தகவல்களை ஜுன் 14க்கு முன்னதாக அனுப்பி வைக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

"முன்னோக்குச் செல்லும் உத்தி" என்ற பெயரில் செயல்படுத்தப்பட்டு வரும் ஐந்தாண்டு திட்டத்தின் ஒரு பகுதியாக இது நடைமுறைப்படுத்தப்படுகிறது. இலங்கை இராணுவத் தளபதியால் உருவாக்கப்பட்டிருக்கும் இந்த உத்தியின் படி, இதக் கட்டளை பாதுகாப்பு படையினரின் மேற்குத் தலைமையகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த உத்தரவின் நகலை தாங்கள் கண்டுள்ளதாக இலங்கையில் ஜனநாயகத்திற்கான ஊடக அமைப்பு ஜே டி எஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தின் கூற்றின்படி நாட்டின் நான்கு நிர்வாக மாவட்டங்கள் மற்றும் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, மாத்தறை, காலி, புத்தளம், குருநாகல, ரட்ணபுர மற்று கேகா-லை ஆகிய மாவட்டங்கள் மேற்கு கட்டளைப் பிராந்தியத்தின் கீழ் வருகிறது. இலங்கைத் தீவின் 29.37 விழுக்காடு நிலப்பரப்பைக் கொண்ட இந்தப் பிராந்தியம் மொத்தமாக 19,475 சதுர கிலோமீட்டர்களை உள்ளடக்கிய பகுதியாகும். அதுமட்டுமின்றி நாட்டின் மக்கள் தொகையில் பாதிக்கும் மே-லாக அதாவது 12 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் அந்தப் பிராந்தியத்தில் வாழ்கின்றனர்.

புதிதாக பதிவு செய்யப்படும் முன்னாள் படை வீரர்கள், "உள்ளூர் புலனாய்வுத் தகவல்களைத் திரட்டுவது, சட்ட விரோத செயல்களுக்கு எதிராகப் போராடுவது (மணல் அள்ளுதல், போதைப் பொருள் கடத்தல் போன்றவை), இயற்கை பேரி-டர் காலங்களில் அவசரக்கால சேவைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டங்கள் மற்றும் இதர சமூக சேவைகளில் பணியாற்றுவார்கள்" என்று பிரிகேடியர் ரொஹான் வஜிர பொன்னம்பெரும கையெழுத்திட்டுள்ள அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக 2019 நவம்பர் மாதம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, இலங்கையில் இராணுவ மயமாக்கல் பாரிய ஏற்றம் கண்டுள்ளது. கோவிட்-19 பரவலை-க் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை கையாளுவதற்கு என்று கூறப்பட்டு இந்த ஆண்டு ஜனவரி மாதம் 25 இராணுவ அதிகாரிகள் மாவட்ட இராணுவ ஒருங்கிணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர். நாட்டின் கோவிட் தடுப்பு செயலணிக்கு இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவே தலைமையேற்றுள்ளார். இலங்கையில் குறைந்தபட்சம் 40 முக்கிய அரச பதவிகளுக்கு முன்னாள் இராணுவத்தினர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது.

இந்த ஆண்டு ஜனவரியில், ஜே டி எஸ், உண்மைக்கும் நீதிக்குமான சமாதான செயற்திட்டமான ஐடிஜேபி ஆகியவை நிர்வாகத்தில் இராணுவத்தினர் சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தினர் இடம்பெற்றுள்ளனர் என்கிற விரிவான அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கையின்படி குறைந்தது 40 முன்னாள் இராணுவத்தினர் அரசின் முக்கியமான பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.


MONEY PROBLEMS?™

ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்

உங்களைக் கேளுங்கள்?



- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்

Scarborough / Downtown Toronto: 416-489-2000
Mississauga / Brampton: 416-650-5400



| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
|---|---|---|---|---|
| 201-4433 Sheppard Ave. E Scarborough, ON, M1S 1V3 | 800-120 Eglinton Ave. E Toronto, ON, M4P 1E2 | 306-1280 Finch Ave. W North York, ON, M3J 3K6 | 110-93 Dundas Street E. Mississauga, ON, L5A 1W7 | 201-7990 Kennedy Rd. South, Brampton, Ontario, L6W 0B3 |



Mark Shamly
Tamil Consultant

Proudly Served over 15,000 clients since 2004
Visit : GtaCredit.Com

Ajay Oberoi
Experienced Credit Counsellor

**25-வது ஆண்டுவிழா** காணும் உதயன் அதிபர் திரு, திருமதி லோகேந்திரலிங்கம் தம்பதியருக்கும், பணிபுரியும் அனைத்து அன்பர்களுக்கும், எமது **SAREGA மியூசிக்** பள்ளியில் இசை பயிலும் அனைத்து மாணவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் சார்பிலும் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள். இந்த 25 ஆண்டுகள், என்னையும், எமது **SAREGA மியூசிக்** பள்ளியினையும் பலவிதங்களில் பாராட்டியும், ஊக்குவித்தும் நீங்கள் தொடர்ந்து கொடுக்கும் ஆதரவிற்கும் எமது மனமார்ந்த நன்றிகள். எமது 17-வது ஆண்டுவிழாவில் தாங்களும் சிறப்பு விருந்தினர்களாக வந்து எம்மையும், அனைத்து உறவுகளையும் பெருமை படுத்தினீர்கள். உங்கள் பணி இன்னும் பல்லாண்டுகள் சிறக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**அன்புடன், நியூ யார்க் ராஜா - இசை அமைப்பாளர்/இசை ஆசிரியர்**



















சென்ற வருடம் (2020), மலரும் மொட்டுக்கள் என்ற மியூசிக் ஆல்பம் வெளியிடப்பட்டது. இந்த இசைத் தொகுப்பில், 10 வயது முதல் உள்ள எமது இசைப்பள்ளியின் மாணவர்களை இசை அமைப்பாளர்களாக அறிமுகம் செய்தோம். அனைவருக்கும், நான் ஒரு உதவி இசை அமைப்பாளராக பணிசெய்து, பெருமைப்பட்டேன். பல பிரபல பாடகர்களுடன், நமது பாடகர்களும் பாடி பெருமை சேர்த்தனர். இந்த இசைத்தொகுப்பில் இடம்பெற்ற அனைத்து பாடல்களும், YouTube இணையத்தளத்தில் உள்ளன. அனைவரும் இப்பாடல்களை, கேட்டும், பார்த்தும், ரசிக்கும்படி அன்புடன் வேண்டுகிறேன்.

**அன்புடன், நியூ யார்க் ராஜா - இசை அமைப்பாளர்/இசை ஆசிரியர்**

**416 884 7288**

**#Malarum Mottukkal**

**YouTube: Malarum Mottukkal**

**Email: learn@saregamusic.com**

# BRAMPTON CITIZEN OF THE YEAR-2020 "ARTS ACCLAIM AWARD"

## "கலை பாராட்டு விருது"

### PRESENTED TO NEW YORK RAJA




உதயன் பத்திரிக்கையின் 25**வது ஆண்டுவிழா** கொண்டாடும் இந்த வாரத்தில், எமக்கு இந்த நல்ல செய்தி வந்ததும், இசை அமைப்பாளர், **SAREGA Music** இசைப் பள்ளியின் ஆசிரியர் மற்றும் நிறுவனர் **NEW YORK RAJA**-வை உதயன் பத்திரிக்கையின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு, அவரை தொடர்பு கொண்டோம். இந்த விருதை நியூ யார்க் ராஜா, அவரது மானசீக குருவாக விளங்கும் திரு**MSVISWANATHAN**அவர்களுக்கு சமர்ப்பிப்பதாகவும், தனது சார்பில் **Citizen of the Year Award Committee Members** அனைவருக்கும், இந்த கலைஞர்களுக்கான அரிய,பெருமைக்குரிய விருதை தனக்கு வழங்குமாறு பரிந்துரை செய்த அனைவருக்கும், **BRAMPTON** நகர சபைக்கும் தமது நன்றி-களை தெரிவித்துக்கொண்டார். **BRAMPTON** நகரம், வழங்கும் 2-வது விருதாகும் இது. **9** ஆண்டுகளுக்கு முன், **SAREGA** இசைப் பள்ளியின் **10** வருட சேவைக்காக **2012 - CITIZEN OF THE YEAR** விருதையும் பெற்றார்.

நியூ யார்க் ராஜா-வின் விருதுக்கான அவருடன் விருது பெற்ற மற்றவர்களுடனான புகைப்படமும், நியூ யார்க் ராஜா-வின் இசைப் பயணத்திலான சில புகைப் படங்களும், உங்களுக்காக இங்கே.


























சென்னை டிசம்பர் 28, 2019 - காமராஜ் அரங்கம், 'உனக்கென்ன மேலே நின்றாய்' நிகழ்வில் எடுத்த புகைப்படங்கள்

ஜூன் 24 - மெல்லிசை மாமன்னர் திரு **MS Viswanathan** அவர்களின் பிறந்த தினமாகும். உலகெங்கிலும் உள்ள தமிழர்கள், இசைக் கலைஞர்கள், இசை அமைப்பாளர்கள் அனைவருக்கும் 'மானசீக குருவாக' விளங்கும் திரு **MS Viswanathan** அவர்களின் மேல் மிகுந்த அன்பும், பாசமும், மரியாதையும் கொண்ட எனக்கு, அவரின் உன்னதமான நட்பும், அந்த நட்பின் மூலம் அவரை பலமுறை சந்திக்கும் பாக்கியமும், ஆசீர்வாதங்களும் கிடைத்தது தான் எத்தனையோ ஜென்மங்கள் செய்த புண்ணியம் என தெரிவித்தார்.. இந்த இனிய நன்னாளில், அவரின் ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். நியூ யார்க் ராஜா, தனது இசையமைப்பில் பல இசைத் தொகுப்புகளையும், அவரது **SAREGA Music** இசைப்பள்ளியின் மாணவர்களை இசை அமைப்பாளர்களாகவும் அறிமுகம் செய்தவர். அவரது இசை அமைப்பில் பல பிரபல பாடகர்கள் பாடி இருந்தாலும், தனது இசை அமைப்பில் தனக்காக மெல்லிசை மாமன்னர் தமது சுயசரிதை சாயலில் உத்திரமேரூர் கோதண்டராமன் அவர்கள் எழுதிய பாடலை பாடிக் கொடுத்ததையே மிகவும் பெருமையாக கருதுகிறார். இந்த இனிய சந்தர்ப்பத்தில் அந்த பாடலையும், பாடல் பதிவில் ஏற்பட்ட அனுபவங்களையும் நம்மிடையே பகிர்ந்து கொண்டார்.

**உதயன் பத்திரிக்கையின் சார்பில், நியூ யார்க் ராஜா-விற்கு பாராட்டுக்களையும், இன்னும் பல விருதுகள் கிடைக்கப்பெற வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.**

# எட்டுவழிச்சாலை, வேளாண் சட்டம், சிஏஏ போராட்ட வழக்குகள் ரத்து: முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

எட்டுவழிச் சாலை, வேளாண் சட்டம், சிஏஏ, மீத்தேன், நியூட்ரினோ திட்டங்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்தியவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் ரத்து செய்யப்படும் என முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார்.தமிழக சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தொடர் கடந்த 21ஆம் தேதி தொடங்கியது. இந்தக் கூட்டத்தின் முதல் நாளில் ஆளுநர் உரையாற்றினார். பின்னர் அலுவல் ஆய்வுக் குழுவில் ஜூன் 24 வரை கூட்டத்தை நடத்துவது என முடிவெடுக்கப்பட்டது.

ஆளுநர் உரையின் மீதான நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது சட்டப்பேரவை உறுப்பினர்கள் உரையாற்றினர், கேள்வி எழுப்பினர்.இறுதியாக இன்று காலை பேரவை தொடங்கியதும் முதல்வர் ஸ்டாலின், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக உறுப்பினர்கள் வைத்த வாதம், எழுப்பிய கேள்விகளுக்கு பதில் அளித்துப் பேசினார்.''நீதிக்கட்சி ஆட்சிப் பொறுப்பேற்ற 100வது ஆண்டில் திமுக ஆட்சி அமைந்ததை பெருமையாகக் கருதுகிறேன். நீதிக்கட்சியின் தொடர்ச்சி அண்ணா. அண்ணாவின் தொடர்ச்சி கருணாநிதி, கருணாநிதியின் தொடர்ச்சி நான், இந்த அரசு. இந்த அரசின் கொள்கைகளைத் தமிழகம் எட்டவேண்டிய இலக்கு, இந்த அரசின் தொலை நோக்கைத்தான் ஆளுநர் உரையில் சுட்டிக்காட்டப்பட்டது.

நீதிக்கட்சியின் முதலாவது பிரதம அமைச்சர்



கடலூர் ஏ.சுப்பராயலு ரெட்டியார், காங்கிரஸ் கட்சியின் முதல்வராக இருந்த காமராஜர், திமுகவைத் தோற்றுவித்து முதல்வராகப் பொறுப்பேற்ற அண்ணா, இந்தத் தமிழகத்தை 19 ஆண்டுகள் ஆட்சி செய்த கருணாநிதி மற்றும் முதல்வராக இருந்த தகுதிமிக்க ஏனைய சான்றோர்களையும் நினைவுகூர்வது எனது கடமையாகும், நமது முன்னோர்களை நினைவுகூர்வது என்பது தமிழர் பண்பாடு ஆகும்.இந்தக் கூட்டத்தொடரில் திமுக, அதிமுக, காங்கிரஸ், இடதுசாரிகள், மதிமுக உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் 22 உறுப்பினர்கள் கருத்துகளை எடுத்து வைத்துள்ளார்கள். அவர்கள் வாதத்தை நான் ஆலோசனைகளாக எடுத்துக்கொள்கிறேன்.

ஏனென்றால் நான் அண்ணாவின் அரசியல் வாரிசு. கருணாநிதியின் கொள்கை வாரிசு. ஐந்தாண்டு ஆட்சி செய்யும் அரசு, கொள்கை திட்டங்கள் அனைத்தையும் ஆளுநர் உரையில் சொல்லிவிட முடியாது. ஆளுநர் உரை முன்னோட்டம்தான். அதாவது ஆளுநர் உரை ட்ரெய்லர் தான். முழு நீளத் திரைப்படத்தைத் திரையில் காண்பர் என்பது போல, மேற்கொண்டு வரும் பயணத்தில் சவால்கள், அதைச் சந்திக்கும் சவால்கள் அனைத்தும் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்படும்''. இவ்வாறு ஸ்டாலின் பேசினார்.

எட்டுவழிச்சாலை உள்ளிட்ட மத்திய அரசு கொண்டுவந்த திட்டங்களுக்கு எதிராகப் போராடிய மக்கள் மீது போடப்பட்ட வழக்குகளை திரும்ப பெறுவதாக முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார். "கடந்த காலங்களில் மக்கள் நலனுக்கு எதிராக மத்திய அரசு கொண்டு வந்த புதிய வேளாண் திருத்தச் சட்டங்கள், இந்தியக் குடியுரிமைச் சட்டம், எட்டு வழிச்சாலை, மீத்தேன், நியூட்ரினோ கூடங்குளம் திட்டத்துக்கு எதிராக அறவழியில் போராடிய பொதுமக்கள் மீது போடப்பட்ட திரும்பப் பெறப்படும்" என்று ஸ்டாலின் தெரிவித்தார். இதேபோன்று கடந்த ஆட்சியில் பத்திரிகையாளர்கள் மீது போடப்பட்ட வழக்குகளையும் திரும்ப பெறுவதாக முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார்.

# கூட்டாட்சி தத்துவமே அடங்கியிருக்கிறது: ஒன்றியம் என்ற வார்த்தையை பார்த்து மிரள தேவையில்லை பா.ஜனதாவுக்கு, மு.க.ஸ்டாலின் பதில்



ஒன்றியம் என்ற வார்த்தையை பார்த்து யாரும் மிரளத் தேவையில்லை என்று பா.ஜ.க. உறுப்பினருக்கு, மு.க.ஸ்டாலின் பதில் அளித்துள்ளார்.

தமிழக சட்டசபையில் நேற்று கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் கீழ் நயினார் நாகேந்திரன் (பா.ஜ.க.) பேசினார். அப்போது நடந்த விவாதம் வருமாறு:

நயினார் நாகேந்திரன் (பா.ஜ.க.) : கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை தொடங்கி வைத்து பேசிய தி.மு.க. உறுப்பினர் உதயசூரியன், எல்லோரும் ஜாதகம், ஜோசியம் பார்த்தார்கள். ராகு, கேது அதையெல்லாம் தாண்டி எனது தலைவருக்கு சூரியன் உச்சத்தில் உள்ளது என்று கூறினார். நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ அதெல்லாம் தெரியாது. மன்னர்கள் போருக்கு போகும் போது ஜோசியம் பார்த்துவிட்டு தான் செல்வார்கள். நீங்கள் நாள் பார்த்தீர்களோ, நட்சத்திரம் பார்த்தீர்களோ எனக்கு தெரியாது. ஆனால் சட்டசபையை அமாவாசையில் தான் ஆரம்பித்திருக்கிறீர்கள். வெற்றி பெற்று வந்திருக்கிறீர்கள் வாழ்த்துக்களை சொல்லியிருக்கிறோம்.

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் மிருக லக்கனத்தில் தான் வேட்பு மனு தாக்கல் செய்தார். 7ந்தேதி முதல்அமைச்சராக பதவி ஏற்ற போதும் மிருகலக்கணம் தான். சூரியன் உச்சத்தில் இருந்தது. நான் ஒன்றும் ஜோசியக்காரன் கிடையாது. எனக்கு தெரிந்ததை சொல்கிறேன்.

இன்றைக்கும் சூரியன் உச்சத்தில்தான் இருக்கிறது. அடுத்தக்கட்ட பேச்சை தொடங்குங்கள். தொகுதி பிரச்சினையை பற்றி பேசுங்கள்.

நயினார் நாகேந்திரன் (பா.ஜ.க.) : எல்லோரும் இப்போது ஒன்றிய அரசு என்று சொல்கிறார்கள். ஒன்றிய அரசு என்ற வார்த்தையை தமிழக அரசு பயன்படுத்துவது ஏன்?. ஆங்கிலத்தில் 'ப்ளீஸ் டேக் யூவர் சீட்' என்றால் சேரை தூக்கி கொண்டு நிற்க முடியாது. எந்த இடத்தில் எப்படி பொருள் கொள்ள வேண்டும் என்று தெரியவேண்டும்.

எதற்காக ஒன்றிய அரசு என்று சொல்லப்படுகிறது என்று தெரியவில்லை. சொல்லில் குற்றம் இல்லை. ஆனால் பொருளில் குற்றம் இருக்கிறது. எந்த எண்ணத்தோடு இது சொல்லப்படுகிறது என்பதை முதல்அமைச்சர் விளக்க வேண்டும். எந்த உள்நோக்கத்தோடு ஒன்றிய அரசு என்று சொல்லப்படுகிறது. (அப்போது குறுக்கீட்டு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்)

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்:'ஒன்றிய அரசு' என்று சொல்வதை, ஏதோ சமூகக்குற்றம் போல யாரும் நினைக்க வேண்டாம். அப்படி சிலர் கருதிக் கொண்டிருக்கிறார்கள். அது உள்ளபடியே முழுக்க முழுக்க தவறு. சட்டத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ, அதைத்தான் நாங்கள் சொல்கிறோம். நமது அரசியலமைப்புச் சட்டத்தின் முதல் வரி, "இந்தியா, அதாவது பாரதம் மாநிலங்களைக் கொண்ட ஓர் ஒன்றியமாய் இருக்கும்'' என்றுதான் உள்ளது. அதைத்தான் பயன்படுத்துகிறோமே தவிர, சட்டத்தில் இல்லாததை நாங்கள் பயன்படுத்தவில்லை.

'ஒன்றியம்' என்பது தவறான சொல் அல்ல; 'மாநிலங்கள் ஒன்று சேர்ந்தது' என்பதுதான் அதனுடைய பொருள். இன்னும் சிலர் அண்ணா சொல்லாததை, கருணாநிதி சொல்லாததை நாங்கள் சொல்லி வருவதாகக் குறிப்பிட்டு, அதை விமர்சனம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

தி.மு.க.வுடைய 1957ம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலேயே 'இந்திய யூனியன்' என்றுதான் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது. 1963 ஜனவரி 25, நாடாளுமன்ற மாநிலங்களவையில், அண்ணா பேசுகிறபோது, குறிப்பிட்டார்கள் "அரசினுடைய இறைமை என்பதற்கு நாம் மேற்கொள்ளும் பொருள் என்ன? அரசியல் இறைமையானது, பொது மக்களிடம் நிலைத்துள்ளது என அரசியலமைப்பின் முகவுரை கூறுகிறது. சட்டம் சார்ந்த இறைமையானது, கூட்டாட்சி ஒன்றியத்துக்கும், அதன் அங்கங்களுக்கும் இடையே அதாவது மாநிலங்கள் பிரித்துத் தரப்பட்டுள்ளது'' என்றுதான் பேசியிருக்கிறார்.

'சமஷ்டி' என்ற வார்த்தையை ம.பொ.சி. பயன்படுத்தியிருக்கிறார்கள். 'வெளியேறுக மிகுதியான அதிகாரக் குவிப்பு வருக உண்மையான கூட்டாட்சி' என்று மூதறிஞர் ராஜாஜி அவர்களே எழுதியிருக்கிறார்கள். எனவே, ஒன்றியம் என்ற வார்த்தையைப் பார்த்து யாரும் மிரளத் தேவையில்லை. அந்த ஒரு வார்த்தையில் கூட்டாட்சித் தத்துவம் அடங்கியிருக்கிறது. அதற்காகத்தான் அதை நாங்கள் பயன்படுத்துகிறோம் பயன்படுத்துவோம் பயன்படுத்திக் கொண்டேயிருப்போம்.

நயினார் நாகேந்திரன் (பா.ஜனதா): முதல் அமைச்சராக பதவி ஏற்றதில் இருந்து அனைத்து கட்சி கூட்டத்தில் முதல்அமைச்சர் நடந்து கொண்ட விதம் பாராட்டுதலுக்குரியது. எல்லாருக்குமான அரசு என்று சொன்னாலும், மெட்ரோ ரெயில் திட்டத்தில் கோவை புறக்கணிக்கப்பட்டுள்ளது. அந்த மாவட்டம் மட்டும் ஏன் புறக்கணிக்கப்பட வேண்டும். சென்னைக்கு அடுத்தபடியாக வருமானம் தரக்கூடிய மாவட்டம். ஒருவேளை அ.தி.மு.க. கூட்டணி அதிகமாக வெற்றி பெற்றதால் புறக்கணிக்கப்பட்டிருக்கிறதோ?.


(அப்போது முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் குறுக்கீட்டு பேசினார்)

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்: கோவை மாவட்டம் எந்தெந்த வகையில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதற்கு நான் பதில் சொல்ல தயாராக இருக்கிறேன். இன்னும் சொல்லப் போனால் கோவைக்கு எய்ம்ஸ் மருத்துவமனை வேண்டும் என்று பிரதமரிடம் நான் கோரிக்கை வைத்திருக்கிறேன். கோவையை எந்த காரணத்தை கொண்டும் நாங்கள் புறக்கணிக்கவில்லை.

தொடக்கத்தில் இருந்தே சொன்னேன், தேர்தல் முடிவுகள் வந்து கொண்டிருந்த போது, ஆட்சி பொறுப்பேற்கும் அளவுக்கு மெஜாரிட்டி வந்திருக்கக்கூடிய சூழ்நிலையில் நான் பத்திரிகையாளர்களிடம், 'வாக்களித்தவர்கள் பெருமைப்பட வேண்டும். வாக்களிக்காதவர்கள் வருத்தப்பட வேண்டும்' என்று சொன்னேன். அப்படி என்பதுதான் எங்கள் ஆட்சியின் கொள்கை. தயவு செய்து தவறான கருத்தை நீங்கள் பதிவு செய்ய வேண்டாம். கோவையை எந்த காரணத்தை கொண்டும் நாங்கள் புறக்கணிக்கமாட்டோம். இன்னும் அங்குள்ள மக்கள் எங்களை ஏற்றுக் கொள்ள தயங்குகிறார்கள். அங்கு இன்னும் அதிகமான அளவுக்கு பணிகளை செய்வோம்.

எஸ்.பி.வேலுமணி (அ.தி.மு.க.): முதல் அமைச்சர் கோவையை புறக்கணிக்கிறார் என்ற கருத்து பரவலாக இருந்தது. தற்போதைய எதிர்க்கட்சி தலைவர் முதல்அமைச்சராக இருந்தபோது, 110 விதியின் கீழ் கோவைக்கு மெட்ரோ ரெயில் திட்டத்தை அறிவித்தார். எனவே இன்றைய முதல்அமைச்சர் அந்த திட்டத்தை கொண்டு வர வேண்டும் என்று கோவை மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன். அதை போல, கோவை மாவட்டத்துக்கு எய்ம்ஸ் கோரிக்கையை பிரதமரிடம் கேட்டதற்கு நன்றி தெரிவிக்கிறேன்.

நயினார் நாகேந்திரன் (பா.ஜ.க.) :திருநெல்வேலி மாநகராட்சியில் ஸ்மார்ட் சிட்டி திட்டம் நடைபெற்று கொண்டிருக்கிறது. ரூ.250 கோடியில் திட்டம் தயாரிக்கப்பட்டு இப்போது அந்த பணிகள் மெதுவாக நடந்து கொண்டிருக்கிறது. அந்த திட்டத்தை முதல்அமைச்சர் விரைவுபடுத்த வேண்டும். இவ்வாறு விவாதம் நடந்தது.


6 Bedrooms, 5 Washrooms
Over 4800 sqft
$2,599,900
CENTURY 21.
People's Choice Realty Inc.
JUST LISTED
32 Burlwood Road Brampton
In prestigious castlemore area
Uthayan Markandu
Real Estate Broker
Services
• Selling your home for top value
• Free re-modeling
• Professional home staging
• Buying your dream home anywhere in Ontario
• Commercial and Residential Leasing
• Free market evaluation
• Full-time Real estate Broker.
JUST SOLD
Listed at $959,900.00
Sold at $1,015,000.00
39 Raithby Cres, Ajax
Cell (416)818-5493
uthayan4realestate.com

உ
சக்திமயம்

# ஸ்ரீ ஆதிபராசக்தி அம்பாள் தேவஸ்தானம்
# ஸ்ரீ கனகதுர்க்கை பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்

## 21வது ஆண்டு விழாவும் (2021)

**ஸ்ரீ ஆதிபராசக்தி இந்து ஆலயம் - டொரொன்ரோ**
**3021 Markham Road, Units 45, 46 & 47 Scarborough ON M1X 1L8**
**e-mail: sakthi1226@gmail.com Tel: 416-293-1226 Fax: 416-293-1215**

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர் கபடு வராத நட்பும் கன்றாத வளமையும்
குன்றாத இளமையும், கழுபிணி இலாத உடலும் சலியதா மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும் தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும் தடைகள் வராத கொடையும்
தொலைாத நிதியமும், கோணாத கோலும் ஒரு துன்பம் இலாத வாழ்வும் துய்ய நின்பாதத்தில்
அன்பும் உதவிப் பெரிய தொண்டரொடு கூட்டு கண்டாய் அலைஆழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி அருள்வாமி அபிராமியே!

அம்பிகை அடியார்க்ளே!
ஸ்ரீபரம்பொருளினால் சிருஷ்டிக்கப்பட்ட இப்புண்ணிய பூவுலகின் கண்ணேயுள்ள ஐம்பெரும் கண்டங்களுள் செல்வச்செழிப்புடனும், விஞ்ஞான நுண்ணாராய்ச்சியினாலும் நிறைவுபெற்று விளங்கும் அமெரிக்கக் கண்டத்தின் வடபால் தலைசிறந்து திகழும் உலக அதிசயங்களில் ஒன்றான நயகரா நீர் வீழ்ச்சியைத் தன்னகத்தே கொண்டதுமான நீர்வளம், நிலவளம், மலைவளம் போன்ற இயற்கை வளங்களால் நிறைந்து விளங்குவதுடன் நூற்றுக்கும் மேற்பட்ட சைவ, வைஷ்ணவ திருக்கோயில்களால் நிறைந்து மிளிர்கின்ற கனடாத் திருநாட்டின் ஸ்காபரோ புண்ணிய ஸ்தலத்தில் கோவில் கொண்டு வேண்டுவார் வேண்டுவதை வாரி வழங்கும் அன்னையாம் ஸ்ரீ ஆதிபராசக்தி (ஸ்ரீகனகதுர்க்கா) அம்பாளுக்கு நிகழும் மங்களகரமான பிலவ வருடம் ஆனித் திங்கள் 19ம் நாள் (03.07.2021) சனிக்கிழமை அஸ்வினி நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய பகல் சுபவேளையில் 8:30 மணிக்கு மேல் 9:30 மணிக்குள் துவஜாரோகத்துடன் (கொடியேற்றத்துடன்) ஆரம்பமாகித் தொடர்ந்து 17 தினங்கள் மகோற்சவம் சிறப்பாக நடைபெற அம்பாள் திருவருள் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மகாபெரியவாள் பரிபூரண அநுக்கிரஹத்துடன் கொடியேற்றம் நடைபெறவுள்ளது.

இவ்விழாக்காலங்களில் நேர, கால, நிர்ணயம் தவறாமல் நடைபெறும் கிரியைகளில் அனைவரும் கலந்து சிறப்பிப்பதோடு பால், தயிர், பழங்கள், பூக்கள் போன்ற அபிஷேகத் திரவியங்களையும் வழங்கி அம்பாளின் திருவருள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கின்றோம்.

## பிரம்மோற்சவ விஞ்ஞாபனம் 2021

| | |
|---|---|
| 02.07.2021 வெள்ளி<br>உபயம்<br>திருமதி. சுலோச்சனா கிருஸ்ணமூர்த்தி | காலை 7:00 விக்னேஸ்வர பூஜை அனுக்ஞை கணபதி ஹோமம் 108 சங்காபிஷேகம் கும்ப பூஜை அங்குரார்ப்பணம் ரக்ஷபந்தனம்<br>9:30 வசந்த மண்டப பூஜை<br>10:00 பூர்வாங்க பூஜை அபிஷேகம் சமஸ்த தேவதா ஆவாஹனம்<br>மாலை 5:00 கிரஹ சாந்தி வாஸ்து சாந்தி மிருத்யுசங்கிரணம் |
| 03.07.2021 சனி | 8:30 துவஜா ரோகணம் (கொடியேற்றம்) நடைபெறும் |

### நிகழ்ச்சி நிரல் மற்றும் பிரம்மோத்ஸவ உபயதாரர்கள்

| | Day & Date | Utsavam / Utsava Vahanam | Morning Maha utsava Sponsors | Evening Maha utsava Sponsors |
|---|---|---|---|---|
| 1 | July 03 - Sat. | சிம்மவாகனம் | திரு. செல்வகுமார், திரு பரராஜசிங்கம் பொன்னுத்துரை குடும்பங்கள் | திரு. R. K. மூர்த்தி குடும்பம் |
| 2 | July 04 - Sun. | ஓங்கார வாகனம் | திரு. சத்யேந்திரன் குடும்பம் | திரு. சுதாகர் குடும்பம் |
| 3 | July 05 - Mon. | சூரியபிரபாவக் காட்சி | திரு. கைலாசபிள்ளை குடும்பம் | திரு. செந்தூரன் குடும்பம் |
| 4 | July 06 - Tue. | சந்திரபிரபாவக் காட்சி | திரு. அனுராக் குடும்பம் | திரு. திருமதி பிருந்தவன் குடும்பம் |
| 5 | July 07 - Wed. | நாகவாகனம் | திரு. சினனத்துரை குடும்பம் | திரு. நாதன் தியாகராஜன் குடும்பம்<br>திரு. சுஜி சபாநாதன் குடும்பம் |
| 6 | July 08 - Thu. | மயில்வாகனம் | திரு. வசந்தன் ராஜா ஐயா குடும்பம் | திரு. கணேஸ்வரன் குடும்பம் |
| 7 | July 09 - Fri. | கப்பல் திருவிழா | திரு. பத்மராஜா குடும்பம்,<br>திரு. சச்சிதானந்தன் குடும்பம் | திரு. திருமதி மோகன் மதி குடும்பம்<br>திரு. திருமதி கௌரி தவபாலசிங்கம் |
| 8 | July 10 - Sat. | அன்னவாகனம் | திரு. தி திருக்கேஸ்வரன் குடும்பம் (ரஞ்சனி சட்ட அலுவலகம்) | திரு. லோகேந்திரலிங்கம் குடும்பம் |
| 9 | July 11 - Sun | மஞ்சத் திருவிழா | திரு. தில்லையீசன் குடும்பம் | திரு திருமதி செல்வா குடும்பம் |
| 10 | July 12 - Mon. | கஜ(யானை)வாகனம் | திரு. திருமதி சிவசோதிநாதன் குடும்பம் | திரு. தியாகராஜன் குடும்பம் |
| 11 | July 13 - Tue. | சிவலிங்க வழிபாடு கைலாச வாகனம் | திரு. திருமதி சிவலிங்கம் குடும்பம் | திரு. தவபுத்திரன்,<br>திரு. சிறீஸ்கந்தராஜா குடும்பங்கள் |
| 12 | July 14 - Wed. | பூந்தண்டிகை | திரு. லிங்கேஸ்வரன் குடும்பம் | திரு. முத்துக்குமாரு<br>திரு. ஜெகதீஸ்வரன்,<br>திரு. சந்திரகுமார்<br>திரு. லோகேஸ்வரன் குடும்பங்கள் |
| 13 | July 15 - Thu. | வேட்டைத்திருவிழா | திருமதி தில்லைநாயகி குடும்பம் | திரு. குணசேகர் குடும்பம் |
| 14 | July 16 - Fri. | சப்பறத்திருவிழா | திரு. கனகரத்தினம் குடும்பம் | திரு. மகாலிங்கம் குடும்பம் |
| 15 | July 17 - Sat. | தேர்த்திருவிழா | திருமதி யோகேஸ்வரி குடும்பம் | திரு. கமலநாதன் குடும்பம் (ஊஞ்சல் பிராயசித்த அபிஷேகம்) |
| 16 | July 18 - Sun. | தீர்த்தத் திருவிழா | திரு. குமரகுருபரன் குடும்பம் சூர்ணோற்சவம், தீர்த்தம் யாக கும்பாபிஷேகம் | திரு. விஜயராஜா குடும்பம் கொடியிறக்கும் வைபவம் |
| 17 | July 19 - Mon. | பூங்காவனம் | திரு. சிவகுமார் குடும்பம் (Suruthy Takeout & Catering) | பூங்காவனம் |
| 18 | July 20 - Tue. | பிராயச்சித்த அபிஷேகம் | திரு. கந்தசாமி கிரிசாந்தன் குடும்பம் | வைரவர் மடை |

குருமார்கள் விபரம்: ஆலய ஸ்தாபகர் பிரதமகுரு வேத கலா பூஷணம், ப்ரம்மஸ்ரீ. ஜம்புநாத சந்திரமௌலி சாஸ்த்திரிகளின் நல்லாசியுடன்
மகோற்சவ பிரதம குரு: சிவகாம ப்ரவீண சிவஸ்ரீ சுரேந்திர சிவாச்சாரியார் (சுரேன் ஐயா)
ஆலய குரு: ப்ரம்மஸ்ரீ. ஜம்புநாதன் சேதுராமன் சர்மா (ஸ்ரீ சுரேஷ் ஐயா)
ஸ்ரீ கௌரி சுப்ரபாத சர்மா, ப்ரம்மஸ்ரீ. சர்வ லோகேஸ்வரக்குருக்கள் (ஈசன் ஐயா)
பிரம்மஸ்ரீ மகேஷ்பாபு அவர்கள்
மற்றும் கனடாவிலுள்ள குருமார்களும் கலந்து சிறப்பிப்பார்கள்.

**காலை**
8:45 மணிக்கு கும்ப பூஜை
9:30 மணிக்கு மூலஸ்த்தான பூஜை
10:00 மணிக்கு யாக பூஜை
10:30 மணிக்கு ஸ்தம்ப பூஜை
11:00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
11:45 மணிக்கு வீதியுலா
12:30 மணிக்கு பிரசாதம் வழங்கல்

மங்கள இசை: சிவமயம் குழுவினர்
நித்திய புஷ்ப அலங்காரம் - பரந்தாமன் ஜய சாயி மலர்க்களஞ்சியம்

**குறிப்பு எதிர்வரும் 2022ம் ஆண்டு ஆலயத்தின் குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**திருவிழாக்காலங்களில் அனைவரும் வருகை தந்து அம்பிகையின் திருவருள் பெற்று வாழ்வீர்களாக!**
**இங்ஙனம் ப்ரம்மஸ்ரீ சந்திரமௌலி சாஸ்த்திரிகள்**

**மாலை**
5:00 மணிக்கு கும்ப பூஜை
5:30 மணிக்கு மூலஸ்த்தான பூஜை
6:00 மணிக்கு யாக பூஜை
6:30 மணிக்கு ஸ்தம்ப பூஜை
7:00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
8:00 மணிக்கு வெளிவீதி வலம்வருதல்
8:45 மணிக்கு பிரசாதம் வழங்கல்

# இரத்தினபுரி மாவட்டத்தில் மண்சரிவால் பாதிக்கப்பெற்ற 30 குடும்பங்களுக்கான உலர் உணவு பொருட்களை வழங்கிய ரொறன்ரோ மனித நேயக்குரல் அமைப்பு







இலங்கையில் இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள தெனியாய ஹேஸ் தேயிலை பெருந்தோட்டத்தில் மண்சரிவு மழை காற்று என்பவற்றினால் பாதிப்படைந்தது நாட்டில் விதிக்கப்பட்டுள்ள பயணத் தடை காரணமாக தமது அன்றாட வாழ்க்கையை கொண்டு செல்வதற்கு பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்த 30 குடும்பங்களுக்கான உலர் உணவு பொருட்களை கனடாவில் இயங்கிவரும் ரொறன்ரோ மனித நேயக் குரல் நிறுவனம் பெற்றுக்கொடுத்தது.



இந்த மக்கள் நகரத்துக்கு வருவதாயின் 14 கிலோ மீட்டர் தொலை-வில் உள்ள நியாய நகரத்திற்கு அல்லது 26 கிலோமீட்டர் தொலைவிலுள்ள எம்பிலிப்பிட்டிய நகரத்திற்கு அல்லது 42 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இறக்குவானை நகருக்கு செல்ல வேண்டி இருக்கின்றது.



பயணத் தடை காரண-மாக இத்தோட மக்கள் துயரத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.


இந்த நிலையில் கனடாவி-ல் இயங்கிவரும் ரொறன்ரோ மனித நேயக் குரல் நிறுவனம்நிறுவனத்தின் ஊடாக கிடைக்கப்பெற்ற உலர் உணவு பொதி களுக்கு இம்மக்கள் நன்றி தெரிவிக்கின்றனர்.



மேற்படி உலர் உணவுப் பொருட்கள் பாதிக்கப்பெற்ற மக்களைச் சென்றடைய தெனியாய பிரதேசத்தில் தமிழ்ப் பாடசாலை அதிபராகப் பணியாற்றும் திரு. உதயகுமார் தனது குழுவினருடன் மிகுந்த சவால்களுக்கு முகம் கொடுத்து பணியாற்றினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவருக்கும் அவரது குழுவினருக்கும் ரொறன்ரோ மனித நேயக் குரல் நிறுவனத்தின் தலை-வர் மற்றும் இயக்குனர்கள் ஆகியோர் நன்றி தெரிவித்துள்ளனர்.







30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

## ஸ்காபுறோ

# சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

*SUMMER SPECIAL* கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...



உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.

இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.








காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

# SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# கொரோனா பரவுதல் தணிந்து விட்டது என்பதற்கு தடுப்புஸீசி ஒன்றுதான் காரணமாக இருக்குமா?

- கௌசிகன்

உலக நாடுகள் பலவும் தற்போது தங்கள் பிரஜைகளுக்கு கொரோனா தடுப்பூசியை மிகவும் விரைவாகச் செலுத்தி அவர்களை நோய்த்தொற்று மற்றும் மரண பயம் ஆகியவற்றிலிருந்து காப்பாற்றுவதே நோக்கம் என்ற எண்ணத்தோடு செயலாற்றி வருகின்றன. செல்வந்த நாடுகள் பலவற்றில் கொவிட்-19 வைரஸ் தொற்றின் பரவுதல் படிப்படியாகத் தணிவடைந்து வருகின்றது. இலங்கையில் மக்கள் தொகையோடு ஒப்பிடுகையில் இறப்புக்களின் விகிதம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்தியாவில் கொரோனா தொற்று வேகமாகத் தணிந்து வருவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் மக்கள் தங்களது முகக்கவசத்தையே அகற்றி விடுமளவுக்கு கொரோனா பரவுதல் தணிந்து விட்டது. அமெரிக்காவிலும் அச்சம் தருகின்ற நிலைமை இப்போது கிடையாது.

உலகம் கொரோனா பேரிடரில் இருந்து விடுபடுவதற்கான காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது என்பதற்கான நம்பிக்கை அறிகுறியாகவே இதனைக் கொள்ள முடிகின்றது. இந்த முன்னேற்றத்துக்கு அந்நாடுகளைச் சேர்ந்த மக்களின் விழிப்புணர்வு செயற்பாடுகள் மாத்திரமே காரணமல்ல. கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசியே இதற்கான பிரதான காரணமாகும்.

கொவிட் தடுப்பூசியை தமது பிரஜைகளுக்கு ஏற்றுவதில் உலகின் ஒவ்வொரு நாடும் இப்போது பிரதான கவனம் செலுத்தி வருகின்றது. உலகின் பல நாடுகள் தங்களது பிரஜைகளில் ஐம்பது சதவீதத்துக்கும் மேற்பட்டோருக்கு கொரோனா தடுப்பூசியை ஏற்றியுள்ளன. மீதமானோருக்கு தடுப்பூசியை ஏற்றுவதில் அந்நாடுகள் தீவிர கவனம் செலுத்தி வருகின்றன. அந்நாடுகளில் கொரோனா தொற்றானது தணிவு நிலைமைக்கு வந்துள்ளதற்குக் காரணம் தடுப்பூசிதான் என்பதே உண்மை.

பிரான்ஸ் போன்ற சில நாடுகள் தங்களது பிரஜைகளில் 13 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி வழங்குவதில் கவனம் செலுத்தி வருகின்றன. நாட்டு மக்களில் அனைவருக்கும் தடுப்பூசி ஏற்றி விட்டால் கொரோனாவில் இருந்து முழுமையாக விடுதலை பெற்று விடலாமென்பதே மருத்துவ அறிவியலாளர்களின் நம்பிக்கையாக இருக்கின்றது. அதுவே உண்மையும் ஆகும்.

உலக கொடுந் தொற்றான கொரோனாவிடமிருந்து மனித குலம் விடுபடுவதற்கான ஒரே வழி தடுப்பூசியொன்றேதான் என்பதே இன்று நிருபிக்கப்பட்ட உண்மையாக இருக்கின்றது. எனவே சுகாதாரப் பழக்கவழக்கங்களை மக்கள் கடைப்பிடிப்பது ஒருபுறமிருக்க, தடுப்பூசி ஏற்றிக் கொள்வதில்தான் விசேட கவனம் செலுத்த வேண்டுமென்பதுதான் முக்கியம்.

உலகில் கொவிட்-19 வைரஸ் தோற்றம் பெற்றதில் இருந்து சுமார் ஒரு வருட கால தீவிரமான ஆராய்ச்சிக்குப் பின்னரே அத்தனை தடுப்பூசிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்பதை அனைவரும் முதலில் கவனத்தில் கொள்ள வேண்டும். உலகின் மிகப் பிரபலம் வாய்ந்த மருத்துவ ஆய்வு நிறுவனங்கள் தங்களது மருத்துவ அறிவியலாளர்களின் கடுமையான உழைப்பின் பயனாகவே கொரோனா தடுப்பூசியைக் கண்டுபிடித்துள்ளன.

கொவிட் தடுப்பு மருந்துகள் யாவும் மனிதனின் உடல் தொகுதிகளை ஒத்ததான பிராணிகளான எலிகள், குரங்குகள் போன்றவற்றில் பரீட்சிக்கப்பட்ட பின்னர், மனிதனிலும் பரிசோதித்துப் பார்க்கப்பட்ட பின்னரே உலக மக்களின் பாவனைக்கென அங்கீகரிக்கப்பட்டுள்ளன. உலகின் பிரபல மருத்துவ அறிவியல் அமைப்புகள் மாத்திரமன்றி உலக சுகாதார நிறுவனமும் அங்கீகாரம் வழங்கிய பின்னரே தடுப்பு மருந்து ஊசிகள் மக்களின் பயன்பாட்டுக்கு வந்துள்ளன என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

எனவே கொரோனா தடுப்பூசி தொடர்பாக இணையத் தளங்கள் பலவற்றிலும், சமூக ஊடகங்களிலும் நாளாந்தம் வெளிவருகின்ற ஆதாரமற்ற புரளிகள் தொடர்பாக எவரும் வீண் கலக்கம் அடைய வேண்டியதில்லை. தவறான செய்திகளையும், புரளிகளையும் வெளியிட்டு மக்களை அச்சத்துக்கு உள்ளாக்கும் காரியத்திலேயே இவை போன்ற ஊடகங்கள் செயற்பட்டு வருவதை மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

தடுப்பூசிகள் தொடர்பாக சந்தேகமோ அவநம்பிக்கையோ தோன்றினால் அது பற்றி ஆய்வு செய்து விளக்கமளிப்பதற்கென்று சர்வதேச ரீதியில் உத்தரவாதம் வாய்ந்த நிறுவனங்கள் உள்ளன. அவ்வாறிருக்கையில் எழுந்தமானமாக புரளிகளை வெளியிடும் ஊடகங்களின் தகவல்கள் குறித்து மக்கள் அநாவசியமாக அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை. அத்தகவல்களை உதாசீனம் செய்து விடுவதே உகந்ததாகும்.

கொரோனாவில் இருந்து உலகம் விடுபடுவதற்கான ஒரேயோரு நம்பிக்கையாக தடுப்பூசியே இருக்கையில் அவசியமற்ற பதிவுகள் மீது மக்கள் கவனம் செலுத்த வேண்டியதில்லை. மக்கள் மத்தியில் இவ்வாறான வீண் அச்சத்தை ஏற்படுத்துவதானது, தடுப்பூசி திட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்துமென்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

உலகின் போக்குக்கு ஏற்ப இலங்கை மற்றும் இந்தியா போன்ற நாடுகளும் தமது பிரஜைகளுக்கு தடுப்பூசி வழங்குவதற்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டு வருகின்றதன. இதைப்போன்றே ஏனைய வளர்முக நாடுகளும் தங்கள் நாட்டு மக்களில் அநேகமானோருக்கு ஏற்கனவே தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. மீதியானோருக்கு தடுப்பூசி வழங்குவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. எனவே இலங்கை மக்களும் தடுப்பூசியின் மீதே முழு நம்பிக்கை கொள்ள வேண்டும்.

உலகின் பல நாடுகள் கொரோனாவுக்கு எதிரான தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்துள்ளன. அவற்றுக்கு உலக சுகாதார நிறுவனத்தின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது. அவ்வாறான தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்வதில் எதுவித தயக்கமும் தேவையில்லையென்பதே எமது மருத்துவ நிபுணர்களின் கருத்தாகவும் உள்ளது. இந்நிலையில் கொரோனா நோய்த் தொற்றையும் மரண பயத்தையும் மக்கள் மத்தியிலிருந்து அகற்றுவதற்கு தடுப்பூசிகள் முக்கிய காரணிகளாக விளங்குகின்றன என்று கொள்ளலாம்.




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments


உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
rotect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

(அத்தியாயம் 17)





## வந்தியத்தேவனின் பழையாற்றுப் பயணம்

'தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்தது பாரில் நீடிய பெருமைசேர் பதி பழையாறை' என்கிறார் சேக்கிழார். அத்தனை பெரிய நகரம் நந்திபுர விண்ணகரம். திருவாறு சத்திரத்தில் பட்டீச்சுரம், அரிச்சந்திர புரம் என்ற சிறிய நகரங்களைக் கொண்டது பழையாறையின் நான்கு திசைகளிலும் வடதளி, கீழ்தளி, மேற்றளி, தென்தளி என்னும் சிவனார் கோயில்கள் இருக்கின்றன. போர் வீரர்கள் குடியிருக்கும் ஆரியப் படைவீடு புதுப்படைவீடு, மணப்படை வீடு, பம்பை படை வீடு ஆகிய நாலு வீரபுரிகள் காணப்படுகின்றன. சுந்தர சோழ சக்கரவர்த்தியின் மாளிகையில் வீற்றிருந்த காலத்தில் வெளி நாடுகளில் இருந்து சிற்றரசர்களும், இராஜ தூதர்களும், மந்திரிப் பிரதானிகளும், சேனாதிபதிகளும் இங்கு வருவது வழக்கம் இதனால் பழையாறு எப்போதும் கலகலப்புடன் பரபரப்பாகக் காணப்படும். இப்போது சக்கரவர்த்தி தஞ்சைக்குப் போனபின் பழையாற்றின் சிறப்பு மங்கிவிட்டது. அங்குள்ள நந்தபுர விண்ணகரத்துப் பெருமாள் கோவிலில் திருவிழாக் கொண்டாட்டம் நடைபெறுகிறது. இங்கு ஆழ்வார்க்கடியான் பாடலும் இடம் பெறறது. பழையாறை அரண்மனைகளில் வாழும் மகாராணிகளும், இளவரசிகளும் அங்கு வந்தார்கள். அதில் பெரிய பிராட்டி என்று அழைக்கப்படும் செம்பியன் மாதேவி சிவஞானச் செல்வரான கண்டராதித்தரின் பட்டடத்து இராணி இவர் காதுகளில் ஆழ்வார்க்கடியான் பாடல் விழ, அவர் ஆழ்வார்க்கடியானை அழைத்து பாராட்டி, 'என் அரண்மனைக்கு வா' என்றார். அதற்கு ஆழ்வார்க்கடியான், 'வருகிறேன் தாயே தங்கள் சித்தம் என் பாய்க்கியம்' என்றான்.

சோழ மாளிகையில் செம்பியன் மாதேவி சபா மண்டபத்தில் நவரத்தினங்கள் இழைத்த சிம்மாசனத்தில் வீற்றிருக்க, அவர் அரசர்க்கரசி என்று சோழ அரச குடும்பத்தை சேர்ந்தவர்கள் தெய்வமாக மதித்து பாராட்டிக் கொண்டாடினர். இவரைக் காண்பதற்கு பலர் வந்திருந்தனர். அவர்களில் ஆழ்வார்க்கடியாரும், அவர் தமையன் ஈசான பட்டரும் வந்திருந்தனர். ஈசானப்பட்டர் 'சிவன் கோயில்களின் புனரமைப்புப் பற்றி செம்பியன் மாதேவியுடன் பேசிக்கொண்டேயிருந்தார். அப்பொழுது ஆழ்வார்க்கடியான் ஈசான பட்டருக்கு எதிராக வார்த்தைகளைப் பேசினார். சிவன் கோயில்களை மட்டும் திருத்தம் செய்யலாகாது திருமால் கோயிலையும் கொஞ்சம் பார்த்திட வேண்டும்' என்று ஆழ்வார்க்கடியான் கேட்டுக் கொண்டான்.

அப்பொழுது செம்பியன் மாதேவி, 'ஆகட்டும் அதைப் பற்றிய விபரம் என்னவென்ச் சொல் இப்பொழுது இங்குள்ளவர்கள் போகட்டும்' என்றார். எல்லோரும் அகன்றனர். செம்பியன் மாதேவி, 'நீ எங்கெங்கு யாத்திரை செய்தாய் ஏதாவது விசேடமான விசயம் கொண்டு வந்தாயா?' என்று திருமலையிடம் கேட்டார். 'ஆம் தாயே பல முக்கிய விடயங்களைச் சொல்கிறேன்' என்று ஆழ்வார்க்கடியான் தொடங்கினான், 'காஞ்சியில் இருக்கும் இளவரசர் கரிகாலர் இரண்டு ஓலைகளை ஒரு தூதுவரிடம் கொடுத்து தஞ்சைக்கு அனுப்பியிருக்கிறார். அவன் வீர பராக்கிரம சாலி, சாமர்த்திய சாலி அவன் தஞ்சையில் சக்கரவர்த்தியைச் சந்தித்து ஓலையை கொடுத்து விட்டதாக கேள்வியுற்றேன். சக்கரவர்த்தி மறு ஓலை தருவதாகச் சொன்னார். ஆனால் சின்னப் பழுவேட்டரையர் அவன் மீது சந்தேகித்ததால் அவன் கோட்டையை விட்டு தப்பி விட்டான். மற்றும் சம்பு வரையரின் கடம்பூர் மாளிகையில் பெரிய விருந்து நடைபெற்றது அங்கு பெரிய பழுவேட்டரையரும், அவருடன் இளைய ராணியின் பல்லக்கும் வந்திருந்தது. இந்த பல்லக்கில் நந்தினிக்கும் ஓலை எழுதி எச்சரிக்கை செய்ய எண்ணினேன். ஆனால் அந்தப் பல்லக்கில் உங்கள் அருமை மகன் மதுராந்தகன் வந்திருந்தார்'. இதைக் கேட்ட செம்பியன் மாதேவி திகைப்புற்று, 'இது என்ன சிவபக்தனான என் மகன் இப்படி மாறிவிட்டானே! இந்த சோழப் பேரரசிற்கு பெரும் தீங்கு வருகிறதே இது நான் செய்த குற்றம்' என்று புலம்பினார். பின்னர் அங்கு நடந்தவைகளை விபரமாக கேட்டுத் தெரிந்து கொண்டார். இவற்றைப் பற்றி குந்தவையிடம் பேசித் தடுக்க முயற்சிப்போம் என்றார். அதற்கு திருமலை, 'தாயே குந்தவை கூட இதற்கு உடந்தையாக இருக்கலாம்' உடனே செம்பியன் மாதேவி, 'ஆதித்த கரிகாலன், குந்தவைதேவி, அருள்மொழிவர்மன் யாவரும் நான் வளர்த்த பிள்ளைகள் குந்தவை என்னிடம் ஏதெனும் ஒன்றை சொல்லவில்லை என்றால் அதற்கு தக்க காரணம் இருக்கும் அவளிடம் சந்தேகப்படுவதிலும் நான் உயிர் விடுவதே மேல்' என்றார். ஆழ்வார்க்கடியானோ 'உங்கள் நம்பிக்கை மெய்யாகட்டும்' என்றான். காவேரி நதி அடிக்கடி கட்டுமீறி கரை உடைக்கும். இப்படி கரை உடைத்து கட்டு மீறும் தண்ணீர் ஓடையை சோழர்கள் ஆழமாக்கி விவசாயப் பகுதிக்கு எப்போதும் தண்ணீர் தகும்பி நிற்கும் படி செய்தார்கள். இந்த நீரோடை அந்தப் புரங்களிற்கு ஒரு நல்ல பாதுகாப்பு அரணாக அமைந்தது. சோழர்கள் வழக்கப்படி ஒரு அரசர் காலமாகி இன்னொருவர் பட்டத்திற்கு வரும் போது புதிய அரண்மனை கட்டிக் கொள்வதுண்டு. பழைய அரண்மனைகளில் காலமானவர்களின் மனைவி மக்கள் வசிப்பார்கள். பழையாறு அரண்மனைகளில் செம்பியன் மாதேவியின் அரண்மனைகளுக்கு அடுத்த படியாக குந்தவைப் பிராட்டியின் மாளிகை அழகிலும் கம்பீரத்திலும் சிறந்து விளங்கியது. அது சுந்தர சோழன் வசித்த அரண்மனை. அவர் தஞ்சை சென்ற பிறகு, குந்தவை எஜமானியாக விளங்கினாள். அரண்மனைப் பெண்கள் எல்லோரும் அவர்கள் அந்தப்புரத்தில் உள்ள அழகிய தோட்டங்களில் ஆடிப் பாடி பேசிச் சிரித்து மகிழ்ந்தனர். இவ்வாறே குந்தவையும் வானதியும் ஓரிடத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு பெண் அழகிய தொனியில் கண்ணன் பாட்டுப் பாடி மகிழ்ந்தாள். குந்தவை 'நல்ல கண்ணன் இந்த செந்தமிழ் நாட்டுத் தெய்வமாக வந்து வாய்த்தான் வெண்ணை உண்டு, வேய்ங்குழல் ஊதி, பெண்களுடன் காலம் கழித்தால் மற்றைய காரியங்கள் என்னாவது?' என்று வானதியைப் பார்த்து, 'என்னடி எப்படி உன் ஈழ நாட்டிற்கு சென்ற கண்ணனிற்கு பொடி போடலாம் என்று யோசிக்கிறாயா?' என்றாள். 'ஆம் அக்கா அவர் போர்க்களத்தில் எப்படிக் காணப்படுகிறாரோ? அவர் திரு மேனியில் எத்தனை காயங்களோ? எங்கே படுக்கிறார் என்ன சாப்பிடுகிறார் என்று எண்ணித் தவிக்கிறேன் நான் எத்தனை சுகமாக அரண்மனை வாழ்வு கொண்டிருக்கிறேன்? எனக்கு மட்டும் இறகுகள் இருந்தால் இலங்கை பறந்து போய் அவர் மெய்யில் வரும் அம்புகளை என் மார்பில் தாங்குவேன்! பாசறையில் காத்திருந்து அவர் விழுப் புண்களிற்கு மருந்து போடுவேன். மலர் படுக்கை விரித்து வைத்திருப்பேன். அறுசுவை உணவு சமைத்து வீணை மீட்டி ஆதரிப்பேன்' என்றாள்.

அதற்கு குந்தவை சிரித்தபடி, 'சோழ குலத்து வீரர்கள் பெண்களை போர்க்களத்திற்கு அழைத்து செல்லமாட்டார்கள்! உனக்கு தெரியாதா? ஏனென்றால் பெண்களைக் கொண்டு வெற்றி அடைந்தவர் என்ற அவப் பெயர் வந்துவிடும். மேலும் பெண்களின் அழகில் மயங்கி எதிரிப்படை வீரர்கள் சரணாகதி அடைந்துவிடுவார்கள். போர் செய்வதை மறந்து விடுவார்கள் சோழ குல வீரத்தைக் காட்ட முடியுமா? அத்துடன் போர்களால் ஏற்படும் புண்களைப் பற்றி கொஞ்சமும் பயம் கொள்ளாதவர்கள்' என்றவுடன், 'ஆம் ஆம் குடந்தை சோதிடர் வீட்டில் வந்த வாலிபன் உங்களைப் பார்த்து தன்னை மறந்து நின்றான்' என்றாள் வானதி 'அந்த வாலிபன் என்ன ஆனான் என்ற கவலைதான்' என்றாள் குந்தவை. அந்தத் தருணத்தில் ஒரு பறைச் சத்தம் கேட்டது 'சத்துரு நாட்டில் இருந்து வந்த ஒற்றன் ஒருவன் தஞ்சாவூர் கோட்டையில் பொய் முத்திரையைக் காட்டி புகுந்து சக்கரவர்த்தியைச் சந்தித்து உரையாடி அங்கிருந்து




செல்லும் போது இருவரை காயப்படுத்தி விட்டு தப்பி ஓடிவிட்டான். வாலப பருவத்தினன் வந்தியத் தேவன், அவனிற்கு அடைக்கலம் கொடுப்போரிற்கு மரண தண்டனை விதிக்கப்படும் அவனைப் பிடித்துக் கொடுப்போரிற்கு ஆயிரம் பொன் பரிசாகக் கொடுக்கப்படும். தஞ்சைக் கோட்டை தளபதி பழுவேட்டரையர் காலாந்தகண்டரின் கண்டிப்பான் கட்டளை' தம் தம் தட தட தம் பறை முழங்கியது. இதைக் கேட்டுக் குந்தவையின் திருமேனி நடுங்கியது. அப்பொழுதுது தாதிப் பெண் ஒருத்தி அங்கு வந்தாள். ஆழ்வார்க்கடியான் என்னும் வீர வைஷ்ணவர் தங்களைப் பார்க்க வந்திருப்பதாகச் சொன்னாள். இந்த பறை முழக்கம் கேட்டு திருவிழாவிற்கு வந்த மக்களும் சிறு கலக்கம் கொண்டிருந்தனர். பழுவேட்டரையரின் கொடுங்கோல் ஆட்சி பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். ஆழ்வார்க்கடியான் செம்பியன் மாதேவியின் மாளிகையில் இருந்து புறப்பட்டு குந்தவையிடம் வந்தான். ஆழ்வார்க்கடியான் உலக நடப்பை பற்றி பேசுவதும், நாடு நகரமெல்லாம் திரிந்து ஆங்காங்கே நடக்கும் நிகழ்ச்சிகளை பற்றிச் சொல்வதும், பாடும் பாசுரங்களை கேட்பதும் குந்தவைக்கு மிகவும் பிரியம் அதனால் ஆழ்வார்க்கடியானை ஆர்வத்துடனும், முகமலர்ச்சியுடனும் வரவேற்றாள். சுக நலம் விசாரித்தாள் நாட்டு ஜனங்கள் என்ன பேசுகிறார்கள் என்று கேட்டு அறிந்து கொண்டாள். ஆழ்வார்க்கடியான், நான் பெரிய பிராட்டியின் மாளிகைக்குச் சென்றிருந்தேன். தங்களிற்கு ஏதோ முக்கிய செய்தி சொல்ல வேண்டுமாம் தங்களை வரும்படி சொன்னார்கள் என்றான். அதற்கு குந்தவை 'ஆகட்டும்' என்றாள். 'இந்தப் பறை முழக்கம் கேட்டாயா? யார் இந்த ஒற்றன் உனக்கு ஏதாவது தெரியுமா?' என்று குந்தவை

ஆழ்வார்க்கடியானிடம் கேட்க, அவனும் 'வீர நாராயண் புரத்தில் ஓர் வீர வாலிபனைப் பார்த்தேன் அவன் தஞ்சை போவதாகச் சொன்னான். எதற்காக என்று சொல்லவில்லை சக்கரவர்த்தியின் உடல் நிலை பற்றியும், அடுத்து பட்டத்திற்கு வருவது யார் என்றும் கேட்டான். இலங்கை சென்ற இளவரசர் பற்றி விசாரித்தான். பின்னர் குடந்தை சோதிடர் வீட்டிற்கு போய் அங்கு இவற்றை விசாரித்தான். தாங்கள் அவனை அங்கு சந்தித்ததாகவும், ஆனால் அவன் தாங்கள் யார் என்று தெரிந்து கொள்ளவில்லை என்றும் கேள்விப்பட்டேன்' என்றான். 'அவன் எப்படி இருப்பான் திருமலை' என்று குந்தவை கேட்க, 'பெரிய குலத்தில் பிறந்தவனைப் போல் காணப்பட்டான் முகம் களையாய் இருந்தது. ஊக்கமும், உள்வலிமையும் கொண்டவனைப் போல் தென்பட்டான். ஆபத்தில் சிக்கப் போகிறான் என்று தோன்றியது' என்றான். குந்தவை மேலும், 'நான் நினைத்தது சரிதான் அந்த முரட்டு வாலிபன் ஏதோ ஆபத்தில் சிக்கப் போகிறான் என்று தோன்றியது அவனை எங்கேயாவது சந்திக்க நேர்ந்தால் பிடித்துக் கொடுத்து பரிசு பெற்றுக் கொள்ளாமல் என்னிடம் அழைத்து வா' என்றாள். அதற்கு ஆழ்வார்க்கடியான், 'அவனே உங்களைத் தேடி வருவான்' என்றான். *(தொடரும்...)*

Jenita.Jaffna@gmail.com
**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை, மாதினி நிமலன**

## ஸ்காபரோ (Scarborough) வைத்தியசாலைக்காக தமிழ் ரேடியோதோன் தனது முதலாவது பங்களிப்பில் $275,000 க்கும் அதிக தொகையினை பெற்றுக்கொடுத்துள்ளது



ஸ்காபரோ சுகாதார வலையமைப்பின் முன்னுரிமைத் தேவைக்காக தனது முதலாவது அமர்வினூடாக அதிகூடிய தொகையை ஈட்டிக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

ஸ்காபரோ (ஜூன் 22, 2021) - 275,000 டொலருக்கும் அதிகமான தொகையை ஸ்காபரோ வைத்தியசாலையின் நிதிக்காக பெற்றுக்கொடுத்துள்ளது. தமிழ் ரேடியோதோன் ஸ்காபரோ வைத்தியசாலை நிதிக்கான தனது ஆரம்ப நிகழ்வினை புதன்கிழமை, ஜூன் 9ஆம் திகதி தனது அலைவரிசையில் ஒலிபரப்பியது. **Canadian Tamils' Chamber of Commerce (CTCC)** அனுசரனையுடன் **EAST FM 102.7** அலைவரிசையூடாக நேரலையாக ஒலிபரப்பியதுடன் இதில் வைத்தியசாலை ஊழியர்கள், மற்றும் நலன்விரும்பிகளுடனான நேர்காணல் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி அதனூடாக ஸ்காபரோவின் வைத்திய மேம்பாட்டிற்கு நன்கொடைகளையும் உதவிகளையும் பெற்றுக்கொடுப்பதற்கும் உதவியது.

பற்கேற்ற பேச்சாளர்கள்:

- **MP** கெரி ஆனந்தசங்கரி, **Scarborough-Rouge Park**
- **MPP** விஜேய் தனிகாசலம், **Scarborough Rouge-Park**
- யாழினி ராஜகுலசிங்கம், **Trustee, Ward 21 from the TDSB for Scarborough North**
- **Dr.** செந்தூரன் குணரட்னம், **Psychiatrist at SHN,** மற்றும்
- **Dr.** குமாரசுவாமி கிருபானந்தன், **OB/GYN at SHN.**

பெறப்பட்ட நன்கொடையினால் எஸ்.எச்.என் வைத்தியசாலைக்கான அதி-முக்கிய தேவைகளுக்கு ஒதுக்கப்படும். அதாவது எமது மூன்று வைத்தியசாலைகளின் *(Birchmount, Centenary, General)* தேவைக்கான அதிமுக்கியம வாய்ந்த மருத்துவ உபகரணங்கள் பெற்றுக்கொள்வதற்கு. இதனால் எமது ஊழியர்களும் நோயாளர்களும் பெறும் நன்மையடைவார்கள். வைத்தியசாலைக்காக நன்கொடை சேகரிப்பதில் 100,000 டொலர் எமது நோக்கமாகவிருந்தது, எனினும் நலன்விரும்பிகள், பொதுமக்கள், ஆதரவாளர்களும் தொடந்தும் வைத்தியசாலைக்கு ஆதரவளித்து **CTCC** வருபவர்களானாலும் 275,000 டொலருக்கும் அதிகமான தொகையை எம்மால் பெற்றுக்கொள்ள சேகரிக்க முடிந்தது, இதற்காக அவர்கள் ஸ்காபரோவில் நிருவப்பட்ட நிதி சேகரிப்பு நிலைங்களுக்கு நேரிலும் மற்றும் இணைதளத்தினூடாகவும் சென்று தமது பங்களிப்பினை செலுத்தியுள்ளார்கள். இத்தொகையானது எமது இலக்கு தொகையைவிடவும் பலமடங்கையும் தாண்டியுள்து. எல்லோருக்கும் நன்றி.

ரொரன்டோவில் 75**%** அதிகமான தமிழர்கள் ஸ்காபரோவிலேயே வாழ்கின்றனர். அதில் எஸ்.எச்.என் இன் குழுவில் தமிழர்களின் பங்களிப்பு அதிகம். எமது மக்களின் தனித்துவ சுகாதார மேம்பாட்டிற்கு அவர்கள் கூடிய கவனம் செலுத்துகின்றனர். அதாவது, தமிழ் மொழியில் பேசக்கூடிய மனநல மருத்துவர்களும், முழுநேர தமிழ் பரிவர்த்தனை செய்யக்கூடிய ஊழியர்களும் நோயாளிகளுக்கும் அவர்களின் உறவினர்களுக்கும் பெரும் உதவியாக அமைகின்றனர்.

நன்கொடைக்கான ரேடியோதோனின் உதவியானது எஸ்.எச்.என் இன் சுகாதார மேம்பாட்டிற்கானதொரு வரப்பிரசாதமாக அமைவதுடன் கனடாவின் மிகவும் பிரகாசமக திகழும் எமது சமூகத்திற்கு உதவியளிக்கும். இவற்றில் வட-அமெரிக்காவின் பாரிய நெப்ராலஜி செயற்பாடும், பிராந்திய சமூகம் சார்ந்த காடியொவெஸ்லா புனர்வாழ்வு சேவை மற்றும் இரண்டாவது பெரிய வைத்தியசாலையின் மனநல மருத்துவம், போதைக்கு அடிமையிலிருந்து விடுதலை போன்ற சேவைகளை பெற்றுக்கொள்வதை உள்ளடக்குவதாகும்.

# பூகோள அரசியல் தமிழர் தரப்புக்குச் சாதகமாக மாறியுள்ள இன்றைய காலத்தை ததேகூ நழுவவிடக் கூடாது!

**கனடா நக்கீரன்**

மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா ன்பார்கள். தமிழர் தரப்பு என்னதான் சொன்னாலும் எப்படித்தான் கத்தினாலும் சிங்கள - பவுத்த பேரி-னவாதம் தான் நினைத்ததை செய்து முடிகிறது. இப்போது மட்டுமல்ல இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் தொட்டு இதுவே நியதியாக இருந்து வருகி-றது.

வடக்குக் கிழக்கை திட்டமிட்ட குடியேற்றத்திட்டங்கள் மூலம் சிங்கள மயப்படுத்தும் பணியில் சிங்கள - பவுத்த அரசுகள் - அது பச்சையாக இருந்தாலும் சரி நீலமாக இருந்தாலும் சரி - வெற்றி கண்டு வந்திருக்கிறது. பட்டிப்பளை (கல்லோயா) அல்லை-கந்தளாய், மொறவேவா

கிழக்கு மாகாணம் குடித்தொகை 1946 - 2012

அட்டவணை 1

| ஆண்டு | தமிழர் | | முஸ்லிம் | | சிங்களவர் | | ஏனையோர் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண் | % | எண் | % | எண் | % | எண் | % | |
| 1946 | 136,059 | 48.75 | 109,024 | 39.06 | 23,456 | 8.40 | 10,573 | 3.79 | **279,112** |
| 2012 | 617,296 | 39.79 | 569,738 | 36.72 | 359,136 | 23.15 | 5,212 | 0.34 | **1,551,384** |

மூலம்: அரசாங்க புள்ளிவிபரத் திணைக்களம்

போன்ற எண்ணற்ற பாரிய குடியேற்றத்திட்டங்கள் மூலம் இன்று கிழக்கு மாகாணம் தமிழர் கைகளில் இருந்து பறிபோய்விட்டது. தங்கள் பாரம்பரிய தாயகத்தில் பெரும்பான்மையாக வாழ்ந்த தமிழ்மக்கள் இன்று சிறுபான்மையராக தரம் இறக்கப்பட்டுள்ளார்கள். இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் தொட்டு தமிழர்களுடைய குடித்தொகைப் பரம்பல் விழுக்காடு கிழக்கு மாகாணத்தில் படிப்படியாக குறைந்து வந்துள்ளது. அதே சமயம் சிங்களவர்களது குடிப்பரம்பல் படுவேகமாக அதிகரித்து வருகி-றது.


இந்த அட்டவணை 1, 1946 இல் கிழக்கு மாகாணத்தில் 8.40**%** ஆக இருந்த சிங்களவர்கள் 2012 இல் 23.15**%** ஆக அதிகரித்துள்ளார்கள். இது முந்நூறு விழுக்காடு அதிகரிப்பாகும். முஸ்லிம்கள் அதே காலகட்டத்தில் 39.36% இல் இருந்து 36.72**%** குறைந்துள்ளார்கள். தமிழர்கள் 1946 இல் 48.75**%** இல் இருந்து 39.79**%** ஆகச் சரிந்துள்ளார்கள். மேலே கூறியவாறு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களே இதற்கான முக்கிய காரணஜயாகும்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள 3 நிருவாக மாவட்டத்தில் திருகோண-மலை மற்றும் அம்பாறையில் தமிழர்கள் சிறுபான்மை ஆக்கப்பட்டுள்ளார்கள்.

திருகோணமலை மாவட்டம் இனவாரி குடிப் பரம்பல் 1946 - 2012

அட்டவணை 2

| ஆண்டு | முஸ்லிம் | | தமிழர் | | சிங்களவர் | | ஏனையோர் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண் | % | எண் | % | எண். | % | எண் | % | எண் |
| 1946 Census | 23,219 | 30.58 | 33,795 | 44.51 | 11,606 | 15.20 | 7,306 | 9.62 | **75,926** |
| 1953 Census | 28,616 | 34.10 | 37,517 | 44.71 | 15,296 | 18.23 | 2,488 | 2.96 | **83,917** |
| 1963 Census | 40,775 | 29.43 | 54,452 | 39.30 | 39,925 | 28.82 | 3,401 | 2.45 | **138,553** |
| 1971 Census | 59,924 | 31.83 | 71,749 | 38.11 | 54,744 | 29.08 | 1,670 | 0.97 | **188,245** |
| 1981 Census | 75,039 | 29.32 | 93,132 | 36.39 | 85,503 | 33.41 | 2,274 | 0.89 | **255,948** |
| 2001 Census | - | - | - | - | - | - | - | - | - |
| 2007 Enumeration | 151,592 | 45.37 | 96,142 | 28.75 | 84,766 | 25.35 | 1,763 | 0.53 | **334,363** |
| 2012 Census | 152,854 | 40.42 | 122,080 | 32.29 | 101,991 | 26.97 | 1,257 | 0.33 | **378,182** |



மூலம்: அரசாங்க புள்ளிவிபரத் திணைக்களம்

அம்பாரை மாவட்டம் இனவாரி குடிப்பரம்பல் 1963-2012

அட்டவணை 2

| ஆண்டு | முஸ்லிம்கள் | | சிங்களவர் | | இலங்கைத் தமிழர் | | இந்தியத் தமிழர் | | ஏனையோர் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண் | % | எண் | % | எண். | % | எண் | % | எண் | % | எண் |
| 1963 Census | 97,621 | 46.11% | 61,996 | 29.28% | 49,185 | 23.23% | 1,312 | 0.62% | 1,618 | 0.76% | **211,732** |
| 1971 Census | 126,365 | 46.35% | 82,280 | 30.18% | 60,519 | 22.20% | 1,771 | 0.65% | 1,670 | 0.61% | **272,605** |
| 1981 Census | 161,568 | 41.54% | 146,943 | 37.78% | 77,826 | 20.01% | 1,411 | 0.36% | 1,222 | 0.31% | **388,970** |
| 2001 Census | 244,620 | 41.25% | 236,583 | 39.90% | 109,188 | 18.41% | 715 | 0.12% | 1,891 | 0.32% | **592,997** |
| 2007 Enumeration | 268,630 | 43.99% | 228,938 | 37.49% | 111,948 | 18.33% | 58 | 0.01% | 1,145 | 0.19% | **610,719** |
| 2012 Census | 282,484 | 43.59% | 251,018 | 38.73% | 112,750 | 17.40% | 165 | 0.03% | 1,640 | 0.25% | **648,057** |

மூலம்: அரசாங்க புள்ளிவிபரத் திணைக்களம்

இந்த இரண்டு மாவட்டங்களிலும் சிங்களவர்களே மாவட்டச் செயலாளர்களாக இருக்கிறார்கள். அது மட்டுமல்ல அங்கு தமிழ்ப் பேசும் மக்கள் பெரும்பான்மையாக இருந்தும் மாவட்ட நிருவா-கம் முழுக்க முழுக்க சிங்களத்திலேயே இடம்பெறுகின்றது.

1960க்குப் பின்னர் திருகோணமலை-யில் சேருவில என்ற தனித் தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டுள்ளது. சென்ற தேர்தலில் திரு-கோணமலை மாவட்டத்தில் இருந்து இரண்டு முஸ்லிம்கள், ஒரு தமிழர், ஒரு சிங்களவர் தெரிவு செய்யப்பட்டார்கள். அம்பாறை தேர்தல் மாவட்டத்தில் இருந்து நான்கு முஸ்லிம்கள், மூன்று சிங்களவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். தமிழர்கள் 17.40 விழுக்காடாக இருந்தும் அவர்களது வாக்குகள் பிரிந்து போனதால் ஒரு இருக்கையும் கிடைக்கவில்லை. மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்கு பகுதியிலிருந்து அம்பாறை மாவட்டம் ஏப்ரில் 1961 இல் புதிதாக உருவாக்கப்பட்டது தெரிந்ததே.

ஒரே பார்வையில் கிழக்கு மாகாணத்தில் 2012 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட குடித்தொகை கணக்கெடுப்பின் படி பின்வருமாறு காணப்படுகிறது.

கிழக்கு மாகாண குடிப் பரம்பல் - 2012

| மாவட்டம் | முஸ்லிம் | % | தமிழர் | % | சிங்களவர் | % |
|---|---|---|---|---|---|---|
| அம்பாறை | 282,484 | 43.59 | 112,948 | 17.40 | 251,018 | 38.73 |
| திருகோணமலை | 152,019 | 45.47 | 96,142 | 28.75 | 84,766 | 25.35 |
| மட்டக்களப்பு | 129,045 | 25.02 | 381,984 | 74.05 | 2,397 | 0.74 |
| மொத்தம் | 549,694 | 37.75 | 590,074 | 40.53 | 316.,101 | 21.71 |

அடுத்த குடித்தொகை கணக்கெடுப்பு 2022 இல் நடைபெற இருக்கிறது. அதன் போது தமிழர்களது மக்கள் தொகை மேலும் சரிந்திருக்க வாய்ப்பு இருக்கிறது.

1987 இலங்கை இந்திய உடன்படிக்கையின் கீழ் வடக்கும் கிழக்கும் தற்காலிகமாக இணைக்கப்பட்டது. வடக்கும் கிழக்கும் நிரந்தரமாக இணைக்கப்பட வேண்டும் என்றால் ஓர் ஆண்டுக்குள் கிழக்கில் ஒரு பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற நிபதந்தனை இருந்தது.

அப்போதிருந்த சனாதிபதி ஜேஆர். ஜெயவர்த்தனா கிழக்கில் நடத்த வேண்டிய பொதுவாக்கெடுப்பை நடத்தாமல் ஒரு கசட் மூலம் வட-கிழக்கு இணைப்பை நீட்டித்து வந்தார். 2006 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு இணைப்பை எதிர்த்து மக்கள் விடுதலை முன்னணி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் கசட் மூலம் வடக்கையும் கிழக்கையும் இணைத்தது செல்லுபடி ஆகாது எனத் தீர்ப்பளித்தது. ஆனால் வடக்குக் கிழக்குத் தற்காலிகமாக இணைப்பைத் தொ-டர வேண்டும் என்றால் அதனை நாடாளுமன்றம் சட்ட மூலம் செய்யலாம் எனவும் அறிவுறுத்தியது. அப்படியொரு சட்டத்தை உருவாக்க விரும்பாத இராசபக்ச அரசு 2007 ஆம் ஆண்டில் வடகிழக்கு மாகாணங்களை முன்னர் போல் இரண்டாகப் பிரித்து விட்டார்.

ஒரு கதைக்கு இன்று கூட வடக்கையும் கிழக்கையும் இணைக்க கிழக்கில் ஒரு பொது வாக்கெடுப்பு நடத்தினால் முஸ்லிம்கள் ஆதரவு இல்லாவிட்டால் அந்த வாக்கெடுப்பில் தமிழர் தரப்புத் தோற்றுப் போகும்.

இதற்கு ஒரே வழி வடக்கையும் கிழக்கையும் நிபந்தனை எதுவுமின்றி ஒன்றாக இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையை தமிழர் தரப்பு முன்வைக்க வேண்டும். வடக்கும் கிழக்கும் தமிழர்களதும் முஸ்லிம்களதும் பாரம்பரிய வாழ்விடம் என்பதை 1987 இல் எழுதப்பட்ட இலங்கை - இந்திய உடன்பாடு அங்கீகரித்தது போல இப்போது அமெரிக்க மக்கள் பிரதிநிதுவ சபையும் வடக்கும் கிழக்கும் தமிழ்மக்களது பாரம்பரிய தாயகம் என்பதை பேரளவு அங்கீகரித்துள்ளது.

இலங்கையின் வரலாற்று ரீதியாக ஒடுக்கப்பட்டுவரும் வடக்கு, கிழக்கு பிராந்தியத்தின் அரசியல் உரிமைகள் மற்றும் பிரதிநிதித்துவத்தை ஏற்று, பாதுகாக்க முன்வருமாறு சர்வதேச சமூகத்தை சபை வலியுறுத்துகிறது. அத்துடன் இன மோதலுக்கு வழிவகுத்த அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஒரு நிரந்தர அரசியல் தீர்வை நோக்கி முன்னேற சபை அழைப்பு விடுக்கிறது என்றும் அந்தத் தீர்மானத்தல் சொல்லப்பட்டுள்ளது.

கோட்டாபய இராசபக்ச சனாதிபதியாக பதவி ஏற்ற காலம் தொட்டுத் தமி-ழத் தேசியக் கூட்டமைப்பு இனச் சிக்கலுக்குத் தீர்வு காண இருதரப்பும் பேச வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வருகிறது.

கடந்த வாரம் ததேகூ க்கும் சனாதிபதி கோட்டாபய இராசபக்ச அவர்களுக்கும் இடை-யில் நடக்க இருந்த பேச்சு வார்த்தை திகதி குறிப்பிடலாமல் தள்ளிப் போடப்பட்டுள்ளது.

இன்றைய பூகோள அரசியல் அரங்கில் தமிழ்மக்களது தேசியச் சிக்கலுக்கு தீர்வு காண சிறிலங்கா அரசு ததேகூ தலைவர்களோடு பேச வேண்டிய கட்டாயம் சிங்கள ஆட்சியாளர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இந்தப் பேச்சு வார்த்தையில் ததேகூ உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமிழர்கள் முன்வைக்கும் இணைப்பாட்சித் தீர்வை வலியுறுத்த வேண்டும். உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமிழர்கள் முன்வைக்கும் இணைப்பாட்சித் தீர்வை அரசு புறந்தள்ளினால் வெளிப்புற சுயநிர்ணய கோரிக்கையை கேட்க தமிழர் தரப்பு தள்ளப்படும் என்பதை ஏற்கனவே ததேகூ இன் தலைவர் இரா. சம்பந்தன் கூறியிருக்கிறார்.

பூகோள அரசியல் தமிழர் தரப்புக்குச் சாதகமாக மாறியுள்ள இன்றைய காலத்தை ததேகூ நழுவவிடக் கூடாது!



ஜீவன் முக்தி (பகுதி ) 117

# வாழ்க்கையின் லட்சியம் ஞானமடைதல்

- எந்தப் பாதையில் சென்றாலும் இங்கேதான் வருகிறீர்கள்
- பிரபஞ்ச உணர்வை பிரதிபலிக்கும் கண்ணாடி நீங்கள்.
- மனித சரீரம் எடுத்ததே ஞானமடைவதற்குத்தான்.
- உடலெடுக்கும் முன்பே நீங்கள் செய்த பிரார்த்தனை
- எழுமின் விழுமின்! இலட்சியதை தொட்டுவிட்டீர்
- லட்சியத்தை கவிழ்த்த கட்டுறு மனப்பாங்கு
- தேவையில்லாத சீர்வரிசை கட்டுறு மனப்பாங்கு
- உங்களுக்கு எமன் கட்டிவிடும் பாசக்கயிறுதான் கட்டுறு மனப்பாங்கு
- காலனாலும் உங்களைக் கட்டுப்படுத்த முடியாது.
- என்றாவது ஒருநாள் நீங்கள் சிரஞ்சீவியாகியே தீர வேண்டும்.
- வாழ்கைகை எனும் போர்க்களமே நீங்கள் ஞானமடைவதற்குத்தான்.
- உங்களின் வாழ்க்கை முடிவை நோக்கி செல்லவில்லை. முடிவிலிருந்துதான் துவங்குகிறது.
- உலகத்தின் மிக நீண்ட காவியம்.... உங்கள் வாழ்க்கைதான்.
- நம்முடைய வளர்ப்புற கட்டுறு மனப்பாங்கு
- என்னுடைய பீஷ்மரைச வென்ற சுவையான சம்பவம்
- மரணத்திற்குப் பின்னால் மன்றொரு நாடகம்
- செத்த பிணத்தின் சொத்தை, சாகப்போகும் பிணங்கள் பங்கிடுதல்
- பார்வையாளர்களாக இருந்து பார்த்தால் போதும்.
- வளர்ப்புக் கூட்டிலிருந்து விடுபடுத்தும் சத்தியம்தான் சிகண்டி
- ஞானமடையாத குருவால், உங்களிற்கு ஞானத்திற்கான வழியைக் காட்ட முடியாது.
- தற்கார்க உத்வேகத்தை தருபவரே துரோணாச்சாரியார்
- கர்ண மோட்ஷம்
- தார்மீக கட்டுறு மனப்பாங்கும் தாண்டப்பட வேண்டும்.
- உங்களுடனே இருக்கும் சகுனிதான் உங்களுடைய பட்டறிவு
- அகங்காரத்தை தனியாக அழிக்க முடியாது.
- உங்களின் வெற்றி ஏற்கனவே திட்டமிடப்பட்டு விட்டது.
- ஞானத்திற்கான திட்டம்.
- இலட்சிய தியானம்.

இந்தக் கட்டுரையின் தலைப்பு, வாழ்வின் லட்சியம் ஞானமடைதல். முதலில் இதன் தலைப்பை 'வாழ்வின் மிக உயர்ந்த இலட்சியம் ஞானமடைதல்' என்று கொடுத்திருந்தோம்.
அதில் கூட ஒரு வார்த்தை அதிகமான இணைந்து விட்டது. 'உயர்ந்த' எள்ற வார்த்தையே தேவையில்லை.
'வாழ்க்கையின் இலட்சியமே ஞானமடைதல்தான்'
எத்தனை லட்சியங்கள் நம்மால் உணரப்பட்டாலும் அது ஞானமடைதல் என்ற லட்சியத்தின் வேறு பெயர்கள்தான்.

அதிக பணம் வேண்டும் என்று நினைப்போம். இவை எல்லாவற்றையும் பார்த்தீர்களென்றால், உங்களுடைய எல்லையை விரித்துக் கொள்வதற்கான முயற்சியைத் தவிர வேறொன்றுமில்லை.

பணம்தான் லட்சியம் என்று நினைக்கிறவர்கள் கூட, அறிந்தோ, அறியாமலோ ஞானத்தைத்தான் தேடுகிறார்கள். அதாவது, பணம் அதிகமாக இருந்ததென்றால், உங்களின் வாழ்க்கையில் விரும்பியதைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்புகள் அதிகமாகும். எந்த கஷ்டம் வேண்டுமோ, அதை தேர்ந்தெடுத்துக் கொள்ளும் வாய்ப்பு, பணம் அதிகமாகும்போது உண்டு.

இந்தக் காரில் சென்று கஷ்டத்தோடு இருக்கலாமா? இல்லை, அந்தக் காரில் சென்று கஷ்டத்தோடு இருக்கலாமா? என்று, என்ன வேண்டுமோ அதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

இந்த வாழ்க்கையில் பணம், புகழ் இந்த இரண்டு மட்டும்தான் பெரும்பாலானவர்களின் குறிக்கோளாகவும், லட்சியமாகவும் இருக்கின்றது.
பேர், புகழ் சேர்பதாலும், அதிகமான உறவுகளைச் சேர்ப்பதாலும், என்ன அனுபவத்தைப் பெறப் போவதாக நினைக்கிறீர்களோ, அதை ஆழ்ந்து பார்த்தீர்களென்றால், அவை எல்லாவற்றையுமே ஞானத்தை அடைந்தால் மட்டுமே ஒருவரால் அடைய முடியும், அனுபவிக்க முடியும்.
இப்போது பணம் வந்தால், உங்களுடைய எல்லை விரிவடையும் என்று நினைக்கிறீர்கள். உறவுகள் அதிகமாக இருந்தால் எல்லை விரிவடையும் என்று நினைக்கறீர்கள். எதுவாகவிருந்தாலும், உங்கள் வாழ்வின் லட்சியமானது தன்னை விரிவுபடுத்திக் கொள்ளும் முயற்சியாகவே இருக்கின்றது.
எல்லையில்லா, வரம்பில்லா உச்சநிலையை அடையத்தான் எங்கெங்கோ தேடுகிறீர்கள்.

ஆனால், அதெல்லாம் அங்கே கிடைக்காது. ஜீவன் முக்தியடைந்தால் மட்டுமே உங்களுக்கு அது கிடைக்கும் என்பது தெரிவதே இல்லை. இந்த மாயம்தான் வாழ்வு எனும் விளையாட்டை சுவாரஸ்யமாக்கி விடுகிறது.
எந்தப் பாதையில் சென்றாலும் இங்கேதான் வருகிறீர்கள்.

என்ன செய்தாலும் எல்லையில்லா நிலையான ஞானமடைதல் என்ற ஆனந்த உணர்வை நோக்கித்தான் ஓடிக்கொண்டிருக்கிறீர்கள். வேறு தனியான ஒரு லட்சியம் என்ற ஒன்று பூமியில் இல்லை.

ஞானமடைதல் என்ற லட்சியத்தில்தான் நீங்கள் வாழ்கிறீர்கள். சில நேரங்களில் ஞானமடைதல் என்ற வார்த்தையைத் தெரிந்து கொண்டு வாழ்பவர்கள் ஒரு குழுவாகவும், பல நேரங்களில், அந்த வார்த்தையைத் தெரிநிது கோள்ளாமல், பாதையைத் தெரிந்து கொள்ளாமல் சுற்றிச் சுற்றி அதை அடையும் முயற்சி தோல்வியை சாதனை என்ற சொல்லி வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் ஒரு குழுவாகவும் இருக்கிறீர்கள்.

மைசூர் ரோட்டில் நின்று கொண்டு பெங்களூலட எவ்வளவு தூரம் என்று கேட்டால் இடது பக்கம் போனால், 30 கிலோ மீட்டர், வலது பக்கமா போ-னால் 30.000 கிலோ மீட்டர் என்று சொல்வார்கள்.
அந்த இரண்டு வழியுமே பெங்களூர் நோக்கித்தான் போகும்.

சிலபேர் தெரிந்து சுருக்கமான பாதையில் நேராகச் செல்கிறார்கள். சில பேர் தெரியாமல் ஏதோவொரு நீண்ட பாதையில் சென்று கொண்டே இருப்பார்கள். எந்தப் பாதையை தேர்ந்தெடுத்தாலும் கடைசியில் வாழ்க்கையின் லட்சியமான ஞானமடைதல்தான், ஜீவன் முக்தியை நோக்கித்தான் இயங்குகின்றன.
வேறு என்த லட்சியமாக இருந்தாலும் அது உபயோகமில்லாததுதான்
அது நிச்சயம் என்றாவது ஒரு நாள் கழன்றுகொள்ளக் கூடிய லட்சியமாகும். உங்களை விட்டு விலகிவிடக் கூடிய முழுமையடையாத லட்சியமாகும்.

இந்த ஞானமடைதல் மட்டும்தான் உங்களை முழுமையாக்கும் வரை உங்களுடனேயே இருக்கக் கூடிய சக்தி வாய்ந்த லட்சியகும்.
அதுதான் உங்களுடனேயே இருக்கக்கூடிய குறிக்கோள்.
வேறு எந்த லட்சியத்தை முன்னிட்டு வாழ்ந்தீர்களென்றாலும் அது துக்கத்திற்கான ஆணிவேராகத்தான் முடியும்.

ஒன்றுமில்லை. மொத்தமாக எழுபது எண்பது வருடம் மட்டுமே இந் உடம்பிற்குள் நீங்கள் விளையாடப் போகிறீர்கள். அவ்வளவுதான். Consciousness என்பது உங்களைப் பற்றி நீங்கள் வைத்திருக்கின்ற உணர்வு. நான் இருக்கிறேன் என்று நீங்கள் உணர்கிறீர்கள் இல்லையா, அதுவே மிகப் பெரிய பரிசு. அதை வீணடித்துக் கொண்டேயிருக்கக் கூடாது. சரியாய் பயன்படுத்த வேண்டும். பிரபஞ்ச உணர்வை ப்ரதிபலிக்குட கணண்ணாடி நீங்கள்.

நீங்கள் விருப்பப்பட்டால், நான் இருக்கிறேன் என்கின்ற உணர்வை, உயர்ந்த ஆனந்தத்திலேயே ரம்யமாக வைத்திருக்கவும் முடியும். இல்லையென்றால் துக்கத்திலே போட்டு 'இப்படி ஏன் நான் இருக்கிறேன்'? என்று சலித்துக் கொள்ளவும் முடியும். எப்படி வேண்டுமானாலும் உணர்வை மாற்றிக் கொள்ள முடிகின்றது.
நான் இருக்கிறேன் என்கிற உணர்வை, எப்படி வேண்டுமானாலும், எந்த உணரவில் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளக் கூடிய சுதந்திரமும் இருக்கிறது. இது சாரசரியாக ஒரு எழுபது, எண்பது வருடம்தான் உங்களுக்கு கிடைக்கக்கூபயதாக இருக்கின்றது.
நன்கு: ஆழ்ந்து புரிந்து கொள்ளுங்கள். வேறு எது கிடைத்து அதை வீணாக்கினாலும் பரவாயில்லை.
ஆனால் எந்தவிதமான உணர்வில் உங்களை வைத்துக்கொள்வதற்கான இந்த சுதந்திரமும், வாய்ப்பும் கிடைத்து, அதை வீணாக்குவதுதான் இருப்பதிலேயே மிகப்பெரிய வீணடித்தலாகும்.

ஆயிரக்கணக்கான கண்ணாடிகள் இருக்கின்றன. ஆனால் ஒரு சில கண்ணாடிகள்தான் அதிர்ஷ்டவசமாக, சூரியனைப் பிரதிபலிக்கின்ற விதமாக சரியான கோணத்தில், அமைந்து சூரியனுடைய பிரதிபிம்பத்தைத் தனக்குள்ளே உள்வாங்கும்.
அதுபோல லட்சக்கணக்கான ஜீவராசிகள் இருக்கின்றன. ஆனால் எல்லா ஜீவராசிகளுடைய உடலும பிரபஞ்ச உணர்வை தனக்குள்ளே ப்ரதிபலிக்கின்ற நிலையில் இல்லை.
மனித சரீரம்.
மாத்திரம்தான்.
பிரபஞ்ச உணர்வை,
தனக்குள்ளே நான்' என்கின்ற தனி உணர்வாக பிரதிபலிக்கின்ற சக்தி வாய்ந்ததாக இருக்கின்றது.

இந்தப் பிரதிபலிப்பு நமக்குள் நடப்பதுதான் மிகப்பெரிய பாக்கியம். மிகப்பெரிய கொடுப்பினை, மிக உயர்ந்த சாத்தியக்கூறு.
இது நடக்கின்ற காலகட்டமான, எழுபது, எண்பது வருடத்தில், ஒருவேளை அந்தக் கண்ணாடி திசை திரும்பிவிட்டால், பிம்பம் பிரதிபலிக்காமல் போய்பிடும். கண்ணாடி உடைந்து விட்டாலும் பிரதிபலிக்காமல் போய்விடும்.
எத்தனை காரணம் வேண்டுமானாலும், அந்த பிரதிபிம்பம் பிரதிபலிக்காமல் போவதற்கு இருக்கலாம். ஆனால் அந்த பிரதிபிம்பம் பிரதிபலிக்கின்ற அந்த நேரத்தை, வீணடிப்பதுதான் இருப்திலேயே மிகப் பெரிய கொ-டுமை கோடிக்கணக்கான ஜீவராசிகள் இருக்கின்றன. ஆனால் அவை டில்லாவற்றிற்கும் நான்' என்கின்ற தனி உணர்வு இருப்பதில்லை. குரங்குகளுக்குக் கூட அது இல்லை. மனிதர்களுக்கு மட்டும் அது சாத்தியம்.

ஏனென்றால், மனிதன் என்கின்ற கண்ணாடி மட்டும்தான் பிரதிபலிக்கும் தன்மையைப் பெற்றிருக்கிறது. சூரியனை நோக்கிச் சரியான திசையிலும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதை உணர்ந்து கொள்வதற்கான மிகப் பெரிய சாத்தியக்கூறு மனிதனுடைய விழிப்புணர்வுக்குத்தான் உண்டு.
மனித சரீரம் எடுத்ததே ஞானமடைவதற்குத்தான்
நான் எப்போதுமே எதையும் வலியுறுத்திச் சொல்லுவதில்லை. எதையும் எப்போதும் வலியுறுத்த மாட்டோம்.
சில நேரங்களில் எனக்குத் தோன்றும், ஐயோ! மனிதர்கள் இப்படி வீணாகப் போகிறார்களே? எவ்வளவு பெரிய வாய்ப்பு அவர்களுக்கு இருக்கிறது! இதை உணராது, வாழ்க்கையை வீணடிக்கிறார்களே' என்று.

எதையோ நோக்கி, எதன் பின்னாடி சுற்றிக் கொண்டிருப்பார்கள்.
எல்லோரையும் பார்த்தீர்களேயானால், கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற்போல், வேறு யாரோ ஒருத்தருடைய அஹங்காரத்தைப் பூர்த்தி செய்வதற்காக ஓடிக்கொண்டிருப்பார்கள்.
உங்களின் அஹங்காரத்தை பூர்த்தி செய்வதற்காக ஓடினால் சுடப் பரவாயில்லை. வேறு யாரோ ஒருவருடைய அஹங்காரத்தைப் பூர்த்தி செய்வதற்காக ஓடிக்கொண்டிருப்பதுதான் பரிதாபத்திற்குரியது.
நம்முடைய வாழ்க்கையே அப்படித்தான் இயங்கிக்கொண்டிருக்கிறது
எதற்காக ஓடுகிறோம்?
ஏனம ஓடுகிறோம்?
என்ன செய்கிறோம்?
என்று நமக்கே தெரிவதில்லை.. இவையெல்லாவற்றையும் விட, நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டியது.. பிரபஞ்ச விழிப்புணர்வைப் பிதிபலிக்கின்ற மிகப் பெரிய சாத்தியக்கூறான, மனித சரீரத்தை அடைநதிருக்கிறீர்கள்.
இதற்கு அடுத்தாக இந்த வாழ்க்கையினுடைய மிகப் பெரிய லட்சியம் என்னவென்றால், அந்த பிரதிபரிப்பின் மூலம் எது? சூரியன்.

தொடரும்...

----

## பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்

அன்று பெங்களூரில் தியான சத்சங்கம். நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார்.

எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் 'சதக்' என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மச்சாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு.

மேலதிக தொடர்புகளுக்கு: (416) 439-2080


Home Renovations
Coverall Group Inc.
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
Contact: Siva
416-706-8160


PRECONSTRUCTION HOUSES & TOWNHOUSES!
RE/MAX
Four Sixteen Whitby Condos
Old Colony Estates
Falconcrest Homes
Hillsborough
Andrin Homes
Anchor Woods
Regal Crest Homes
Anchor Woods By Andrin Homes
Andrin Homes
Hometown Sharon Village
Blue Sky
Fieldgate Homes
Universal City Condos 4
Chestnut Hill Developments
U.C. Homes
Tribute Communities
Cornell Rouge Homes
Forest Hill Homes Ltd.
On the Mark Towns
Angus Glen South Village Homes
Kylemore Communities
Victory Green Homes
Nao Towns
Bala Logendralingam
REALTOR®
EXECUTIVE Award
100% Award
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222
647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9

மலேசிய மடல்

# உடற்பயிற்சியை கைகழுவும் தமிழர்கள்!!



நக்கீரன்

கோலாலம்பூர், ஜூன் 21:

**த**மிழர்கள் உடற்பயிற்சியை கைகழுவிவிட்டு, யோகாவை கைக்கொள்கின்றனர்.



திருவள்ளுவர், திருமூலர், இளங்கோ அடிகள் போன்ற ஆன்றோர் - சான்றோர் பெருமக்களின் வாழ்க்கையை முழுதாக அறிந்தவர்கள் யோகக் கலையின் உன்னதத்தை ஓரளவேணும் உணர்வர். நின்ற இடத்திலேயே நிலத்தின் தன்மையையும் நிலத்திற்கு அடியில் இருக்கும் நீரின் ஊகிக்கும் ஆற்றல் பெற்றவர்கள் கூடு விட்டு கூடு பாயும் நுட்பம் நாட்கணக்கில் பசியைத் துறத்தல், காற்று - வெம்மை - மழை உள்ளிட்ட வானியக் கூறுகளை வருமுன் உரைத்தல் போன்ற ஆற்றலைப் பெற்றவர்களைத்தான் யோகியர் என்றழைப்பது வழக்கு.

அந்த நிலையை எட்டுவதற்கான முயற்சிக்கும் பயிற்சிக்கும் பெயர்தான் யோகக் கலை. ஆனால், நிகழும் 21-ஆம் நூற்றாண்டில் நின்றபடியும் உட்கார்ந்தபடியும் கை, கால்களை நீட்டுவதும் உடலை வளைப்பதும் யோகா என்றாகி, அதுவே யோகக் கலையாகி, யோகக் கலையின் அருமையும் பெருமையும் அநியாயமாக சுறுங்கி சருகாகிவிட்டது. இதில், வேதனையான ஒன்று, உடற்பயிற்சி என்னும் கூட்டுச் சொல்லை தமிழர்களை மறந்துவிட்டதுதான்.

அத்துடன் உடற்பயிற்சியையும் மறந்தே விட்டனர். அப்படியே போகிற போக்கில் ஏதாவது மனமகிழ் மன்றம், அல்லது சமூக - பொது அமைப்புகளின் சார்பில் எங்கேயாவது ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கைகளையும் கால்களையும் இப்படியும் அப்படியுமென ஆட்டிவிட்டு, “நான் யோகா வகுப்புக்கு சென்று வருகிறேன்” என்று பெருமையாகப் பேசிக் கொள்வது நம்மவருக்கு இப்போது வாடிக்கையாகி விட்டது.

உடற்பயிற்சி என்பது சாதரண நிலையில் மேற்கொள்வது. வேளை வாய்க்கும் பொழுதெல்லாம் உடல் பயிற்சியை மேற்கொண்டால், நம் உடலில் உள்ள எலும்பு மண்டலம், தசை மண்டலம், நரம்பு மண்டலம், இரத்த ஓட்ட மண்டலம், சுவாச மண்டலம், சீரண மண்டலம், கழிவு மண்டலம், தோல் மண்டலம் ஆகிய எட்டு மண்டலங்களும் ஒருசேர இயங்கும். அதனால், அட்டியின்றி ஆரோக்கியம் தொற்றிக் கொள்ளும் நம் உடலை. இந்த உடற்பயிற்சியுடன் மூச்சுப் பயிற்சி அல்லது சுவாசப் பயிற்சியையும் இணைத்துக் கொண்டால் அது, இன்னும் நன்மையைக் கொண்டு வரும்.



உடற்பயிற்சியை நின்று கொண்டே செய்யலாம். ஆனால், மூச்சு (சுவாச)ப் பயிற்சியை உட்கார்ந்துதான் செய்ய வேண்டும். சுவாசப் பயிற்சியை மேற்கொள்வோருக்கு சுவாச மண்டலம் செம்மையடையும். மூக்கு, மூச்சுக் குழல், நுரையீரல், இதயம் உள்ளிட்ட சுவாச மண்டலம் நன்கு இயங்குவதால் மூச்சடைப்பு, இதயக்கோளாறு, இரத்த அழுத்தம் உள்ளிட்ட நோய்கள் அண்டவே அண்டாது. அத்துடன், உள்ளத்திற்கு புத்துணர்ச்சியையும் உடலுக்கு உற்சாகத்தையும் தர வல்லது இந்த சுவாசப் பயிற்சி.

இத்தகைய சுவாசப் பயிற்சியை (உட்கார்ந்து கொண்டு செய்வதால்) ஆசனப் பயிற்சி என்றும் அழைத்தனர் நம் முன்னோர். இந்த ஆசனப் பயிற்சி, உடலுக்கும் உள்ளத்திற்கும் நன்மையை, அதாவது யோகத்தைக் கொண்டு வருவதால் யோக ஆசனப் பயிற்சி என்று காலப்போக்கில் அழைக்க ஆரம்பத்தனர். யோகம் என்றால் நன்மைதான்.

யோகம் என்னும் சமஸ்கிருத சொல்லை தியானத்துடன் இணைத்து சமணம், பௌத்தம் உள்ளிட்ட பல சமயங்களிலும் பலவாறாக புனைந்து எழுதப்பட்டுள்ளன. சமய இலக்கியங்களில் யோகம் என்பதற்கு இதுதான் பொருள் என்றில்லாமல், ஆளாளுக்கு ஒவ்வொரு விதமாக மனம்போன போக்கில் எழுதிக் கொண்டுள்ளனர்.

ஆனால், உடற்பயிற்சியை இடம்பெயரச் செய்துவிட்டு அந்த இடத்தில் யோகா என்னும் சமஸ்கிருத சொல் ஒட்டிக் கொண்டதற்கு யோக ஆசனம்தான் காரணம். மாறாக, தமிழர் வாழ்விலும் தமிழ் மொழியிலும் யோகா என்பதற்கு அறவே இடமில்லை.


யோக ஆசனப் பயிற்சியில் ஒரு கட்டுப்பாடு, வரம்பெல்லாம் இல்லை. இதில் ஐந்து பெரும்பிரிவுகள் உள்ளன என்கின்றனர் சிலர் இன்னும் சிலர், பதினைந்து பிரிவுகள் உள்ளதாக உரைக்கின்றனர் மற்றும் சிலரோ, “அதெல்லாம் ஒன்றுமில்லை யோக ஆசனத்தில் உள்ளது பன்னிரண்டு பிரிவுகள்” என்கின்றனர். எது எவ்வாறாயினும், பிரிவுகள் எத்தனை யாயினும் நின்ற பாத ஆசனம், பதமாசனம், வீராசனம், சிரசாசனம், யோகமுத்ரா, மயூராசனம், பிறையாசனம், பாதசுத்தாசனம், திரிகோண ஆசனம், சக்கர ஆசனம், மிருக ஆசனம், நடராச ஆசனம், பிராண ஆசனம், கவையாசனம், பூர்ண நவ ஆசனம் என்றெல்லாம் ஏறக்குறைய அறுபது ஆசன முறைகள் உள்ளன. மொத்தத்தில் உடற்பயிற்சி தவிர, மூச்சுப் பயிற்சி அல்லது ஆசனப் பயிற்சி அல்லது யோக ஆசனப் பயிற்சி என்பதில் “யோகா”-வை மட்டும் நாம் கெட்டியாகப் பற்றிக் கொண்டோம்.



இந்த யோக ஆசனப் பயிற்சியைப் பற்றித்தான் கடந்த 2014-ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் மன்றத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பெரிதாக முழங்கினார். அந்த ஆண்டு செப்டம்பர் திங்கள் 27-ஆம் நாளில் ஐநா மன்றத்தில் பேசிய மோடி, யோகாசனத்தை (மூச்சுப்பயிற்சியை)ப் பற்றி வானளாவ புகழ்ந்து பேசினார்.

மூச்சுப் பயிற்சி அல்லது ஆசனப் பயிற்சியைப் பற்றி (யோகாசனம்), பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னமே நம் சான்றோர்களும் ஆன்றோர்களும் நமக்கு சொல்லியுள்ளனர். உலக இலக்கிய மேடையில் தமிழ் மொழிக்கு இருக்கை ஏற்படுத்தித் தந்த திருவள்ளுவப் பெருந்தகை, பெரிய புராணம் என்னும் சமய இலக்கியத்தைப் படைத்த சேக்கிழார் பிரான், ஏறக்குறைய 18 நூற்றாண்டுகளுக்கு முன் சோழ, பாண்டிய, சேர நாடுகளை இணைத்து தமிழியத் தொன்மையை நிலைநாட்டும் சிலப்பதிகாரத்தைப் படைத்த இளங்கோ அடிகள் போன்றோரெல்லாம் இந்த யோகக் கலையில் சிறந்து விளங்கியவர்கள். அதீதமான மூச்சுப் பயிற்சியுடன் மனவளக் கலையையும் பயின்று சித்தர்களாக வாழ்ந்த ஏராளமானோரை தமிழ் வரலாறு நெடுகக் காணமுடியும்.

பழந்தமிழ்ச் சமூகத்தில் 64 கலைகளை அறிந்தவர்களுக்கு அகத்தியர் என்னும் பட்டம் அளிக்கப்படுவதுண்டு அந்த வகையில் தொன்மையான தமிழ்ச் சமுதாயத்தில் 33 அகத்தியர்கள் வாழ்ந்ததாக சொல்லப்படுகின்றனர். அதைப்போல 64 கலைகளை அறிந்த பெண்களுக்கு ஔவையார் என்னும் பட்டத்தைச் சூட்டி சிறப்பித்தனர். ஆனாலும், நாம் அறிந்ததெல்லாம் ஆத்திச் சூடியை இயற்றிய ஓர் ஔவையாரை மட்டும்தான். மொத்தத்தில், இப்படி 64 கலைகளை அறிந்தவர்கள் பெரும்பாலும் சித்தர்களாகவும் யோகக் கலை வல்லுநர்களாகவும் விளங்கினர்.



எதிரியை ஒரே அடியில் முடங்க வைத்தல், அப்படி முடங்கி முடக்குவாதம் கண்டவர்களை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருதல், போர்க்கலை, கவி புனைதல், சித்த மருத்துவம், நாட்கணக்கில் உணவின்றி, நீரின்றி தியான நிலையில் ஆழ்ந்திருந்தல், ஒரு மண்டலத்திற்கு (48 நாட்கள்) கசப்பான உணவை மட்டும் உண்டு நாகப் பாம்பு, கட்டு விரியன், கொடிய குளவி போன்ற நச்சு உயிரிகளின் கொடிய நஞ்சை எதிர்க்கும் ஆற்றலை உடலில் கொண்டிருத்தல் ஆகியத் தன்மைகளைப் பயிற்றுவிக்கும் குருகுல வகுப்பிற்கு சென்று வந்த அக்கால மாணவர்கள்கூட, “நான் யோக வகுப்பிற்கு செல்கிறேன்” என்று சொன்னதில்லை.

ஆனால், வெறுமனே உட்கார்ந்து எழுந்துவிட்டு, கைகளையும் கால்கலையும் கொஞ்சம் ஆட்டி அசைத்துவிட்டு, சிறதளவு சுவாசப் பயிற்சியை முடித்துக் கொண்டு “நான் யோகா கிளாஸ்க்குப் போய்விட்டு வருகிறேன்” என்று சொல்லும் ஆண்களும் பெண்களும் உடலில் இருந்து ஒரு சொட்டு வியர்வைக்கூட வெளிவரும்படி அன்றாட வாழ்வில் கவனம் கொள்வதில்லை குறிப்பாக, பெண்கள் வீட்டு வேலைகளை செய்யும்பொழுதுகூட இயந்திர மனிதனைப் போல நின்று கொண்டேதான் செய்கின்றனர். குறைந்தபட்சம் குணிந்து நிமிர்வதுகூட இல்லை.

இவற்றை யெல்லாம் நாம் எண்ணிப்பார்ப்பதுமில்லை கருதுவதுமில்லை.

இப்படிப்பட்ட சூழலில் மூச்சுப் பயிற்சிக்கு “யோகா” என்ற சம்ஸ்கிருத முத்திரையைக் குத்தி, ஐநா மன்றத்தில் மோடி பேசியது, அங்குள்ளவர்களுக்கு, “ஆலையில்லாத ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை” என்பதைப் போல பெரிதாகப்பட்டிருக்கலாம்.



*ஆனால், நமக்கு?*

உடனே அம்மா தினம், அப்பா தினம், உப்பு தினம், சீனி தினத்தைப் போல (அந்தத் தினம், இந்தத் தினம் என்று “தினம்” அறிவிப்பதைத் தவிர ஐநா மன்றத்திற்கு வேறு என்ன தெரியும்?) “யோகா” தினத்தையும் அறிவிக்க அந்த ஐநா மன்றம் முடிவு செய்தது. இதற்கு 170 நாடுகள் ஆதரவாம். அந்த யோகா (மூச்சுப் பயிற்சி) நாள்தான் கடந்த 2015-ஆம் ஆண்டு முதல் ஜூன் திங்கள் 21-ஆம் நாளில் உலக அளவில் கொண்டாடப்பட்டு வருகிறது.

இதற்கு சமய சாயம் பூச மோடி முற்பட்டது அக்கிரமம். ஆனாலும் இது எடுபடவில்லை. அதேவேளை, இதை உடற்பயிற்சி என்ற அளவில் ஆ.்.ப்காகானிஸ்தான், பாக்கிஸ்தான் போன்ற ஆசிய இஸ்லாமிய நாடுகளும் மேற்குலக நாடுகளும் உடனே ஏற்றுக் கொண்டாலும் மலேசியா போன்ற நாடுகள் ஓர் எச்சரிக்கை உணர்வுடன் மெல்ல ஏற்றுக் கொண்டன.

இருந்தபோதும், வளைகுடா மண்டலத்தில் சௌதி அரேபியா இந்த ஆசனப் பயிற்சி என்னும் யோகப் பயிற்சிக்கு தடைவிதித்திருந்தது. தற்பொழுது அங்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது உலக அளவில் கவனத்தை ஈர்த்துள்ளது. சௌதி அரேபியா போன்ற நாடுகள், உட்கார்ந்து செய்யும் உடற்பயிற்சியான யோகப் பயிற்சிக்கு தடை விதிக்கக் காரணம், ஒரு சில தரப்பினர் தொடர்ந்து யோகக் கலையை சமய எல்லையில் நிறுத்தும் வேலையை சளைக்காமல் மேற்கொள்வதுதான்.

உண்மையில், இது தமிழிய சித்தர்கள் உணர்ந்த நலம் தரும் சுவாசப் பயிற்சி ஆகும். பெருமைமிக்க இந்த மூச்சுப் பயிற்சியின் உன்னதத்தை அடியோடு தொலைத்து விட்டு, மற்றவர்கள் எப்படியோப் போகட்டும் தமிழர்கள் “யோகா”, “யோகா” என்று அலையலாமா?

இங்கே, கருத்து மட்டும் சிதையவில்லை மொழியும் சிதைகிறது. நல்லோரே சிந்திப்பீர், ஒரு நொடிப் பொழுது! யோகா என்னும் சொல்லைத் தவிர்ப்போம். உடற்பயிற்சி, சுவாசப் பயிற்சி அல்லது ஆசனப் பயிற்சி என்பதை நிலைநிறுத்துவோம்!!

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**

மலேசிய மடல்

# மின்னல் பண்பலை வானொலிக்கு புதிய தலைவர் 'கவித்திரு' கிருஷ்ணமூர்த்தி


நக்கீரன்

கோலாலம்பூர், ஜூன் 25:

மலேசிய அரச வானொலியான மின்னல் பண்பலையின் புதிய நிருவாகத் தலைவராக "கவித்திரு" கு. கிருஷ்ணமூர்த்தி பொறுப்பேற்றிருக்கிறார்.

ஜூன் 13-ஆம் நாள் வரை பொறுப்பில் இருந்த திருமதி. இராதா, அது-வரை இடைக்கால நிருவாகியாக பொறுப்பு வகித்து வந்தார். குமரனுக்கு அடுத்து பொறுப்பிற்கு வந்த திருமதி சுமதி, பதவி உயர்வு பெற்று தொலைக்காட்சி நிருவாகப் பிரிவுக்கு சென்ற நிலையில் இடைக்கால ஏற்பாடாக மின்னல் பண்பலை வானொலியின் தற்காலிக நிருவாகியாக 2020 அக்டோபர் 22-ஆம் நாள் முதல் இராதா பொறுப்பு வகித்து வந்த நிலையில், இப்பொழுது ஜூன் 14-ஆம் நாள் "கவித்திரு" கிருஷ்ணமூர்த்தி குப்பன் புதிய நிருவாகியாக மகுடம் சூட்டிக் கொண்டுள்ளார்.



மலேசிய எல்லையைக் கடந்து உலகளாவிய அளவில் நேயர்களைக் கொண்டிருக்கும் முதல் 24 மணி நேர தமிழ் வானொலியான ஆர்டிஎம் மின்னல் வானொ-லி நேயர்களின் சார்பில் கிருஷ்ணமூர்த்திக்கு முதற்கண் வாழ்த்து உரித்தாகட்டும்.

மிகவும் நெருக்கடியான கொரோனா காலக்கட்டத்தில் மின்னல் பண்பலை வானொலியை வழிநடத்திய இராதாவின் சேவை, பாராட்டுக்குரியது.

நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம் என்னும் ஐங்கூறுகளின்வழி இயற்கை வெளிப்படுத்தும் அத்துணைக் கூறுகளும் மனித குலத்திற்கு பயன்தரக் கூடியவை.. ஒன்றைத் தவிர் அந்த ஒன்று மின்னல்.

கோடிக்கான "வோல்ட்" மின்னாற்றலை நொடிப் பொழுதில் பெறும் மின்னல் என்னும் பேராற்றல், அதை தன் வசம் வைத்துக் கொள்ள வழியின்றி அகப்படும் ஏதாவதொன்றின்வழி இறக்கி வைக்க பூமியை நோக்கி வெ-குவேகமாய பாயும் வேளையில், புவியின் காந்த ஆற்றலும் மின்னலைக் கவருவதால் மின்னலின் பாய்ச்சல் இரட்டிப்பாகிறது. அந்த அவசரப் பொழு-தில் தன்வசம் எது சிக்கினாலும் அதைத் தீய்த்து அழித்துவிடும் குணம் கொண்டதுதான் மின்னல்.

அரண்மனை யானைக்கு முன்னே வரும் மணியோசையைப் போல தொடுவானத்தில் பளிச்சிடும் மின்னலைக் கண்டதும் கண்களை மூடிக் கொள்ளும் நாம், அடுத்து இடியோசையை எதிர்பார்த்து காதுகளை பொத்திக் கொள்கிறோம். இவ்வாறு மாந்த குலத்திற்கு மருட்டலையும் மிரட்சியையும் அதிரடியாகக் கொடுக்கும் மின்னலின் பெயரை, "அசைந்தாடும் தென்றலே தூது செல்லாயோ" என்னும் பாடல் வரிகளைப் போல காற்றில் மெல்லத் தவழ்ந்து வந்து நம் செவிக்கும் செவியினூடாக சிந்தைக்கும் இன்பம் பயக்கும் ஒலியோ-சையை திகட்டாமல் அள்ளியள்ளி வழங்குவதுடன் அல்லி மலரினும் மேலான இதந்தரும் இன்னோசையை வானவீதியில் சுமந்துவரும் வானொலிக்கு பெயர் சூட்டிய பெருமக்களின் எண்ணத்தை எண்ணி - வெண்ணிப் பார்க்கிறேன் ஒன்றும் புலப்படவில்லை எனக்கு ஆனாலும், ஏதோ நுட்பமான காரணம் இருந்திருக்க வேண்டும்போலும், சம்பந்தப்பட்ட அவர்களுக்கு!!

அத்தகைய மின்னல் வானொலிக்கு இன்று பொறுப்பேற்றுள்ள "கவித்திரு" கிருஷ்ணமூர்த்தி, இதே வானொலி "ஒலியலை-6" என்னும் பெயருடன் வான வீதியில் வலம் வந்த காலத்தில் இணைந்து, பின் பிரிந்து, மீண்டும் இணைந்தவர்.

புத்ரா பல்கலைக்கழகத்தின் விவசாய வாணிபத் துறை இளங்கலைப் பட்டதாரியான இவர், பொருளாதார திட்டமிடல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்ற நிலையில், 1998 காமன்வெல்த் போட்டியின்போது விளையாட்டு செய்திக்காக தற்காலிக பணியில் ஆர்டிஎம் வானொலியில் சேர்ந்திருக்கிறார்.

கடந்த நூற்றாண்டும் இந்த நூற்றாண்டும் இணைந்து புத்தாயிரத்தாம் ஆண்டு பிறந்த வேளையில், வானொலி-6 இல் மீனாகுமாரி, முருகையா முத்துவீரன், முனைவர் மு. சங்கர், சாந்தி, தமையந்தி, குமரன், விவே கானந்தன், காந்தி காசிநாதன், பார்வதி சுப்பிரமணியன் உள்ளிட்டோர் அடங்கிய பட்டாளமே இணைந்தது என்று தெரிவித்த கிருஷ்ணமூர்த்தி, பல்கலைக்கழக வாழ்க்கை எப்படி தன்னையும் சக மாணவ-ியான ரா. சீத்தாலெட்சுமியையும் மண வாழ்க்கையில் கொண்டு சேர்த்ததோ அதைப்போல காந்தி காசிநாதன், பார்வதி சுப்பிரமணியன் இருவரையும் இல்வாழ்க்கையில் இணைத்தது என்றார்.



அறிவிப்பாளர், செய்தி வாசிப்பாளர், விளையாட்டுச் செய்தி தொகுப்பாளர் என்றெல்லாம் வானொலியில் அகலக் கால் வைத்த இவர், 2003-இல் விலக நேர்ந்தது. ஆனாலும் அடுத்த ஈராண்டுகளில் நிரந்தரப் பணியாளராக இணைந்த கவித்திரு கிரு'ணமூர்த்தி, நிறைந்த பட்டறிவும் அகண்ட பார்வையும் வாய்க்கப்பெற்று இப்பொழுது, மலேசியத் தமிழ் வானொலி நேயர்களுக்குப் பாத்திரமான மின்னல் பண்பலை வானொ-லியை வழிநடத்த வந்திருக்கிறார்.

இதற்கிடையில், சலனம், மோகனம், கிரணம் போன்ற இசை வட்டுக்களின் பா-டலாசிரியராகவும் முத்திரைப் பதித்த மூர்த்தி, கலைத்துறையிலும் தடம் பதித்திருக்கிறார். உரைவிச்சு என்னும் புதுக்கவிதையில் பெருநாட்டம் கொண்டு கவித்தமிழ் என்னும் பெயரில் தனி வலைப்பதிவை ஆரம்பித்து, தன் கவிதைகளை மலர வைத்திருக்கிறார். இந்த வலைத்தளத்தின் பெயரான கவித்தமிழ் என்னும் கூட்டுச் சொல்லை, தன் பெயரின் முன்னொட்டாக இணைத்துக் கொண்டு, கவித்தமிழ் கிருஷ்ணமூர்த்தி என்னும் பெயரிலேயே அறியப்படும் இந்தப் புதியத் தலைவரிடம் சில சங்கதியைச் சொல்லி வைக்க விழைகி-றேன்.

மின்னலின் காலைக்கதிர் நிகழ்ச்சி, உண்மையில் சமூகப் பாங்குடன் படைக்கப்படுகிறது. அதன் அறிவிப்பாளர்கள், மலேசி-ய இந்திய சமுதாயம் எதிர்நோக்கும் புதுப்புது சிக்கலுக்கெல்லாம் தீர்வு காணும் முகமாக அவற்றை அறிமுகப்படுத்தி, தக்காரின் துணை கொண்டு தீர்வையும் முன் வைக்கின்ற-னர். பல்துறைசார் சாதனையாளர்களையும் சாதனை மாணவர்களையும் அறிமுகப்படுத்தி அவர்களை ஊக்கப்படுத்தும் விதமும் பாராட்டிற்குரியது. ஆ-னாலும், அறிவிப்பாளர்கள் அநியாயமாக கொச்சை மொழியைப் பயன்படுத்தி தமிழை பச்சையாக சிதைப்பதைத் தவிர்க்க வேண்டும். அத்துடன் அரட்டை அடிப்பதும் குறைக்கப்பட வேண்டும். குறிப்பாக, அண்மைக் காலமாக காலைக்கதிரில் சிரிப்பொலி அதிகமாக கேட்கிறது. அதே அறிவிப்பாளர்கள் மாலை வேளையில் வலம் வரும்பொழுதும் சிரிப்பொலிக்கு பஞ்சமில்லா நிலை தொடர்கிறது.

அடுத்து, குமரன் காலத்தில் இருந்து ஒன்றைச் சொல்லி வருகிறேன். தீர்வுதான் கிட்டவில்லை. அலுவலகமாக இருந்தாலும் வீடாக இருந்தாலும் மின்னல் வானொலியை இடைநில்லாது கேட்கும் வழக்கத்தால், மற்றவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் ஒரு குறிப்பிட்ட அளவு ஒலி அளவுடன் வானொ-லியைத் திறந்து வைப்பது வழக்கம் எனக்கு. ஆனால், செய்தி அறிக்கை ஒலிபரப்பப்படும் நேரத்தில் மட்டும் ஒலி அளவை ஏன் குறைக்கிறீர்கள் என்று தெரியவில்லை. செய்தி அறிக்கை சரியாக கேட்காததால், அப்பொழுது ஒலி அளவை சற்று கூட்ட வேண்டி உள்ளது.



செய்தி முடிந்ததும், மின்னலுக்கான இசை அல்லது விளம்பரம், அதைத் தொடர்ந்து நாட்டுப்பற்றுப் பாடல் அல்லது பண்பாட்டு.., ஒருமைப்பாட்டு பாடல்களை ஒலியேற்றும்போது ஏகமாக, குறிப்பாக கலைஞர் செய்திகள் தொலைக்காட்சி அலைவரிசையைப் போல தாறுமா-றாக ஒலியைக் கூட்டி வைக்கின்றீர்கள். அப்பொழுதெல்லாம் மின்னலைத் திட்டிக் கொண்டே ஓடிச்சென்று பட்டென அடைக்க வேண்டியுள்ளது. இந்தச் சிக்கல் கவித்திரு கிருஷ்ணமூர்த்தி காலத்திலாவது களையப்பட்டால் நல்லது.

"தமிழை தமிழாக உச்சரிக்க வேண்டும்" என்று புதிதாக வந்துள்ள தலைவர் கண்டிப்பு காட்டுகிறார் என்று அறிவிப்பாளர்கள் சொல்வதில் இருந்து ஒன்றைப் புரிந்துகொள்ள முடிகிறது. மின்னல் படையை செம்மை படுத்தி, மலேசிய இந்திய சமுதாயம் குறிப்பாக வானொலி நேயர்கள் இன்னும் பயனு-றும் வகையில் மாற்றி அமைப்பார் இந்தப் புதிய தலைவர் என்ற நம்பிக்கைப் பிறந்துள்ளது.

"பதிமூன்று" என்றால் மூன்று கணவன்மார் என்று பொருள் பதின்மூன்று என்றால்தான் 13 என்ற எண்ணைக் குறிக்கும் அதைப்போல "ஐநூறு" என்றால் அழகிய நூறு என்றாகும். ஐந்நூறு என்றால்தான் ஐந்து நூறுகள் என பொருள்படும். அன்னையர் என்பதை தாய்மார் என்றாலே போதும் தாய்மார்கள் என கூடுதலாக இன்னொரு பன்மை விகுதியான "கள்"ளைச் சேர்ப்பது, தானியத்தில் கல்லைக் கலந்து கலப்படம் புரிவதைப் போன்றது என்பதை யெல்லாம் அறிவிப்பாள அன்பர்கள் தெரிந்து தெளிவுபெற்றால் சமுதாயத்திற்கும் தமிழுக்கும் நல்லது.

இதற்கெல்லாம் தீர்வு பிறக்கும் என்ற நம்பிக்கையை "ஒருவழிப் பாதை" உள்ளிட்ட வானொலி நாடகங்களை இயற்றிய நாடக ஆசிரியருமான கவித்தமிழ் கிருஷ்ணமூர்த்தி ஏற்படுத்தி இருக்கிறார்.

பனிமலர், இருவர் என்றெல்லாம் எண்ணற்ற சின்னத்திரை ஓவியங்களுக்கு கதை, திரைக்கதை, வசனம் எழுதியதுடன் பாடல்களையும் புனைந்திருக்கும் இவர், "அகநக நட்பு" எனும் தொலைக்காட்சித் திரைப்படத்தை இயக்கியும் இருக்கிறார்.

தமிழ்ப் பற்றுடன் கவி ஆர்வமும் கலை ஆர்வமும் மிக்க கிருஷ்ணமூர்த்தி, சமுதாய நாட்டமும் மிக்கவர். அதற்கு ஈடாக இவரின் இல்லத்தரசியான சீத்தாலெட்சுமியும் விளங்குகிறார். 2000-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் மணம் முடித்த இவர்கள், பொதுச் சேவைக்காக தங்களின் மணவாழ்வை ஈகம் செய்துள்ளனர். அதன்பொருட்டு, இருவரும் பேசி வைத்துக் கொண்டு இதுவரை மக்கள் பேற்றை புறந்தள்ளி வந்துள்ளனர்.

வாழ்க இந்த இணையர் வளர்க மின்னல் பண்பலை வானொலி.

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**


Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

# அன்பின் தொனி - 614

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம் - ஜெபத்தின் வல்லமை.**

கர்த்தாவே, தாவீதையும் அவனுடைய சகல உபத்திரவத்தையும் நினைத்தருளும். அவன்: நான் கர்த்தருக்கு ஒரு இடத்தையும், யாக்கோபின் வல்லவருக்கு ஒரு வாசஸ்தலத்தையும் காணுமட்டும், என் வீடாகிய கூடாரத்தில் பிரவேசிப்பது மில்லை, என் படுக்கையாகிய கட்டிலின்மேல் ஏறுவதுமில்லை, என் கண்களுக்கு நித்திரையையும், என் இமைகளுக்கு உறக்கத்தையும் வரவிடுவதுமில்லை என்று, கர்த்தருக்கு ஆணையிட்டு, யாக்கோபின் வல்லவருக்குப் பொருத்தனை பண்ணினான். இதோ, நாம் எப்பிராத்தாவிலே அதின் செய்தியைக் கேட்டு, வனத்தின் வெளிகளில் அதைக் கண்டோம். ஆவருடைய வாசஸ்தலங்களுக்குள் பிரவேசித்து, அவர் பாதபடியில் பணிவோம். கர்த்தாவே, உமது வல்லமை விளங்கும் பெட்டியுடன் நீர் உமது தாபர ஸ்தலத்திற்குள் எழுந்தருளும். உம்முடைய ஆசாரியர்கள் நீதியைத் தரித்து, உம்முடைய பரிசுத் தவான்கள் கெம்பீரிப்பார்களாக. நீர் அபிஷேகம்பண்ணுவித்தவனின் முகத்தை உமது தாசனாகிய தாவீதினிமித்தம் புறக் கணியாதிரும். உன் கர்ப்பத்தின் கனியை உன் சிங்காசனத்தின்மேல் வைப்பேன் என்றும், உன் குமாரர் என் உடன்படிக்கையையும், நான் போதிக்கும் என் சாட்சிகளையும் காத்து நடந்தால், அவர்கள் குமாரரும் என்றென்றைக்கும் உன் சிங்காசனத்தில் வீற்றிருப்பார்கள் என்றும், கர்த்தர் தாவீதுக்கு உண்மையாய் ஆணையிட்டார், அவர் தவறமாட்டார். கர்த்தர் சீயோனைத் தெரிந்துகொண்டு, அது தமக்கு வாசஸ்தலமாகும்படி விரும்பினார். இது என்றென்றைக்கும் நான் தங்கும் இடம், இதை நான் விரும்பினபடியால், இங்கே வாசம்பண்ணுவேன். அதின் ஆகாரத்தை நான் ஆசீர்வதித்து வருவேன், அதின் ஏழைகளை நான் அப்பத்தினால் திருப்தியாக்குவேன். அதின் ஆசாரியர்களுக்கு இரட்சிப்பை உடுத்துவேன், அதிலுள்ள பரிசுத்தவான்கள் மிகவும் கெம்பீரிப்பார்கள். அங்கே தாவீதுக்காக ஒரு கொம்பை முளைக்கப்பண்ணுவேன், நான் அபிஷேகம்பண்ணுவித்தவனுக்காக ஒரு விளக்கை ஆயத்தம்பண்ணினேன். அவன் சத்துருக்களுக்கு வெட்கத்தை உடுத்து வேன், அவன்மீதிலோ அவன் கிரீடம் பூக்கும் என்றார். - **சங்கீதம் 132: 1-18**

இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது? அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும், எர்மோன்மேலும், சீயோன் பர்வதங்கள்மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது, அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார். - **சங்கீதம் 133: 1-3**

இதோ, இராக்காலங்களில் கர்த்தருடைய ஆலயத்தில் நிற்கும் கர்த்தரின் ஊழியக்காரரே, நீங்களெல்லாரும் கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள். உங்கள் கைகளைப் பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக எடுத்து, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பாராக. - **சங்கீதம் 134: 1-3**

அல்லேலூயா, கர்த்தருடைய நாமத்தைத் துதியுங்கள், கர்த்தரின் ஊழியக்காரரே, துதியுங்கள். கர்த்தருடைய வீட்டிலும், நமது தேவனுடைய ஆலயப்பிராகாரங்களிலும் நிற்கிறவர்களே, கர்த்தரைத் துதியுங்கள். கர்த்தர் நல்லவர், அவருடைய நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுங்கள், அது இன்பமானது. கர்த்தர் யாக்கோபைத் தமக்காகவும், இஸ்ரவேலைத் தமக்குச் சொந்தமாகவும் தெரிந்துகொண்டார். கர்த்தர் பெரியவர் என்றும், நம்முடைய ஆண்டவர் எல்லா தேவர்களுக்கும் மேலானவர் என்றும் நான் அறிவேன். வானத்திலும் பூமியிலும், சமுத்திரங்களிலும், எல்லா ஆழங்களிலும், கர்த்தர் தமக்குச் சித்தமானதையெல்லாம் செய்கிறார். அவர் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து மேகங்களை எழுப்பப்பண்ணி, மழையுடன் மின்னலையும் உண்டாக்கி, காற்றைத் தமது பண்டசாலைகளிலிருந்து புறப்படப்பண்ணுகிறார். அவர் எகிப்திலே மனுஷருடைய தலைப்பிள்ளைகளையும் மிருகத்தின் தலையீற்றுகளையும் அடித்தார். எகிப்துதேசமே, உன் நடுவில் பார் வோன்மேலும் அவனுடைய எல்லா ஊழியக்காரர்மேலும் அடையாளங்களையும் அற்புதங்களையும் அனுப்பினார். அவர் அநேகம் ஜாதிகளை அடித்து, பலத்த ராஜாக்களைக்கொன்று, எமோரியரின் ராஜாவாகிய சீகோனையும், பாசானின் ராஜாவாகிய ஓகையும், கானானின் சகல ராஜ்யங்களையும் அழித்து, அவர்கள் தேசத்தைத் தம்முடைய ஜனமாகிய இஸ்ர வேலுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தார். கர்த்தாவே, உம்முடைய நாமம் என்றைக்குமுள்ளது, கர்த்தாவே, உம்முடைய பிரஸ்தாபம் தலைமுறை தலைமுறைக்கும் இருக்கும். கர்த்தர் தம்முடைய ஜனத்தின் நியாயத்தை விசாரித்து, தம்முடைய ஊழியக்காரர்மேல் பரிதாபப்படுவார். அஞ்ஞானிகளுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது. அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது, அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது. அவைகளுக்குக் காதுகளிருந்தும் கேளாது, அவைகளுடைய வாயிலே சுவாசமுமில்லை. அவைகளைப் பண்ணுகிறவர்களும், அவைகளை நம்புகிறவர்கள்யாவரும், அவைகளைப்போல் இருக்கிறார்கள். இஸ்ரவேல் குடும்பத்தாரே, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள், ஆரோன் குடும்பத்தாரே, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள். லேவி குடும்பத்தாரே, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள், கர்த்தருக்குப் பயந்தவர்களே, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள். எருசலேமில் வாசம்பண்ணுகிற கர்த்தருக்கு சீயோனிலிருந்து ஸ்தோ த்திரமுண்டாவதாக. அல்லேலூயா. - **சங்கீதம் 135: 1-21**

பாபிலோன் ஆறுகள் அருகே நாங்கள் உட்கார்ந்து, அங்கே சீயோனை நினைத்து அழுதோம். அதின் நடுவிலிருக்கும் அலரிச்செடிகளின்மேல் எங்கள் கின்னரங்களைத் தூக்கிவைத்தோம். எங்களைச் சிறைபிடித்தவர்கள் அங்கே எங்கள் பாடல்களையும், எங்களைப் பாழாக்கினவர்கள் மங்கள கீதத்தையும் விரும்பி: சீயோனின் பாட்டுகளில் சிலதை எங்களுக்குப் பாடுங்கள் என்று சொன்னார்கள். கர்த்தரின் பாட்டை அந்நியதேசத்தில் நாங்கள் பாடுவதெப்படி? எருசலேமே, நான் உன்னை மறந்தால் என் வலதுகை தன் தொழிலைமறப்பதாக. நான் உன்னை நினையாமலும், எருசலேமை என் முக்கியமான மகிழ்ச்சியிலும் அதிகமாக எண்ணாமலும்போனால், என் நாவு என் மேல்வாயோடு ஒட்டிக்கொள்வதாக. கர்த்தாவே, எருசலேமின் நாளில் ஏதோமின் புத்திரரை நினையும், அவர்கள்: அதை இடித்துப்போடுங்கள், அஸ்திபாரமட்டும் இடித்துப்போடுங்கள் என்று சொன்னார்களே. பாபிலோன் குமாரத்தியே, பாழாய்ப்போகிறவளே, நீ எங்களுக்குச் செய்தபடி உனக்குப் பதில் செய்கிறவன் பாக்கியவான். உன் குழந்தைகளைப் பிடித்து, கல்லின்மேல் மோதியடிக்கிறவன் பாக்கியவான். - **சங்கீதம் 137: 1-9**

(தொடரும்...)


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

ALL DEBT SOLUTIONS CR PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.




4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும் அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

# ஈழத்துத் திருக்கோவில்கள்

952



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம், கொழும்பு

**"தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறி வாரில்லை
சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யானே."**

அக்காலப்பகுதியில் எங்கும் சிறுதெய்வ வழிபாடு மேம்பட்டுக் காணப்பட்டது. இவ்வாறான ஆலயங்கள் சிவாகம நெறி தழுவாமல் பேணப்பட்டு வந்தன. இந்நிலையை அவதானித்த திரு. அருணாசலம் பொன்னம்பலமுதலியார் அவர்கள், சிவாகம முறையிலான சிவாலயமொன்றைக் கொழும்பு மாநகரிலே கட்டவேண்டும் என்ற ஆதங்கம் கொண்டவராகக் காணப்பட்டார். இவ்வாலயம் கட்டுவதற்குரிய ஐந்து ஏக்கர் நிலப்பரப்பை, கப்ரன் ஜோண் பவுல் ஸ்ரோன் என்ற ஆங்கிலேயரிடம் விலைக்கு வாங்கினார். சிவாலயத்தை அமைப்பதற்குரிய சிற்பிகளையும், கோயிற் கட்டடக் கலைஞர்களையும் தென்னிந்தியாவிலிருந்து வரவழைத்தார். ஆரம்பகாலத்தில் இக்கோயில் கல்லாலும், செங்கட்டியாலும், சுண்ணாம்புச் சாந்தாலும் கட்டப்பட்டது.

இச்சிவாலய திருப்பணிவேலைகள் ஆரம்பமாகி, இரண்டு வருடத்தில் அனைத்துத் திருப்பணிகளும் சிறப்பாக நிறைவு பெற்றன. இவ்வாலயத்தின் மகாகும்பாபிஷேகம், 1857 ஆம் ஆண்டு, மார்கழிமாதம் மிக விமரிசையாக நடந்தேறியது. திருக்கோயிலின் உயிர்நிலையாக ஆலயத்தின் கருவறை விளங்குகின்றது. இவ்வாலத்தின் கருவறையிலே இருபத்திரண்டு அங்குல உயரங்கொண்ட சிவலிங்கமும், போகசக்தியும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. திரு. பொன்னம்பலம் அருணாசலம் முதலியார் அவர்கள் தமது வீட்டிலே பாலயந்திரம் ஒன்றினை வைத்துப் பூசித்து வந்தார். இந்த யந்திரத்தை இவ்வாலயத்திலே நிறுவப்பட்ட முப்பத்திரண்டு அங்குல உயரங் கொண்ட சிவகாமி அம்பாளின் பீடத்திற்கு அடியிலே வைத்து அம்பாளை அதன் மேல் நிறுவினார். தான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற பெருநோக்கு, முதலியார் அவர்களுடைய செயலிலே புலப்பட்டுள்ளது.

திருக்கோயில்களிலே எழுந்தருளியுள்ள ஆலயங்களின் அருள்வீச்சிற்கு மந்திரங்களினால் சக்தியூட்டப்பட்ட யந்திரப்பிரதிஷ்டையும், கும்பாபிஷேகமும் முக்கிய காரணங்களாக அமைகின்றன. சாதாரண வழக்கிலே யந்திரம் என்பது இயக்கும் கருவியைக் குறிக்கின்றது. யந்திரம் இல்லாது வண்டி இயங்காது. அதே போல யந்திரப் பிரதிஷ்டை செய்யப்படாத திருவுருவத்திலே, பூரணமான தெய்வீக அலைகள் ஏற்படுவதில்லை என்பது ஞானியர் கருத்தாகக் காணப்படுகின்றது. அத்தோடு சிவகாமி அம்பாளின் பாதாரவிந்தங்களில் ஸ்ரீசக்கரம் என்னும் மகிமை வாய்ந்தயந்திரமும் வைத்துப் பூசிக்கப்படுகின்றது. இவ்வாறான அருள்வீச்சுக்கொண்ட ஸ்ரீசக்காத்தினை அம்பாளின் அருகில் வைத்துப் பிரதிஷ்டை செய்வித்தார்.

ஸ்ரீசக்கர வழிபாடு என்பது உலகை உருவாக்கி காத்துவரும் அன்னைக்குச் செய்யும் யந்திர, தந்திர வழிபாடாகும். சக்திக்காவும், அறிவுக் கூர்மைக்காகவும் ஸ்ரீசக்கர வழிபாடு செய்யும் மரபு காணப்படுகின்றது. ஓர் உருவம், ஒரு நாமம் என்று அமையாத இறைவனை, விக்கிரகமாகவும், சித்திரமாகவும் வழிபடுவது வழக்கம். அவ்வாறே பொருள் நிறைந்த சொற்களிலும், சக்திவாய்ந்த சப்தஉச்சாடனங்களிலும் வெளிப்படுத்தி, மந்திரங்களாக ஓதி இறைவனை வழிபடும் மரபு.ம் வழக்கிலுள்ளது. இதில் பீஜ அட்சரங்களின்மூலம் சக்தியை உருவாக்கும் வித்துக்கள், எழுத்து வடிவத்திலே சொல்லாகவும், ஒலி வடிவத்திலே உச்சாடனமாகவும் இடம்பெறுகின்றன. இந்த இரண்டிற்குமிடையே வருவதுதான் சக்கரம் என அழைக்கப்படுகின்றது.

இதிலே சக்திக்குரிய தெய்வம் கோண, வட்டவடிவங்கள் கொண்ட அமைப்பான (Geometirical Diagram) வடிவத்தில் செய்யப்பட்டுள்ளது. மந்திரங்கள் மனனத்துக்குரியவையாக உள்ளே இடம்பெறும். யந்திரம் (சக்கரம்) வெளியே பூசைக்குரியதாக புறவழிபாடாக அமையும். விக்கிரக வழிபாட்டைக்காட்டிலும் சக்கர வழிபாடு, உருவ எல்லைகளைக் கடந்த ஒன்றாகக் கருதப்படுகின்றது. சக்கரம் என்பது மந்திரத்தைப் போலவே, தெய்வீக உருவை எண்ணத்தில் பதிக்க உதவுகின்றது.

அளவிலும், விரிவிலும் அடக்கமுடியாத மாபெரும் சக்தியை, அளவுபடுத்தி, பிரயோகம் செய்யக்கூடிய அமைப்பில், சக்தியின் அருளாசியை ஸ்ரீசக்கரம் அளிக்கின்றது. சக்தியை வழிபடுவோர் ஸ்ரீசக்கரவழிபாட்டை மேற்கொண்டு, சக்தியின் அருளைப் பெறுகின்றார்கள். பல நூறாண்டுகளுக்கு முன்பே ஆதிசங்கரர், ஸ்ரீசக்கரத்தை நிறுவி வழிபாடியற்றியுள்ளார். இவ்வாறான அருமை பெருமைகளைக் கொண்ட ஸ்ரீசக்கரத்தை, கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்திலுள்ள அம்பிகையான சிவகாமி அம்பாளின் அருகே பிரதிஷடை செய்து அனைவரும் அன்னையின் அருட்சக்தியைப் பெறுமாறு, திரு. அருணாசலம் பொன்னம்பல முதலியார் அவர்கள் அரும்பணி புரிந்துள்ளார்கள்.

திரு. அருணாசலம் பொன்னம்பலமுதலியார் அவர்கள் தனக்குப்பின்னும் இவ்வாலயம் தங்குதடையின்றி சிறப்பாக நடைபெறவேண்டும் என்ற பெருநோக்கில், பல திட்டங்களைச் செய்துவைத்தார், சைவசமயத்திலுள்ள ஆலய வழிபாட்டிலே சிவாலயங்களைப் பேணுவதென்பது சற்றுச் சிரமமானதாகவே தென்படுகின்றது. சிவாலயங்களில் அனைத்தத் திருவுருவங்களும் இடம்பெற்று, நித்திய, நைமித்திய வழிபாடுகள் நடைபெறுவது வழக்கம்.

*தொடரும்...*



- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்



# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

#51



"ஹிந்து" (T.G) ரி.ஜி வைத்தியநாதனின் திறனாய்வு தொடர்கிறது.

நான் குரல் என்று கூறும்பொழுது "ரத்தக்கண்ணீரில்" (1954) எம். ஆர் ராதா பேசியது போன்று கரகரத்த குரலில் அயர்ச்சியுடன் பேசுவதை சொல்லவில்லை. அவர் தொய்வு நோ-யை நடிப்பெனப் பிழையான அர்த்தம் செய்துவிட்டார்.

சிவாஜியின் கோடைமழை போன்ற சொற்பெருக்கு "மனோகரா" (1954) "வீரபாண்டிய கட்டபொம்மன்" (1959)ல் மிகைப்படுத்தப்பட்ட நடிப்பு அல்லது "கப்பலோட்டிய தமிழன்" (1961) காரிய நாயகனான நியாயவாதி வ உ சிதம்பரனார் நடித்தது போன்ற எதையுமே நான் குரலின் ஏற்ற இறக்கத்திற்கு உதாரணம் காட்ட மாட்டேன்.

(Yeats) யீற்ஸ் என்ற கவிஞனை மேற்கோள் காட்டுவதாயின் இவையாவற்றிலேயும் "கற்பனையின் ஏவலனாக உள்ளம் செயற்பட்டுள்ளது. இதே போன்றதே "சம்பூர்ண ராமாயணம்" (1958) திரைக்காவியமும். பொதுவா-கவே வேதாந்தியும், முகத்தில் இறுக்கம் காட்டும் "இராஜாஜியே" ராமாயணத்தில் சிவாஜியின் புயலையொத்த நடிப்பினைப் பார்த்து வியந்து, "நான் காவியத்துப் பரதனை பார்க்கவில்லை. சிவாஜியில் புரதனைக் கண்டேன்" எனக் கூறியுள்ளார் என்றாலும் அக்குரல் வளம் என்னை கவரவில்லை(?) இவையாவும் சிவாஜியின் முத்திரை குத்தப்பட்ட நடிப்பிற்கு உதாரணமாக அமைபவை. உடைந்துபோன கரகரத்த குரலிலே... டா...க்...ட...ர்.." எனத் "தெய்வமகனில்" (1969) ஓலமிடுவார். ஓரளவு நையாண்டியும், ஏமாற்றமும் கலந்து கீழ் ஸ்தாதியில் நாசியால் பேசும் "ஞானஒளி" (1972), வேறு பிரபலம் குறைந்த பல படங்களில் கண்ட சிவாஜி தான் நான் மனசார போற்றும் சிவாஜி ஆவார்.

"...சிவாஜியின் அண்மையில் வந்த படம் தேவர்மகன். இதில் அவர் நடிப்பு தலை சிறந்தது. அவர் அங்கே காணப்படுவதே பிரம்மிப்பூட்டுவதாகும். அவரது சுயமான இயற்கை நடிப்பினைப் பாதிப்பவையான சிருங்கார காட்சிகள். (அவரது மிக அற்புதமான நடிப்பினை "முதல் மரியாதை" 1985 இல் பதிவு செய்தது.)

கண் புருவங்களைத் தேவைக்கதிகமாக உயர்த்துதல், அபரிதமான கையசைவுகள் தேவையற்ற வறண்ட சிரிப்பு ஆகிய யாவும் அடக்கி வாசிக்கப்பட்டு உரம் தீட்டப்பட்ட மையால் ஒவ்வொரு காட்சியும் உணர்ச்சிப்பூர்வமானதாகவும், நிறைவானதாகவும் அமைந்தது. பாரதிராஜா சிவாஜியைத் தன் இஷ்டத்திற்குச் சரியாக பயன்படுத்தியுள்ளார்.

சிவாஜிக்கும் கமலுக்கும் இடையே ஏற்படும் நேரடிப் போராட்டம் பற்றி இங்கு நான் குறிப்பிட்டே ஆக வேண்டும். (The Water Front) "தி வாட்டர் பிரண்ட்" எனும் ஆங்கில திரைக்காவியத்தில் "மார்லன் பிராண்டோ" (Marlon Brando) விற்கும் "ஸ்ரெய்கர்" (Steiger) ற்கும் இடையே நடைபெற்றதை நினைவூட்டியது.

இயக்குனர் பரதனின் காட்சி நிகழ்வு சூழல்களும், மேடையேற்றமும் தத்ரூபமாய் அமைந்திருந்தன. சோனாவாரியாக மழை பின்புலத்திலே பொழிந்து கொண்டிருக்கத் தந்தைக்கும் மகனுக்குமிடையே நேரடியான போராட்டம் சிவாஜியினுடைய நடிப்புப்பாணி தந்தைக்குரிய ஆதிக்கமும் கவர்ச்சியும் பிரதிபலிக்கும் நடிப்பில் அவர் எல்லா நிலைகளையும் தாண்டி புதிய எல்லைகளையே வகுத்துள்ளார்!

கமலும் அவருக்கு ஈடாக செய்துள்ளார். இறந்தகாலம் நிகழ் காலத்தை எதிர் கொள்கிறது. வித்தியாசமான இரண்டு நடிப்புப் பாணிகள் கைகோர்த்துக் கொள்கின்றன. விளைவோ கிளர்ச்சியூட்டுகிறது.

மாயத்தேவரால் (நாசர் மிக நன்றாகச் செய்துள்ளார்) அவமானப்பட்ட சிவாஜி இறக்கின்ற காட்சி உண்மையிலேயே அற்புதமான காட்சி. பேரப்பிள்ளைகள் உடம்பை நீவி விட "போற்றிப் பாடடி பெண்ணே" எனும் பாட்டு வரிகள் துன்பச் சுமையுடன் ஒலிக்க சிவாஜி இறக்கின்ற காட்சி இன்னும் பல முறை பார்க்கவும் கேட்கவும் கூடிய நேர்த்தி மிக்கது. இப்பாடல் தொடர்ந்து வரவுள்ள காட்சியான சிவாஜியைத் தகனம் செய்யும் காட்சிக்குரிய ஒலிச்சேர்க்கை ஆதாரச் சுருதியாக-ிறது. என்றுமே நினைவில் ரீங்காரம் செய்யும் பாடல் ஒலியாகிறது. வருங்கால சந்ததியினர் நிச்சயமாகச் சிவாஜிக்கு முன், சிவாஜிக்குப் பின் என்று வரையறுத்துப் பேசுவார்கள் என்பது உண்மை!

இந்தியத் திரையுலகின் மூன்று குமார்கள் ஆன திலீப்குமார் - அசோக்குமார் - உத்தம்குமார் ஆகியோர் தற்காலிகமாக சிவாஜியின் பிரதேச ரீதியான புகழை அழித்து விட்டனர் என்பது உண்மையே!

ஆனால், இன்றைய சிவாஜி ஈடுஇணையற்றவராக உலக தரத்திலே "பால்முனி" (Paulmuni) யுடனோ, சாப்ளின் (Chaplin), கிரற்றோ கார்போ (Greata Garbo)வுடனோ ஒப்பிடக்கூடிய முதன்மை நிலையில் உள்ளவராக பரிணமித்துள்ளார்.
சிவாஜி அன்றும் இன்றும் தனித்தன்மையுடைய - தகமையுடைய முதன்மை நிலை நடிகர்!
"சிவாஜி கலைத் தேவதைகள் ஒன்பதில் ஏழாவது காவிய தேவதையான வீரத்திருமகன்".

சிவாஜியே! எமக்குப் பெருமை சேர்த்தமைக்காக உமக்கு எமது நன்றிகள்! கடந்த இரு வார இதழ்களிலும் பிரபல கலை விமர்சகர், திறனாய்வாளர் ஆகிய "ஹிந்து" ரி ஜி வைத்தியநாதன் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய சிவாஜி பற்றிய அவரின் பார்வைகளை, ஒப்புநோக்கை வார்த்தை பிசகாது தமிழாக்கம் செய்துள்ளோம்.

தமிழாக்கம் செய்ய உதவிய அமரர். முன்னை நாள் யாழ். தெல்லிப்பளை "மகாஜனா கல்லூரி" அதிபரும், கலா ரசிகருமான கனகசபாபதி ஐயாவுக்கு என்றும் எனது வணக்கமும், நன்றிகளும்! (அவரும் அமரராகி விட்டார்)
ஆரம்பத்தில் நான் குறிப்பிட்டது போன்று எப்படி திரு. வைத்தியநாதன் அவர்களுடைய சில பார்வைகளுடன் ஒத்துப்போக முடியவில்லையென்பது அவ்வப்போது வரும் தொலைபேசி முறைப்பாடுகளிலிருந்து தெளிவாயிற்று!

நடிகர் திலகம் அவர்களை ஆழமாக புரிந்து கொள்வதற்கு அவருடை-ய முதல் படமான "பராசக்தி"யே போதும்! விமர்சகர்களும், ஆய்வாளர்களும் சிவாஜியின், "அந்த நாள்", "திரும்பிப்பார்", "ரங்கோன் ராதா", "படிக்காதமேதை", "பாகப்பிரிவினை", "பாவ மன்னிப்பு", "பாலும் பழமும்", "பாச மலர்", "பார் மகளே பார்", "இரும்புத்திரை", "தில்லானா மோகனாம்பாள்", "மக்களைப் பெற்ற மகராசி" "வீரபாண்டிய கட்டபொம்மன்", "கப்பலோட்டிய தமிழன்", "திருவருட்செல்வர்", "நவராத்திரி", "ஆலயமணி", "ஆண்டவன் கட்டளை", "தெய்வப்பிறவி", "எங்கிருந்தோ வந்தாள்", "முதல்மரியாதை", "தெய்வமகன்", "தேவர்மகன்", "அமரதீபம்", "அன்னையின் ஆணை", "உத்தமபுத்திரன்", "எதிர்பாராதது", "சவா-லே சமாளி", "உயர்ந்த மனிதன்", "பெண்ணின் பெருமை", "மோட்டார் சுந்தரம் பிள்ளை", "எல்லாம் உனக்காக", "எங்க ஊர் ராஜா", "ராமன் எத்தனை ராமனடி", "நெஞ்சிருக்கும் வரை", "நீலவானம்", "இருமலர்கள்", "கை கொடுத்த தெய்வம்", "சாந்தி", "வியட்னாம் வீடு", "தங்கப்பதக்கம்", "காவல்தெய்வம்", "ராஜபார்ட் ரங்கதுரை", "அவன் தான் மனிதன்", "பாபு", "நவராத்திரி", "புதிய பறவை" ஆகிய படங்களை மீண்டும் மீண்டும் பார்ப்பது நல்லது.

அவ்வளவு படங்களும் சிவாஜியும் இயக்குனர்களும் இணைந்து இந்திய (தமிழ்) சினிமாவை புனிதப்படுத்திய திரைக்காவியங்களாகும்.

நடிகர் திலகத்தின் நடிப்பாற்றலும், கலைத்திறனும் ஒருமுகமாக எங்களை கவர்ந்து விட்டது என்ற நிலையிலிருந்து சற்று வேறுபடுத்திக் காட்டுவதும், இத்தொடரை முழுமைப்படுத்த உதவும் என்ற எண்ணத்திலேயே வைத்தியநாதனின் Hindu விமர்சனப் பார்வையை இங்கு பதிவு செய்துள்ளேன்.

இன்னும் சில விமர்சகர்கள் எம்மத்தியில் வாழலாம் எழுதலாம் பேசலாம். ஆனால் எந்த விமர்சகராலும் சிவாஜியைப் போற்றி எழுதாமல் ஒளிந்து கொள்ள முடியாது.

படைப்புக்கடவுளால் ஒரே ஒரு சிவாஜியைத் படைக்க முடியும். எனவே தான் கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக எங்கள் நடிப்பு இமயத்தருகில் எவரும் நெருங்க முடியவில்லை. வருகின்ற காலங்களில் மேலும் பலர் நடிகர் திலகம் பற்றியே எழுதுவதற்கும் - ஆய்வு செய்வதற்கும் முனைவார்கள்.

ஏனைய தலைவர்கள் - தளபதிகள் வேறு சில மின்மினிப் பூச்சிகள் கால நீரோட்டத்தில் மறக்கப்பட்டு விடுவார்கள். ஆனால் ஒரு உண்மையை கமலின் "ஹேராம்" மூலம் புரிந்து கொண்டேன். சிவாஜி அவர்களிடத்துப் புதைந்துள்ள



பாவிக்கபடாத திறமைகளை நமது கமல், தான் ஏற்கும் குணச்சித்திர பாத்திரங்கள் வழியாக வெளிக்கொண்டு வருகிறார்.

கமலுக்குள் ஒரு சிவாஜி ஒளிந்து கொண்டிருக்கிறார்!

இன்னும் சில தொடர்களுக்காக காத்திருங்கள்.

- வீணை மைந்தன்.

# இவ்வார ராசிபலன்

**25-06-2021 வெள்ளி தொடக்கம் 01-07-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** நன்மையான விஷயங்களை உண்மையாக சந்திக்கக்கூடிய நல்ல வாரம். சாதனை படைக்கும் நாள். நிர்வாகம் செலவுகள் கூடும். வாய்ப்புகள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத் தொழில் ஆதாயம் தரும். உடன் பிறப்புகளால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். மாருதி வழிபாடு மகிழ்ச்சியைத் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 9,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R




**ரிஷபம்:** மறுப்பே இல்லாத மாற்றங்கள் கிடைக்கக்கூடிய மகத்தான வாரம். பெருமிதம் நிறைந்த நாள். புதிய வாய்ப்புகளை எதிர்பார்க்கலாம். தனவரவில் தடங்கல் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு தரும். வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. விரும்பிய பொருள் சேரும். சுப காரியம் கைகூடும். சந்தோஷம் பெருகும். தனலட்சுமி வழிபாடு பணவரவு தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: தர்மதேவதை, அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**மிதுனம்:** நவகிரஹ அனுகிரஹம் கிடைக்கக்கூடிய நன்மையான வாரம். பாராட்டுக்கள் கூடும். அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புகள் கூடும். புதிய நட்பு உருவாகும். மனைவி உடல் நலம் பாதிக்கும் உறவினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் உருவாகும். இடமாற்றம் ஏற்படும். காரிய தாமதம் ஏற்படும். உத்தியோக அலைச்சல் உண்டு.
வழிபடவேண்டிய தெய்வம்: வழிவிடும் வனதேவதை, அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**கடகம்:** மனிதநேயம் மிகுதியாகக்கூடிய மகத்தான வாரம். பொருளாதாரம் உயரும். உஷ்ணம் அதிகரிக்கும். பொருளாதார உயர்வு ஏற்படும். காரியம் இழுபரியாகும். அரசு வழியில் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். நண்பர்கள் கவனம் தேவை. கல்விச் செலவு உண்டு. உறவினர் வருகை உண்டு. உலோகத் தொழில் உயர்வு தரும். இடமாற்றம் ஏற்படும். குடும்ப பாசம் அதிகரிக்கும். முயற்சி பலன் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ராஜயோக ரங்கநாதர், அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**சிம்மம்:** பொன்னும், பொருளும் சேரக்கக்கூடிய பொன்னான வாரம். நன்மைகள் பெருகும் நாள். கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. பாராட்டு பெருகும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. புதிய தொழில் அமையும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். வீண் விரயம் அதிகமாகும். பெருமைகள் கூடும். திறமைகள் அதிகமாகும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். மன சஞ்சலம் மறையும்.
வழிபடவேண்டிய தெய்வம்: காளிதுர்க்காதேவி, அதிர்ஷ்ட எண்: 4,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J




**கன்னி:** தார்மீக எண்ணங்கள் உதயமாககூடிய உன்னதமான வாரம். தந்திரமாக செயல்படுவீர்கள். கலைத் தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்த நிலை ஏற்படும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். வாகனச் செலவு உண்டு. வருமானத் தடை உண்டு. வாய்ச் சொல் பலன் தரும். புதிய வாய்ப்புத் தேடிவரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும. இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். எதிர்பார்ப்புகள் குறையும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கைகொடுக்கும் காமதேனு, அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M




**துலாம்:** மனதில் மகிழ்ச்சி பெருகக்கூடிய மகத்தான வாரம். இனிப்பான செய்திகள் வரும். தோல்விகள் விலகும். கட்டிட தொழில் லாபம் தரும். பொருள் சேதம் தரும். கல்வி மேன்மை தரும். முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழைய கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தகாரியம் நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு நிர்வாகத் திறமை அதிகரிக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: காமாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,1,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**விருச்சிகம்:** குறிப்பான முன்னேற்றம் கிடைக்கக்கூடிய சிறப்பான வாரம். சச்சரவுகள் அகலும் நாள். மாணவர் திறமை பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். மற்றவரால் நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புகள் கூடி வரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். எதிர்ப்புகள் அடங்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அழகுநாச்சியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,F





**தனுசு:** உண்மையான நன்மைகளை சந்திக்கக்கூடிய உறுதியான வாரம். பணிவான பேச்சுக்கள் தேவை. மன உற்சாகம் கூடும். பணவரவு சேரும். உடல் உபாதை தோன்றும். சுபச் செய்தி வரும். வியாபார விரயம் கூடும். உத்தியோக கவனம் தேவை. கடன் தொல்லை குறையும். உடன் பிறந்தவரால் ஆதாயம் உண்டு. கூட்டுத் தொழில் மோசடி ஏற்படும். இடையூறுகள் அதிகமாகும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றி தரும். பயணம் ஆதாயம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**மகரம்:** உங்களால் வரவும் உறவுகளால் செலவும் அதிகரிக்கக்கூடிய வாரம். பயணம் தவிர்ப்பது நல்லது. பெரிய மனிதர்களை சந்திப்பிர்கள். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். காரியம் கை கூடும். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. எந்திர தொழிலால் லாபம் உண்டு. குடும்ப மேன்மை தரும். ஆரோக்கியம்த சீராகும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். நல்லோர் நட்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பால் முனீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**கும்பம்:** முத்துக்கு முத்தான பிள்ளைகளால் சொத்து சேரக்கூடிய அற்புத வாரம். போட்டிகள் உருவாகும் நாள். தாய் வழி உறவால் நன்மை உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். சகோதரிகளால் சஞ்சலம் ஏற்படும். காதல் எண்ணம் நிறைவேறும். கலை ஆர்வம் கூடும். தனவரவில் மேன்மை கூடும். நிதி நிலைமை சீராகும். பண வரவு உண்டு. பற்றாக்குறை நீங்கும். பிரச்சனைகள் குறையும். உடல் நலனில் கவனம் தேவை. கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மேட்டுப்பாளையம் பத்ரகாளியம்மன்
அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**மீனம்:** பிதா வழி உறவுகளால் பெருமை சேரக்கூடிய அருமையான வாரம். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கமிஷன் தொழில் கவனம் தேவை. கடன் சுமை குறையும். பூர்வீக சொத்து வந்து சேரும். வழக்குகள் வெற்றி தரும். வீண் வம்பு விலகும். நோய் நொடிகள் அகலும். சேய் நலம் கூடும். சேமிப்பு உயரும். நிதானம் தேவை. உத்தியோகத்தில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: மும்மாரி முத்தாலம்மன், அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J

---

# காலம் கடந்தும் வாழ்பவர் கவிஞர் கண்ணதாசனே!



கவிஞர் என்றால் கண்ணதாசனே!
காலத்தை வென்று நிற்பவர்
வையம் உள்ளவரை வாழிய வாழியவே!!
கண்ணதாசன் என்னும் கவிஞன் பிறந்தான்
காலத்தை வென்று நிற்கும் கவிதை புனைந்தான்
எண்ணத்தில் இருந்ததெல்லாம் எழுத்தில் வடித்தான்
ஏதோ சிலநேரம் அழுதும் முடித்தான்

இலக்கியத்தில் தோய்ந்து ஆய்ந்து கவிதை படைத்தான்
எளியதமிழில் அதனை எல்லோர்க்கும் கொடுத்தான்
பலாப்பழம் போன்ற நல்லதமிழ்ப் பாடலை
பக்குவமாய்ச் சுளையாக எடுத்துக்
கொடுத்தான்

உண்ண உண்ணத் தெவிட்டாத இனிய சுவைதான்!
உணர உணர வியப்புதரும் தத்துவங்களே!
திரைப்பாடல் தெவிட்டாத தேன்தமிழ்ப் பாடலே!
தேனினும் இனிய தமிழ்க்கவிதை அமுதமே!

மனவாசம் வனவாசம் எழுதி வைத்தான்
மற்றவரைக் காட்டிலும் உண்மை உரைத்தான்
யாரேனும் எனைப்பற்றி ஏதேனும் நினைப்பரென
நூலேனும் மறைக்காகாமல் நூலினுள் எழுதிவைத்தான்

அனுபவிப் பதற்காகவே இறைவன் படைத்தான்
அனுபவித்து வாழவே அவனும் நினைத்தான்
அன்பெனிலும் வம்பெனிலும் அதனதன் எல்லையே
முரணான சிந்தனைகள் கொண்ட கவிஞன்

முற்றிலும் பொய்முகம் காட்டாத மனிதன்
ஒருகையில் மதுவும் ஒருகையில் மாதென
உலகை அனுபவித்து மகிழ நினைத்தான்
போலியான பொய்த்தோற்றம் அவனுக் கில்லை

போற்றுதலும் தூற்றுதலும்அதனதன் எல்லை
காலம் கடந்தும் வாழ்ந்து இருப்பான்
கம்பன் பாரதி வரிசையில் பார்க்கும்
கவிஞன் என்றால் கண்ண தாசனே!

- **அ. தமிழரசி** (28-6-2020)

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**

- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**

- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# Carefirst Family Health Team

## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com












# உதயன்

25 வெள்ளி விழா 2021 UTHAYAN




உதயம் 1316 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 25, 2021

## 16 பேர் விடுதலை ஒரு சிறிய ஆரம்பம்.. அது தொடர வேண்டும்

*சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்-லண்டன்)*



இலங்கை அரசு 16 தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்துள்ளதாக செய்திகள் வந்த போது, மக்களிடையே நிறத்தாலோ, இனத்தாலோ, மொழியாலோ வேற்றுமை இல்லை என்று கூறியமார்ட்டின் லூதர் கிங்கின் நினைவு வந்ததைத் தவிர்க்க முடியவில்லை.

தமிழ்க் கைதிகளின் விடுதலைக்குரிய நன்மதிப்பு வேறு எவருக்கும் சென்று விடக்கூடாது என்பதில் கவனமாகச் செயற்பட்ட கோட்டாபாய- மகிந்த சகோதரர்கள், அந்தப் பெயரை நாமலுக்கு பரிசாக வழங்கியுள்ளதை இங்கே கவனிக்க வேண்டும். மகிந்தாவின் புதல்வர் நாமல் ராஜபக்சாவினால் தான் இந்த தமிழ்க் கைதிகள் விடுதலை சாத்தியமாகியுள்ளது என்பதுதான் தற்போது அரசாங்கத்தால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

*(தொடர்ச்சி, உள்ளே 9ம் பக்கத்தில்)*

## அற்புதமான அறுவைச் சிகிச்சை நிபுணர் இளம் செழிய பல்லவன் மீண்டும் யாழ் சென்றார்




விவேகம் நிறைந்தவரும் அற்புதமான அறுவைச் சிகிச்சை நிபுணர் என்ற பெயரை இலங்கையில் மட்டுமல்ல உலகெங்கும் பெற்றவருமான வைத்தியர் இளம்செழிய பல்லவன் மீண்டும் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

*(தொடர்ச்சி, உள்ளே 2ம் பக்கத்தில்)*

## மக்களைக் காப்பாற்றவே ரணில் அவசரமாக பாராளுமன்றம் வருகின்றாராம்

### ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர் தெரிவிப்பு



“தற்போதைய அரசாங்கம் மக்களின் நம்பிக்கையை இழந்து விட்டது. எனினும் அரசாங்கத்தில் உள்ளவர்களுக்கு இதனால் ஒரு நஸ்டமும் இல்லை. . ஆனால் மக்களுக்கே எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது. அரசாங்கத்தோடு இணைந்து பணியாற்றவே ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பாராளுமன்றம் வருகின்றார் என்று சிலர் விசமத்தனமான பிரச்சாரம் செய்கின்றார்கள். ஆனால் எமது தலைவர் அனைத்தும் அறிந்தவர். அவருக்கு தற்போது என்ன நடந்துகொண்டு இருக்கின்றது என்பதும் புரியும். ஒரு மூழ்கப்போகும் கப்பலாக அவருக்கு தெரிகின்ற கப்பலில் அவர் ஏன் ஏறப்போகின்றார்? ஆனால் மக்களைக் காப்பாற்றவே அவர் மீண்டும் வருகின்றார்.

(தொடர்ச்சி, **www.uthayannews.ca** என்னும் எமது இணையத்தளத்தில்)




## 16 வயதில் பட்டம் பெற்று தனது 23வது வயதில் கலாநிதிப் பட்டம் பெறவுள்ள ரொறன்ரோ பல்கலைக் கழக பட்டதாரி விவியன்



16 வயதில் விஞ்ஞானப் பட்டம் பெற்று தனது 23 வயதில் கலாநிதிப் பட்டம் பெறுவதற்குரிய அனுமதியைப் பெற்றுள்ள ரொறன்ரோ பல்கலைக் கழக பட்டதாரி மாணவியான விவியனை பாராட்டும் வகையில் பட்டமளிப்பு வைபவத்தில் முக்கியமானவராக கணிக்கப்பெற்ற காட்சிகள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன. ரொறன்ரோ பல்கலைக்கழகத்தைப் பொறுத்தளவில் குறைந்தது 1979 ஆம் ஆண்டிலிருந்து கலை மற்றும் அறிவியல் பீடத்தில் பட்டம் பெற்ற இளைய மாணவி என்ற புகழாரம் விவியனுக்கு கிட்டியுள்ளது பயன்பாட்டு நோயெதிர்ப்புத் துறையில் முதுகலைப் படிப்பை இதே பல்கலைக் கழகத்தில் தொடர்வதற்கு அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

“எனது குறைந்த வயதை பல்கலைக் கழகத்தில் யாரும் கவனிக்கவில்லை. ஆச்சரியம் என்னவென்றால் சில நேரங்களில், நான் கூட என்ன வயதை மறந்துவிடுகிறேன்,” என்று விவியன் கூறினார்.
பிறின்ஸ் எட்வேர்ட் தீவுகள் மாகாணத்தில் 2 ஆம் வகுப்பில் கற்றுக்கொண்டிருந்த போது தனக்கு வகுப்பறையில் இருப்பதே விருப்பம் இல்லாத ஒன்றாக இருந்தது என்றும் பின்னர் ஆசிரியர்கள் பெற்றோர் ஆகியோரின் வற்புறுத்தல் ஆகியவைதான் பாடசாலைக்கு தொடர்ந்து செல்ல வழி வகுத்தன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். பாடசாலைக்கு செல்ல மறுத்து வீட்டிலேயே இருந்த தன்னை, ஒரு தடவை அவரது வகுப்பாசிரியரும் பாடசாலையின் உதவி அதிபரும் தன் வீட்டுக்கு வந்து தன்னை பாடசாலைக்கு வரும்படி வற்புறுத்திய நாட்களை தனது பட்டமளிப்பு வைபவம் நடைபெற்ற நாளன்று விவியன் தனது பேராசிரியர்களோடு பகிர்ந்து கொண்டார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பாடசாலைக்கு செல்வதை விரும்பாத நான் ஒரு பிடிவாதமிக்க சிறு குழந்தையாக இருந்தேன். ஆனால் இன்றைய நாள் எனக்கு பல பொறுப்புக்களை வழங்கியுள்ளது. நான் ஒரு மிக நீண்ட வரிசையில் நின்றே வந்துள்ளேன். என்னை இறுதிவரையும் வழி நடத்திய என் தாயார் சகோதரிகள் பெண்களை நான் போற்றுகின்றேன். அவர்கள் தலைசிறந்தவர்கள் என்பதை நான் இப்போது உணர்கின்றேன் என்றும் விவியன் தனது விரிவுரையாளர்களோடு கருத்துக்களைப் பகிர்ந்துகொண்ட போது உணர்ச்சி வசப்பட்டவராக காணப்பட்டார் எனவும் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## “அண்ணாவின் தொடர்ச்சி கலைஞர் கலைஞரின் தொடர்ச்சி நான்”

### – சட்டமன்றத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் முழக்கம்

**(எமது சென்னைச் செய்தியாள்)**



தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் கடந்த புதனன்று பதிலுரை ஆற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:-
“நீதிக்கட்சி வழியில் தற்போது திமுக மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ளது. 1920-ம் ஆண்டு முதல் 1937-ம் ஆண்டு வரை 17 ஆண்டுகள் நீதிக்கட்சி ஆட்சி செய்தது. எங்களின் ஆட்சி நீதிக்கட்சியின் தொடர்ச்சி என்பதை பெருமையுடன் கூறுகிறேன்.நீதிக்கட்சியின் தொடர்ச்சி பேரறிஞர் அண்ணா. அண்ணாவின் தொடர்ச்சி கலைஞர். கலைஞரின் தொடர்ச்சி நானும், இந்த அரசும். தமிழினத்தை நம்மால் தான் வளர்ச்சி பெற வைக்கமுடியும் என மக்கள் நம்மை ஆட்சியில் அமரவைத்துள்ளார்கள்.

(தொடர்ச்சி: **www.uthayannews.ca** எனும் எமது இணையத்தளத்தில்)